190377

சிந்தாமணி

JL
Y15 m2 ; 1N24
N26.2.9
190377

சிந்

தமிழ் நாட்டுப் பெ
மாதத்தோண்டு வெளிவ[redacted]

பத்திராதிபர்

மலர் II.] [redacted] ப்ய—

[redacted] றிக்கை

1926 [redacted] மாதத்திலிருந்து மூன்றும் ஆ[redacted]ங்கமாவதால் வெ
மாதத்தி[redacted]ராது நேரிட்டுவிட்ட
தாமதம் சரி[redacted]வதற்காக மே, ஜூன்
மாத இதழ்களை[redacted]யும் ஒன்று சேர்த்து வெ
போகிறோம். [redacted] ஒவ்வொரு ஆங்கில மாத
தேதியிலும் மு[redacted]லவே சரிவரப் பத்திரிகை வெ
வரும்.

மானேஜர்.

JL
Y15-2,N24
N26.2.9
190371

All Rights Reserved.

'ecretary to the Government
'er date 30-4-1926.

ough six issues of "CHIN-
olume, and am gratified to
to keep up the standard
. It is a high class monthly,
ntended to raise the status
cially, and emancipate them
pernicious customs which pass for
the tyranny of monstrous opinions
to hold them in perpetual bondage.
conceptions are exposed, through the
. quiet, inoffensive manner. I am sure
journal, no woman, for that matter none
satisfied with the present state of Hindu
to be inspired to make an effort, however
ouse in order. I am indeed thankful that one
, eminently qualified for the task by her scholar-
nil and Sanskrit, has come forward to and set her
noving abuses which cloud the vision of our women and
ejudical to their own interests. Every Tamil home should
of the journal. I heartily wish the scholarly Editor success
and timely endeavour to reform our society.

சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

				ரூ.	அ.	பை.
மகா ராஜாக்களுக்கு	...	...	...	50	0	0
ஜமீந்தார்களுக்கு	...	...	...	30	0	0
போஷகர்களுக்கு	...	...		25	0	0
நன்கொடையாளருக்கு...		...	...	15	0	0
அபிமானிகளுக்கு	...	...	...	10	0	0
சந்தாதார்க்கு	...	...		5	0	0
வெளி நாடு	...	...	...	6	0	0

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

சுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளி வந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும் சுயநலப்பிரியர்களின் ஆர்ப்பாட்டச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல்நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத் திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்,

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற்கண்ட ஆறு புத்தகங்களடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதாரர்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதாரர்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாப்பூர், சென்னை.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

SOME OPINIONS ON CHINTHAMANI.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simplicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras*.

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini*.

Some Select Opinions on "Chinthamani."

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ஞு ஆகஸ்டுமீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்ரவரிமீ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செளிமாமேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், சகோதரியாரால் எழுதப்பட்ட கலைமணிபோன்ற சில சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செளிமாமேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. அவ் வாறு பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூபா 2—8—0க்கு அனுப்பப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

சிந்தாமணி யபிமானிகளுக்கு.

உள்நாட்டுச் சந்தாதாரில் சிலர் இதுவரை முதல் வருஷ சந்தாவை அனுப்பாமலும் இது விஷயமாகப் பல கடிதங்கள் கிடைத்தும் சற்றும் கவனியாது இருப்பதாலும் இண்டிமேஷன் பெற்றும் வி. பி. யைத் திருப்பி விடுவதாலும் நஷ்டமும் பத்திரிகையின் நிர்வாகத்தில் மெத்த சிரமமும் ஏற்படுகின்றது. அயல் நாட்டிலுள்ள சந்தாதார்களுக்குக் கடிதமெழுதுவதற்கு அதிகச் செலவும் வி. பி. யனுப்புவதற்கு சிறிதும் சாத்தியமில்லாமையுமாக இருப்பதால் இதுவரை யனுப்பாத அயல்நாட்டு சந்தாதாரர்கள் தாமதப்படுத்தாது தங்கள் சந்தாவை யனுப்பிவிடுவார்களென்று நம்பி யிருக்கிறேன். ஆகையால் உள்நாடு வெளிநாடு சந்தாதார் அனைவரும் தயவுசெய்து இனியும் சிறிதும் தாமதப்படுத்தாது தம் சந்தாவை மணியார்டர் செய்யவேண்டுமாயும் இதுவரை முதல் வருஷ சந்தாவையுமனுப்பாமலிருப்பவர்கள் அத்துடன் இரண்டாவது வருஷ சந்தாவையும் சேர்த்து அனுப்பினால் மெத்த சமயோபகாரமாயிருக்குமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கியைப்பற்றிக் கடிதமூலமும் பத்திரிகையில் அறிக்கைகள் மூலமும் பிரஸ்தாபிக்கவேண்டிய சிரமத்தை 'சிந்தாமணி' யபிமானிகள் இனிமேலாயினும் எனக்கு ஏற்படுத்தாமலிருக்கவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கி, பலகடிதங்கள் எழுதுதல், அனுப்பும் வி. பி. திருப்பி வருவது இவைகளினால் எனக்கேற்படக்கூடிய வீண் சிரமத்தையும் பெருத்த நஷ்டத்தையும் இனிமேல் எனக்கு ஏற்படுத்தாமல் மறு தபாலில் சந்தாவை மணியார்டர் செய்து சிந்தாமணி செவ்வனே நடைபெறுவதற்கு உதவி புரிவார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்,
சகோதரி வி. பாலம்மாள்.
பத்திராதிபர்.

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani.'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபனையுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸ்ரீபோதராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாக தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீர்களென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

உ

சிவமயம்.

ஸ்ரீ முருகன் றுணை.

சிந்தாமணியின் மதிப்புரை.

என் சகோதரியாராகிய வி. பாலாம்பிகை யம்மையாருக்கு செந்தமிழ்ச் சைவத் தொண்டன் மணிவாசகச் சரணாலயன் எழுதியது.

அம்மா! தேசத்திற்கு உண்மைத் தொண்டுபுரியும் அடியேனுக்கொரு பேருவகையாயிற்று.

அம்மா! நமது தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமை கண்டு அவர்கட்குத் தனியே யுழைக்க முன்வருவாரொருவரையுங் காணாமல் மிகத் துன்புற்றிவ்வமயத்தில்.

எம்மம்மையாராகிய மங்கையர்க்கரசியாரைப் போன்று, எம்மன்னையாராகிய ஔவைப் பிராட்டியாரைப் போன்று, அழகிய மாதாவாகிய தெவரியம்மையாரைப் போன்று, எமக்கும் எம் இறைவர்க்கும் இவ்வுலகுக்கும் அம்மையாராகிய காரைக்காலம்மையாரைப் போன்று தாங்கள் உலகத்திற்குழைக்க முன்வந்திருப்பதுவே அப்பேருவகைக்குக் காரணம்.

உலகத்தில் அறியாமை மலிந்த ஆடவர்கள் மாட்டிச் சிக்கி அடிமையாகி எந்திரங்களைப் போன்று இடையறாது உழைத்தேங்கும் எம் சகோதரிகளாகிய பெண்மணிகள் துன்பம் ஒழிந்து விட்டது. அம்மா!

அம்மா! மேலும் அவர்களின் எவ்வித வருமைகளையும் நீக்கத் துணிந்து தாங்கள் உதவி வருஞ் சிந்தாமணியே அவர்களுக்குப் பண்டைக் காலத்தைப்போல, எல்லாச் செல்வங்களையு மளித்துக் களிப்புண்டாக்கு மென்பதற்கையமின்று.

அம்மா! புரந்தரன் நவநிதியம் பெற்றான், அளகைக்கோன் எக்கலங்களையும் எப்பொருள்களையும் ஒருங்களிக்கக் கூடியதாகிய சிந்தாமணியைப் பெற்றின்புற்றான். அம்முறையே தாங்கள் உதவிவரும் சிந்தாமணியானது நம்நாட்டுப் பெண்மணிகளுக்குப் பல நன்மையளிக்கத் தக்கதாயிற்று என்பதொருதலை.

அம்மா! தங்கள் சிந்தாமணியின் அபிப்பிராயம் மேற்கண்ட அளவுதான் என்றால் எழுத முடியாது. நம்நாட்டுப் பெண்மணிகளுக்கு மிகையாகாமலும் குறைவில்லாமலும் பலனை யளிக்கும்படி செந்தமிழ் நாட்டிறையாகிய முருகக்கடவுள் பேரருள்புரிவாராக.

அம்மா! அச்சிந்தாமணியானது எக்காலும் நற்சிந்தாமணியாயிருக்க அதற்கொரு வாழ்த்துக் கூறுவது மிகையாகும். ஆயினும், அச்சிந்தாமணியானது இவ்வுலகின்கண்ணே நீடூழி யுலாவிப்போங்கி வாழக்கடவதாக. தாங்களும் தங்கள் நன் முயற்சியும் நீடூழி நீடூழி யோங்கி வளர்வீர்களாக.

அம்மா! தங்கள் பேருதவியால் நஞ்செந்தமிழ்நாட்டுப் பெண்மணிகளெல்லாம் பெருநன்மை யடைவார்களாக.

அம்மா! அடியேன் புரியும் உண்மைத் தொண்டினையும் இருபங்காக்கி ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இரு திறத்தினருக்கும் அளிப்பேனாக.

நம்முடைய தொண்டினிமித்தம் ஏற்படும் நன்முயற்சிகளெல்லாம் விழைந்தவண்ணமே முட்டின்றி முடியுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பன் முன்னின்று நடத்துவிப்பாராக.

இப்படிக்கு,

க. மணிவாசகச் சரணாலயன்,
தமிழர் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கலாசாலையின் அறக்கடவுணிலையம்,
சண்முகநாதபுரம், குன்னக்குடி, இராமநாதபுரம் ஜில்லா,
குரோதன ஆண்டு பங்குனித் திங்கள் 22-ம் தேதி.

CHINTHAMANI

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. II. April 1926. **No. 9.**

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.

(*All Rights reserved by the Authoress*)

सुबोधराम चरिते

॥ अयोध्याकाण्डः ॥

प्रेषितस्तेन रामेण भरतो नगरं प्रति ।
गृहीत्वा पादुके रामं प्रणम्य स विनिर्ययौ ॥ ३४ ॥

तेन அந்த ராமரால் प्रेषितः அனுப்பப்பட்ட सः அந்த भरतः பரதன் पादुके பாதுகைகளை गृहीत्वा பெற்றுக்கொண்டு रामं ஸ்ரீராமரை प्रणम्य நமஸ்கரித்து नगरं प्रति நகரைக் குறித்து विनिर्ययौ சென்றார் ॥ ३४ ॥

नन्दिग्रामे स भरतो जटाधारी सवल्कलः ।
पादुकान्यस्तराज्यश्रीः रामं ध्यायन्समावसत ॥ ३५ ॥

जटाधारी சடை தரித்தவரும் सवल्कलः மரவுரி தரித்தவரும் पादुकान्यस्तराज्यश्रीः பாதுகையிடம் வைக்கப்பெற்ற ராஜ்யலக்ஷ்மி யுள்ளவரும் ஆகிய सः அந்த भरतः பரதன் रामं ஸ்ரீராமரை ध्यायन् (सन्) தியானித்தவராக नन्दिग्रामे நந்திக் கிராமத்தில் समावसत् வசித்தார் ॥ ३५ ॥

अत्रेर्महर्षेरावासं गत्वा विश्रम्य राघवः ।
प्रतस्थे दण्डकारण्यं नक्तञ्चरगणैर्वृतम् ॥ ३६ ॥

राघवः ஸ்ரீராமர் महर्षेः மகா ரிஷியான अत्रेः அத்திரியின் आवासं ஆச்ரமத்தை गत्वा சென்று विश्रम्य சிரம பரிகாரம் செய்துகொண்டு नक्तञ्चरगणैः ராக்ஷஸர்களால் वृतं சூழப்பெற்ற दण्डकारण्यं தண்டகா வனத்தை (குறித்து) प्रतस्थे புறப்பட்டார் ॥ ३६ ॥

(To be continued.)

ஸ்ரீராமஜயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II. | அக்ஷய—சித்திரை. | இதழ் 9.

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

(ஸ்ரீமான் நா. கோவிந்தசாமி பண்டிதர்)

(452-ம் பக்கத் தொடர்ச்சி.)

தென்னவன் தொண்டர் பதந்தொழுதேயென்றன்
தீமை யெலாம் பொறுத்தாளுகென
அன்னவர் தில்லை யடையப் பணித்தலென்
றாசன்பால் விடை கொண்டடைந்தார். (98)

நடன ராஜனடி பணிந்தாரவர்
நல்லிசைப் பாடல் பலமொழிந்தார்
கடினமாகிய புத்த சமயத்தைக்
கண்டித்து வேதவிதியில் நின்றார். (99)

ஊமையைப் புத்தர்முன் பேசவைத்தார் கண்ட
உலகம் யாவையும் வாழ வைத்தார்
சீமையிலுள்ளவர் தேவன் திருவருட்
செந்தமிழ் வாணரென்றே மொழிந்தார். (100

190377.

அந்தணராகியே வந்த மஹேச்வரன்
அம்புயப் பாதம்பணிந்து தொண்டர்
தந்திருப்பாடலைக் கூறிடவே யந்தத்
தற்பரன் கேட்டுமிக மகிழ்ந்தே. (101)
சுத்தத் தமிழதை வாசகம் கோவையாத்
தொகுத்துத் தங்கையினா லெழுதிச்
சிற்றம்பல முடையானெனக் கையொப்பம்
தெரித்துச் சிற்சபை மேவினர்காண். (102)
அந்தத் திருமுறை சிற்சபைதன்னிலே
அமர்ந்திருத்தலைக் கண்ட மெய்யர்
இந்தத் தமிழ்மறைக் கென்னபொருளென
ஈசன் தொழும்பரைக் கேட்டனரால். (103)
அம்பலக்கூத்தன் இவற்றின் பொருளென
அன்பருங் காட்டியே சிற்சபையில்
உம்பருங்காணுத சோதியின் மேவினர்
உற்றபிறவிப் பயனிதுவே. (104)
தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலர்
தோன்றலிற் றோன்றாமை நன்றெனவே
சான்றவராந் தேவர் சாற்றியருளிய
தக்ககுறளுக்குச் சான்றிவரும். (105)
மந்திரமாமறைத் தில்லைவாழந்தணர்
மகிழ மாணிக்க வாசகர்தாம்
செந்தமிழின்பொருள் சிவமேயாமென்ற
சிறப்பறியுங்கள் சிற்றிடையீர். (106)
பாரும் விண்ணுலகும் பாதலமும் பெரும்
பரிமளமதை வீசி யென்றும்
சீருஞ் சிறப்புந் திருவுந் தருமெங்கள்
செந்தமிழென்றே நீர் பாடுங்கடி. (107)
பத்தர் திருவாய் மலர்ந்தருள் செந்தமிழ்ப்
பாடலைப் பண்ணொடு பாடிடவே
அத்தன் மலையும் உருகுமென்றால் அதன்
அற்புதஞ் சொல்லவும் வேண்டுமோதான். (108)
தெண்டிரை சூழ்புவி தோன்றிய நாள்முதல்
செந்தமிழ் நாடுஞ் சிறந்ததென்றே
தண்டமிழ் வாணர்கள் யாவரும் அறியச்
சாற்றிய பாடல்கள் சான்றெனவே. (109)

இந்தியப் பெண்களின் பெருமை.

பத்திராதிபர்.

நவநாகரிக முதிர்ச்சியின் பயனாக நம்மில் சிலருக்கு ஏற்பட்டுள்ள உணர்ச்சி பலவற்றில் இந்தியப் பெண்மணிகள் அடிமை வாழ்க்கை யிலாழ்ந்து கிடப்பவர்கள் என்பது ஒன்றாம். இவ்வுணர்ச்சி ஆடவர்களிடையே மட்டுமின்றி பெண்களிடையேயும் பரவிவிடுமோ வென்று அஞ்சவும் இடமுண்டாகின்றது. அன்னிய நாட்டுப் பெண்மணிகளின் நிலைமையையும் ஆசார அனுஷ்டானங்களையும் இந்தியப் பெண்மணிகளின் நடவடிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் இந்தியப் பெண்கள் விவாகமென்ற சங்கிலியால் கட்டுண்டு அடுப்பங்கரை என்ற சிறைச்சாலையில் அடைபட்டுக் குடும்பக் காரியங்களாகின்ற கொடிய வேலைகளைப் புரிந்து வாழ்நாள் முழுவதையும் அடிமை வாழ்க்கைக் குள்ளாக்கிக் கண்ணீரும் கம்பலையுமாகக்காலங் கழித்து வருகின்றார்கள் என்று சிலர் நினைத்து வருந்துவதுடன் இந்தியப் பெண்களின் நிலைமையை இந்திய ஆடவர்களுக்குச் சமானமானதாகச் சீர்திருத்தவும் நினைக்கின்றனர். ஆட்டைச் சுமந்து செல்லும் ஒருவன் வழியிடையே சிலர் ‘நாயை ஏன் சுமந்து போகிறாய்’ என்று வினவியதில் சந்தேகமுற்றுத் தோளின் மீதுள்ள ஆட்டை விடுத்துச் சென்றான் என்ற பழங் கதைக்கிணங்க இந்தியப் பெண்களுக்கு சுதந்திரமில்லை, சமத்துவமில்லை, தேகதிடனில்லை, கல்வி யறிவில்லை, பாலிய விவாகத்தால் இவர்களுக்கேற்படும் கஷ்டம் அதிகம், ஆடவர்கள் பெண்களை அடிமைகளாகப் பாவிக்கின்றனர் என்று ஆங்காங்கு பிரஸ்தாபிக்கப் படுவதைக் கேட்குங்கால் நமது பெண்மணிகள் சில சமயங்களில் தங்களது இத்தகைய தாழ்ந்த நிலையை நினைந்து அதைரியப்படவும் இடமுண்டாவது சகஜந்தானே. தற்காலம் இந்தியப் பெண்களின் நிலைமையில் சில முன்னேற்றமும் சீர்திருத்தமும் செய்தல் அவசியமாயின் அது எத்தகையதாயிருக்க வேண்டுமென்பதே நமது ஜனங்களிடையே உண்டாயிருக்கும் ஒரு பெருத்த பிரசினையாகவிருக்கிறது. பெண்களின் முன்னேற்றத்திற்கு மூலாதாரமாகவிருக்கும் கல்விப் பயிற்சி எவ்விதமிருக்க வேண்டுமென்றும் பலர் வினவுகின்றனர். பெண்களின் தேகவலிமையை எவ்விதம் அபிவிருத்தி செய்வது, அனேகமாகப் பிரசவ காலத்தில் ஏற்படும் அகால மரணத்தின் நின்றும் அவர்களை எவ்விதம் மீட்பது என்றும் பலர் சிந்திக்கின்றனர். பெண்கள் கவுரவிக்கத் தக்கவர்கள்தானா, அவர்களை நாம் இப்பொழுது மதித்துஅன்புடன்நடத்துகின்றோமா, இல்லான் என்ற பதம் இல்லறத்தைச் சிறப்பாக நடத்துவதற்கான கருத்துடன் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதா என்றிவ்வாறெல்லாம் சிலர் தமக்குள்ளேயே சந்தேகங் கொண்டிருப்பதாயும் நினைக்க இடமுண்டாயிருக்கின்றது. ஸ்திரீகள் என்றால் உயர்ந்தவனாகக் கருதப்படும் ஆடவனுக்கு அடிமைப்பட்டு வாழக்கூடியவர்தான் என்று சிலர் பேசுவதுடன் இதற்கு ஆதாரமாக இவர்கள் கூறும் உதாரணம் என்னவென்றால் முற்காலத்தில் பெண்கள் அடுப்பங்கரை வேலைகளுண்டு அவர்களுண்டு என்று சாதுக்களாய் அடங்கிக் கிடந்தார்கள் என்கிறார்கள். இன்னம் சிறிது அதிகமாகப் பரிகசிக்க விரும்பின் ‘பெண்களுக்கென்ன தெரியும்; எவை தெரிந்தாலென்ன தெரியா விட்டாலென்ன? பெட்டைக் கோழி முட்டையிடும்; இவ்வளவுதானே’ என்றுரைக்கின்றார்கள். பெண்கள் சாதாரணமாக வீட்டு வேலைகளைச் செய்வதும் மக்களைப் பெற்று

வளர்ப்பதும் தாழ்வுற்ற பெருத்த மூடச்செயல்களாகவும் இவைகளுக்காகப் பெண்கள் கல்விப் பயிற்சி பெறல் அனுவசிய மென்றும் ஆடவர் நினைப்பாராகில் ஆடவரின் ஆதரணையிலிருக்கும் பெண்கள் தாங்கள் இத்தகைய மூட வாழ்க்கையினின்றும் தப்பித்து ஆடவர் மதிக்குமாறு அவர்க்குச்சரியான நிலைமையைப் பெறல் அவசியமெனக் கருதவும் இடமுண்டாகிறதன்றே. பெண்கள் வீட்டுவேலை செய்யவும் பிள்ளைப்பெறவும் மாத்திரம் பிறந்தவர்களென்றும், இவை பெண்களுக்கேற்ற தாழ்ந்த நிலையைக் குறிப்பிடுகின்றனவென்றும், இதைக் காட்டிலும் பெண்கள் வேறு தெரிந்து கொள்ளக்கூடிய புத்தி சூக்ஷ்மத்தையோ உரிமையையோ அணுவளவும் பெற்றிருக்கவில்லை என்றும் சிலர் பேசுவது பற்றிச் சிறிது ஆராய்வோம். பெண்கள் செய்யும் வீட்டு வேலைகள் ஆடவர்கள் செய்யும் தற்கால உத்தியோகங்களைப் போல் அவ்வளவு சுலபமானதன்று. ஒரே படிப்பைப் படித்து ஒரே உத்தியோகத்தை ஆடவர் செய்வதுபோலல்லாது காலதேசவர்த்தமானங்களுக் கேற்றவாறில் பெண்கள் தங்கள் கிருக கிருத்தியங்களை நிறைவேற்றும் புத்தி கூர்மையைப் படைத்திருக்கின்றார்கள். ஒரு மேலதிகாரியின் கீழ்ப்படிந்து ஆடவர் நடப்பின் கணவன், மாமி, மாமன், நாத்தி, பெரியோர் முதலிய பலருக்கும் அடங்கி நடக்கக் கூடிய பொறுப்பையும் பொறுமையையும் பெண்கள் பெற்றிருக்கின்றார்கள். பிரஜைகளின் நிர்வாக விஷயத்தில் ஆடவர் உத்தியோகத்தில் அமருகின்றனர். அத்தகைய பிரஜைகளை மெத்த கவனத்துடன் வளர்த்து நற்பிரஜைகளுக்கும் ஊழியத்தைப் பெண்கள் செய்கின்றனர். ஆடவர்களுக்கு ஐம்பது வயதிற்குமேல் ஒருகால் உண்டாக்கக்கூடிய ஞான வைராக்கியங்கள் பெண்களிடையே வாலிப வயதிலிருந்தே அமைந்திருக்கின்றன. எவ்வழியிலேனும் பொருள் தேடும் சாமர்த்தியத்தை ஆடவர் பெற்றிருந்தாலும் அதை வைத்துக் குடித்தனம்செய்து வேளைக்கு உண்டியிட்டுக் உதவக் கூடிய தன்மை பெண்களிடையேதானிருக்கின்றது. சமூக ஊழியம் சிறந்ததென்றும் சில சமயங்களில் தானும் அதைச் செய்ய முற்படப் போவதாகவும் ஆடவர் பெருமைப் பேசிக்கொள்வாராயின் அத்தகைய சமூக ஊழியத்தைப் பெண்கள் குடும்ப நிர்வாகத்தின் மூலமாகச் செய்யும் பெருந்தகைமை பெற்றிருக்கின்றார்கள். நாட்டிற்குச் சிறிது தொண்டு செய்யப்போவதாய் ஆடவர் பெருமை பேசிக்கொண்டால் வீட்டிற்குத் தொண்டு செய்வதையே பெண்கள் விரதமாகக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பொறுமையை ஆடவர் கைகொண்டால் வாழ் நாளில் தமக்கு ஏற்படக் கூடிய எத்தகைய கஷ்ட நிஷ்டூரங்களையும் பொறுக்கும் பொறுமையையே பெண்கள் பூஷணமாகக் கொண்டிருக்கிறார்கள். சுய நலத்தியாகமும் பிறர் நலத்திற்குழைத்தலும், கற்பு என்ற கட்டுக் காவலுக்கடங்குதலும், அபகீர்த்திக்குக் கனவிலும் ஆளாகிவிடக் கூடாதென்ற அடக்கமும், சாந்த சுபாவமும், சஞ்சலமற்ற மனப்போக்கும் கொண்டிருத்தலே இந்தியப் பெண்களின் பெருமையை இந்நாட்டிலும் பிற நாட்டிலும் உள்ள மேதாவிகள் புகழ்ந்துரைக்கக் கூடியதா யிருக்கின்றது. இதுவே இந்தியப் பெண்களின் பெருமையாகும். இப்பெருமையை வளர்ப்பதற்கும் இதர வழிகளில் பெண்கள் ஈடு படுவதற்குமான நியாயங்களைப் வேறொரு சமயம் ஆராய்வோம்.

579

பெண்களுக்கு எத்தகைய கல்வி வேண்டும் ?

(ஸ்ரீ லாலா லஜபதிராய் அவர்கள் லாஹோர் வைதிக கன்யா பாடசாலையின் வருடோற்சவக் கொண்டாட்டத்தில் பேசியது)

இச்சமயம் தேச அபிவிருத்திக்கான பல விஷயங்களுக்குப் பெண்களின் உதவி வேண்டியிருக்கிறது. பிறர் நம்மைப் பயங்காளிகள் என்று அவமதிக்காத ஒப்பற்ற சக்தி நமக்குத் தேவை. இதற்குப் பெண்மக்களின் பரிபூரண சகாயமின்றி முடியாது. பெண்மக்களுக்கு நல் உணவு ஆடை ஆபரணம் முதலிய சர்வாதிகாரமும் இருக்கின்றது. மற்றும் அவர்கள் சுகமாய் வாழ்ந்து உத்தம சந்தானங்களையடைதல் அவர்களின் தர்மமாகும் இதனால் அவர்கள் உற்சாகத்துடன் தம் தேசத்திற்கும் தம் தேசமக்களுக்கும் ஊழியம் புரியக்கூடியவர்கள் ஆவார்கள். ஆனால் தற்சமயம் பெண்கள் ஆடையாபரணங்களில் பொருளை விசேஷமாகச் செலவழித்து வருகிறார்களன்றி நல் உணவு, ஆரோக்கியம் இவைகளில் அதிகம் கவனத்தைச் செலுத்துவதில்லை, இவ்வாறு செய்வது சரியன்று. பெண்கள் நல் ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து கொள்ளட்டும். ஆனால் இவைகளைக் காட்டிலும் நல்ல ஆகாரமும் ஆரோக்கியமான தேக நிலையும் முக்கிய மென்பதை யுணர்ந்து கொள்ளலவசியம். பெண்களுக்கு எத்தகைய அழகும் வன்மையும் வேண்டுமோ அத்தகையவை நமது தேசத்தியப் பெண்களுக்கும் இருக்கவேண்டு மென்பதே எனது கோறிக்கை. ஆனால் அன்னியர் அவர்களைக் கண்ணெடுத்தும் பாராமலிருக்கும்படி செய்யக்கூடிய சக்தியும் சாமர்த்தியமும் அவர்களிடமிருக்கவேண்டும். 'நாங்கள் பாரத தேசத்திற்கு யோகினிகளாவோம்' என்று நீங்கள் சற்றுமுன் பாடினீர்கள். ஆனால் எனது மனத்தோற்றத்தில் இச்சமயம் தேசத்திற்கு ஜான்ஸி இராணி, லக்ஷ்மீபாயி, அகல்யாபாயி இவர்கள் போன்ற திடச்சித்தமும் திடசரீரமும் பெற்று விளங்கும் வீரத்தாய்மார்கள் தான் தேவையாக விருக்கின்றனர்.

பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கக் கூடாதென்பவரின் கூட்டத்தில் நான் சேர்ந்தவன் அன்று. தற்சமயம் தேவை ஒரு விதமானதாகவே இருக்கவில்லை. ஆங்கிலம் கற்பதினால் கெடுதலொன்றுமில்லை; கற்கலாம். ஆனால் அது மெத்த அவசியமானதென்றென்பது கிடையாது. ஆங்கிலம் கற்காமலே நாம் நமது வீட்டு வேலைகளை நடத்த முடியும். நாம் ஆங்கிலம் கற்றாலும் கற்காமலிருப்பினும் அதனிடத்துள்ள கெடுதிகள் மட்டும்நம்மை யணுகிவிடாது எட்ட விருப்போம். நமது வாழ்க்கையை ஆடம்பரமற்ற தர்மநியாயவழியில் நடத்தல் வேண்டும். பெண்களுக்கு அவர்களின் வாழ் நாளில் எத்தகைய நிலமைகள் ஏற்படக் கூடுமோ அவைகளுக்கேற்ற வழியில் தான் கல்வி கற்பித்தல் வேண்டும். மனித வாழ்க்கையில் ஒரு சமயம் இவையும் போராதவையாயிருக்கின்றன. சில சமயம் பெண்களுக்கு ஆடவர்களின் பராக்கிரமமும் ஆடவர்க்குப் பெண்களின் அமைதியும் அவசியமாயிருக்கின்றதானாலும் பெண்மக்களுக்கேற்ற கல்வி மட்டும் அவர்களுக்கு அவசியம் கற்பிக்கப்பட வேண்டும். பெண்களுக்குக் கொஞ்ச தூரம் தேசபாஷையைக் கற்பித்தல் போதாது. எத்தப்

பெண்கள் இராமாயணத்தையும்பாரதத்தையும் படித்தறிய சக்தியற்றவர்களோ அவர்களின் கல்விப் பயிற்சியானது முற்றுபெற்றதாயிராமற் போவதுடன் ஹானியையும் விளைவிப்பதாக ஏற்படும். இராமாயண மகாபாரதங்களில் நமது தாய்மார்களும் சகோதரிகளும் அறிந்து கொள்ளவேண்டிய பல அரிய பெரிய விஷயங்கள் அமைந்திருக்கின்றன. பெண்மக்களுக்குக் குறைந்தபக்ஷம் இராமாயாணம் பாரதம் இவைகளைப்படித்து அதனாலுண்டாகும் ஆனந்தத்தையும் ஆன்மலாபத்தையும் பெறுவதற்கு வேண்டிய தேசபாஷைப் பயிற்சியாவது அவசியம் இருக்கவேண்டும்.

(சாஸ்வதி)

குழந்தை வளர்த்தல்.

(சம்பதப்யுதயம்.)

1. குழந்தைகளை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

2. சுத்தமான உடைகளையே போடவேண்டும்.

3. வேளைக்குச் சரியாக ஆகாரமளிக்க வேண்டும்.

4. சுலபமாய் ஜீரணிக்கக் கூடிய தின்பண்டங்களைக் கொடுக்கவேண்டும்.

5. அஜீரண முண்டாக்கக் கூடியதும் பழையதும் பக்குவமாயிராதவைகளைக் கொடுக்கக்கூடாது.

6. கண்டவைகளை எல்லாம் தின்னக் கொடுத்து குழந்தைகளுக்கு சபலமுண்டாக்கக்கூடாது.

7. குழந்தைக்குத் தேவையான அங்க சாதன மிருக்கும்படிக்கும் தக்கவாறு தூங்கும்படிக்கும் செய்தல் அவசியம்.

8. நிர்மலமான காற்றும் நல்ல வெளிச்சமும் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

9. பிடிவாதம் பிடித்தல் அழுதல் முதலிய கெட்ட வழிகளைக் கைகொள்ள விடாது கவனிக்கவேண்டும்.

10. துர்ப்பாஷைகளையவர்கள் முன்னிலையில் உபயோகிக்கக் கூடாது. கெட்ட காரியங்கள் அவர்கள் கண்களிலும் படக்கூடாது.

11. குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு சந்தோஷமாக பதிலளிக்கவேண்டும். அவைகளை அதட்டுதல் வைதல் அடித்தல் இவைகளைச் செய்யவே கூடாது.

12. இளமையில் குழந்தைகளின் இந்திரியங்கள் சுறுசுறுப்புடனிருக்கின்றன. பின்பற்றும் சக்தியும் அதிகம்; ஆராய்ந்து பார்க்கும் சக்தியும் அதிகம். அவைகளை பலப்படுத்துவதற்குத் தக்கபடி அவர்களை நாம் திருத்திவரல் வேண்டும்.

13. அழகிய பதார்த்தங்களையும் இயற்கையழகையும் குழந்தைகள் கண்களில் படச் செய்யவேண்டும்.

14. சத்தியம், தயவு, பரோபகாரம், மரியாதை, சுத்தம், பிகாகாரம் போன்ற நற்குணங்கள் இளமையிலேயே விளங்குமாகையால் அச்சமயம் நாம் அவைகளைக் கவனித்து இயற்கையாயுள்ள நற்குணங்களை அபிவிருத்தி செய்யாது விட்டுவிட்டால பிறகு குழந்தைகள் நமது மேன் பார்வைக்குள் அடங்கமாட்டா. அன்னை தந்தைகளிடம் பக்தி, உடன் பிறந்தாரிடத்தன்பு, பெரியோரிடமும் கடவுளிடமும் பக்தி இவைகளெல்லாம் இளமையிலிருந்து படிய வேண்டு மாகையால் இளமையிலேயே நற்பழக்கங்களைப் பயிற்றுவித்தல பெற்றோரின் முக்கிய கடமையாகும்.

(தொடரும்.)

அன்பிற்கு உயிர்ப்பரிசு

(இனியதோர் சிறு கதை)

ஸ்ரீமதி உருக்குமணி அம்மாள்.

I

'தண்ணிரும் காவிரி தார் வேந்தனுஞ் சோழன்
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே"

என்ற பெருமைக்குரிய சோழமண்டலத்தில் "வெண்ணிவாயில்" என்ற நாட்டில், கோல் கோணாது அரசு புரிந்து குடிகளைக் கண்ணெனப்பப் பாதுகாத்துவரும் அரசன் பெயர் "வீரமார்த்தாண்டன்." இவன் தன் பெயருக்கேற்பப் பகைவர் புறமுதுகாட்டி ஓட்டமெடுக்கும்படி வெற்றிகொள்வதில் வீரப்பிரதாபன். கல்வியில் வல்லான். கருணையிற் சிறந்தவன். கங்காதரன்பால் பெருகிய அன்புடையவன். அவனது அரிய சாணாவிர்தங்களில் பதிந்த மனதுடைய இவனுக்குப் புத்திரனின்றி ஏகபுத்திரி யொருத்தியே குலம் விளக்கத்தோன்றினள்; இவள் பெயர் விஜயகேசரி.

அன்றொருநாள் சுபக்கிரகங்கள் ஒன்று கூடி மானவர்க்குக் கிடைத்தற்கரிய சுபமுகூர்த்த நன்னாளாயிருந்தது. விஜயகேசரிக்கு அச்சுபதினத்தில் மகுடாபிஷேகம் மங்களகரமாய் நிறைவேறிற்று. நகரமனைத்தும் நன்றாக அலங்கரிக்கப்பட்டு காண்பார் கண்களுக்கு நல்விருந்தென விளங்கிக் கொண்டிருந்தது. விடிய வெகுநாழிகையிலிருந்தே அரண்மனையிலும், நகர்ப்புறங்களிலும், நாற்சந்திகளிலும் மங்களவாத்தியங்கள் வானம் செவிடுபடும்படி வெகுமுழக்கமாய் ஒலித்துக்கொண்டிருந்தன. சிற்றரசர்களும்,ஜமீன்தாரர்களும்,மற்றுமுள்ள பிரபுக்களும் ஏராளமாய் விஜயமாயிருந்தனர் ஆனால், இம்மகுடாபிஷேக வைபவத்திற்கு வாராமல் நின்றுவிட்டவன் மதனகாந்தன் ஒருவன்மட்டுமே. சௌரியவானும், புருஷச்ரேஷ்டனுமாகிய இவன் பெண்ணரசியின் பரிபாலனத்தின்கீழ் அடிமையென வாழச் சம்மதியாதவன். அந்தக் காரணத்தினால் இவன் அம்மகுடாபிஷேகத்தை மதியாமல் அவள் விஷயத்தில் பொறாமை மேற்கொண்டிருந்தான்.

மகுடாபிஷேக வைபவம் வெகு மாட்சிமையாக நடைபெற்று முடிந்தபின், மதனகாந்தன் விஜயகேசரியின்மீது போர்புரியப் படைகூட்டி "வெண்ணிவாயிலை" அடுத்தனன். அது கண்ட வீரமாதாகிய விஜயகேசரியும் போருடைதரித்து, பல்வித யுத்தாயுதங்களைக் கைக்கொண்டு வீரமிக்க தனது பெரும்படைகளை முன்போக்கினள்.

யுத்தகளத்தில் அச்வாரூடளாகிப்பல்விதப் படைக்கலங்களைக்கைக்கொண்ட இவள் நீலநிறக்கற்களால் பொற்கொல்லரைக் கொண்டு தயாரிக்கப்பெற்ற கைதேர்ந்த விலையுயர்ந்த கிரீடந்தரித்து, 'மூர்த்திகரித்த துர்க்காதேவியே இக்கோலம் புனைந்து போர்க்கெழுந்தனளோ!' என்று கண்டோர் வியக்கும்படி சைந்நியங்களை நடாத்திக்கொண்டுவந்தனள். இவளது போர்க்கோலத்தையும், அஞ்சா நெஞ்சுபடைத்த ஆண்மையையும் கண்ட பகைவர் அழுக்காறு கொண்டு இவளைக் காற்றுவாய்ப்பட்ட இலவம் பஞ்சுபோல் பறக்கடித்து இவள் சேனைகளைச் சின்னா பின்னப்படுத்தி வெற்றிகொள்ளவேண்டுமென வீரவாதம் பேசி வில்லெடுத்தனர். "வாய்படைத்தோர் வழிக்குதவார்" என்பதுபோல் முடிவில் அவர்களனைவரும் விஜயகேசரியின் சுடுசரத்துக்காற்றாது மடிந்தும், மறைந்

தும் மாயமாயினர். மதனகாந்தன் சிறைப்பட்டனன். விஜயகேசரி வெற்றிக்கொடி நாட்டி வாகை சூடினள். படையினர் ஆர்ப்பரித்தனர்.

II

விஜயகேசரி சிம்மாசனத்தில் வீற்றிருந்து விசாரணை தொடங்கினள். பொற்சங்கிலிகளினால் கைகளுக்கு விலங்கிடப்பட்ட மதனகாந்தனை அரண்மனையிலுள்ள நியாயமண்டபத்திற்கு அழைத்து வந்தனர். ஆனால், அவன் முன்போல் பெருமிதமான செருக்கின்றி முகஞ்சோர்ந்து நடைகுன்றித் தலை குனிந்தவண்ணம் அரசி எதிரில் நின்றிருந்தனன்.

அரசி அங்ஙனம் நின்றிருந்தானை நோக்கி "நீர்தானா மதனகாந்தன் என்பவர்?" என்று வினவினள்.

மதனகாந்தன் :—ஆம். நான்தான் மதனகாந்தன்.

அரசி :—மெத்தசந்தோஷம். நீர் காரணமின்றித் திடீரென நம் மீது போர்க்கெழுந்த நினைவென்ன?

மதனகாந்தன் :—எனது நினைவு யாதோவிருக்கலாம். அது இப்பொழுது கூறுவதற்கில்லை. எனது போர்க்கோலத்திற்கு முக்கியகாரணம், உம்மை வெல்வது, தவறின் கொல்வது என்பதே. நீர் வீரமாதாயின் எனது கொடுஞ்செய்கைக்கு உடனே விசாரணைதொடங்கி நியாயம் வழங்குக.

அரசி :—நீர் விரும்பியவாறு விரைவில் நியாயம் வழங்காத வரையில் நான் வீரமாதாகமாட்டேனா? உமது கருத்து அதுவாயின் விசாரணை இன்றில்லை. எனக்குச் சௌகரியம் நேர்ந்த போது கவனிக்கின்றேன் என்று கூறி சபைகலைத்தனள். மதனகாந்தன் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

III

சிறைச்சாலை. நிரம்பிய இருட்டு; ஆனால், மதனகாந்தன் கைகளுக்குமட்டும் பொன் விலங்கு பூட்டப்படவில்லை. இடுப்புக்கு மட்டும் வெகு கெட்டியாய்ச் சங்கலி பிணைக்கப்பட்டிருந்தது. பாதி யிரவு கழிந்தும் அவன் உறங்காது சிறைக்கூடத்தில் நின்ற வண்ணமாய் எதனையோ குறித்து யோசனையிலாழ்ந்திருக்க இத்தருணத்தில் இருவர் சேடியர் தீபம் ஏந்தி வழிகாட்டிவர வீரமாதாகிய விஜயகேசரி சிறைச்சாலையினுட் பிரவேசித்தனள்.

மதனகாந்தன் திடீரெனச் சிறைக்கூடத்தில் விளக்கொளியையும், சேடியர்வரவையுங்கண்டு 'யாரது' என்று கேட்டுக்கொண்டிருக்கையிலேயே விஜயகேசரியும் சமீபித்தனள். அது கண்டதும், தன்னுள் "விஜயகேசரியே வருகின்றனளே? காரணம் யாதாயிருக்கலாம்? இருக்கட்டும் பார்ப்போம்" என்று அவாக்கொண்டு, அகத்தால் நொந்து முகத்தால் அவளுக்கு அரசிக்குரிய மரியாதையைக் கபடமாகச் செலுத்தினான்.

அரசி :—ஒரு அரசியினிடத்துச் சிறையிலிருக்கும் கைதி நடந்துகொள்ளவேண்டிய மரியாதை இதுதானா?

மதனகாந்தன் "மரணத்தின் குகை வாசலில் நின்று மானத்திற்கஞ்சி உயிர்விடத் துணிந்து கொண்டிருக்கிறவனிடத்து மரியாதையை கோருகின்றவர் யாவராயிருக்கவேண்டும்?" என்றனன்.

விஜயகேசரி தன்னுடன் தொடர்ந்து வந்த சேடியர்களை நோக்கி "நீங்கள் உங்கள் கைகளில் வைத்துக்கொண்டிருக்கிறதீபங்களைத் தரையில் வைத்து விட்டு வெளியிற் செல்லுங்கள்" என்று திரும்பவும், "வேண்டாம் வேண்டாம். இதோ நானும் உங்களோடுகூட வருகிறேன்" என்று மதனகாந்தனைப்

பார்த்து "உம்மை விடுதலை செய்திருக்கிறேன். நீர் என்னை வென்றுவிட்டீர்" என்று கூறித் தனது மிருதுவான அழகிய கைகளினாலே அவனைப் பிணிக்கப்பட்டிருந்த பொற்சங்கிலியை அவிழ்த்தெறிந்தனள். மதனகாந்தன் அரசிக்கு வந்தனமளிக்காதும் ஏறிட்டும் பாராது வெகு அலக்ஷிய பாவத்துடன் வெளியிற் சென்றான். இதுகண்டு விஜயகேசரி மூர்ச்சையடைந்தனள். சேடியர் உபசரித்துச் சாந்தப்படுத்தி அரசியை அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றனர்.

IV

வீரமாதாகிய விஜயகேசரி வியாதிவாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்தனள். அது காரணத்தினால், வயோதிக அமைச்சர் அரண்மனைக் காரியத்தில் அதிகாரங் கொண்டிருந்தனர். ஆனால் இன்றைக்கு இராஜசபையில் எவ்வித விசேஷமும் நடைபெறவில்லை. விஜயகேசரியால் பிரசுரஞ்செய்யப்பட்டிருந்த திருமுகத்தை மாத்திரம் கொலுக் கூடத்தில் வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இராஜ்யபாரம் எவர்க்கு வழங்கப்படுகின்றதென்பது யாரும் தெரிந்து கொள்ளமுடியாத பரம இரகசியமாயிருந்தது. சற்றுநேரத்திற்குப்பின் விஜயகேசரியின் உத்திரவின்படி சேடியொருத்தி பொன்னாலாகிய அழகிய பெட்டியொன்றில் இராஜவிளம்பரத்தை வைத்து அதன் மீது உயர்ந்த மகமல் போர்வை போர்த்துக் கௌரவமாய் மூடி மிக்க வணக்கமாய் மந்திரியின் திருமுன்னர் கொண்டு வந்து வைத்தனள். அரண்மனையின் கொலுக் கூடத்திலிருந்தாரனைவரும் இராஜ விளம்பரத்திலுள்ள விஷயத்தைக் கேட்பதற்காக மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். மங்கள வாத்தியத்தின் பேரொலி வான முகட்டை எட்டியது. யாவரும் எழுந்து சிரம் வணங்கி வணக்கமாய் நின்றனர். ஆயினும் இராஜ்யபீடம் யாருக்கு வழங்கப்படுகிறதோ என்ற எண்ணம்மட்டும் அங்குள்ளார் மனத்தை அலைத்துக்கொண்டிருந்தது. அத்தருணத்தில் அமைச்சர் எழுந்து கம்பீரமான தொனியில் இராஜ சாஸனத்தை விளக்கமாக வாசித்து இறுதியில் "மதனகாந்தனே புகாரின் இராஜ சிம்மாசனத்தை அலங்கரிக்கத் தகுதி வாய்ந்தவன். ஆனதனால் அவனுக்கு இராஜ மரியாதைக்குரிய வந்தனத்தை முறைப்படிச் செலுத்துகிறேன். நீங்களும் செலுத்துங்கள்" என்று கூறித் தமது ஆசனத்தில் அமர்ந்தனர்.

தேன் கூட்டைச் சுற்றிக்கொண்டிருக்கிற தேனீக்கள் ஏகமாய் ஒன்று கூடி ரீங்காரம் செய்து ரோதனம் செய்வது போல் கொலுக்கூடத்திலிருந்தா ரனைவரும் ஒரே முகமாய்ப் பெருந்தொனியில் ஆரவாரஞ்செய்தனர்.

V

மதனகாந்தன் மீண்டும் புகார் நகரின் மீது படை யெடுக்கும் நினைவில் அதற்கு வேண்டிய சூழ்ச்சியின்பொருட்டுத் தனது அந்தரங்க சேனாபதனுடன் மந்திராலோசனை சபையில் யோசித்துக் கொண்டிருந்தனன். அச்சமயத்தில் புகாரின் இராணியாகிய வீரகேசரியின் குதிரைவீரன் ஒருவன் அரண்மனை வாசலில் வந்திருக்கின்றானென்று மதனகாந்தனுக்கு அவனது மெய்க் காப்பாளர் அறிவித்தனர்: அது கேட்ட அரசன் அவனை உள்ளே அழைத்து வருமாறு ஆணையிட்டனன். அவனும் அங்ஙனமே அரண்மனையினுள் பிரவேசித்து அரசனுக்கு வந்தனஞ்செலுத்தி நின்றனன்.

அரசன் அவனது வந்தனத்தை யேற்று, வந்த காரியம் யாதென வினவினன். தூதன் மந்திரியனுப்பிய மகாராணியின் இராஜ சாஸனத்தை மதனகாந்தனின் சமூகத்தில் வணக்கமாகச் சமர்ப்பித்தனன். மதனகாந்தன்

அதனை எடுத்து நிதானமாய் வாசித்துக் கருத்தை யறிந்தனன். களி கொண்டானில்லை. அவன் மலர்ந்த வதனம் சற்று தளர்ந்து காட்டியது.

பின்னர் தூதன், "அரசே! சாமந்த பிரபுக்களுடன் ஒன்று கூடி அமைச்சர் பத்து நாட்களில் சமுகம் சார்ந்து தேவரீரை அரசமரியாதைகளுடன் அழைத்துக்கொண்டு புகார் நகருக்கு எழுந்தருளி இராஜ சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்வர். இச்சுபச்செய்தியை முன்னதாக அறிவிக்கவே நானிங்கு வந்தது. இனி எனக்கு உத்தரவு கொடுங்கள். சென்று வருகிறேன்" என்றனன். அரசனும் செலவு கொடுக்க அவன் திரும்பினன்.

VI

வீரகேசரியாகிய அரசபெருமாட்டி படுக்கையினின்றும் எழுந்திருக்கவேயில்லை. மனோவியாதியால் அவளது மிருதுவான அழகிய மேனி எழில் குன்றி வாட்டமுற்றது. செந்தாமரையன்ன திருமுகம் பொலிவிழந்து மிக மெலிந்தது; வனப்பென்பது எங்கோ ஓடி மறைந்தது. அரசி வேற்றுருவாயினள். வசந்த ருதுவின் இறுதிக்காலத்தில் கொம்புகளினின்றும் உதிர்வதற்குத் தயாராயிருக்கும் குலாபி புஷ்பத்தைப்போல் அரசியின் மனத்திலிருந்த எண்ணங்களனைத்தும் நசித்துப் பாழாய்ப்போயின. ஆனால் ஒன்று மாத்திரம் மீந்திருந்தது. அதாவது—அவளது ஆருயிர். என்னே! மனோவியாதியின் வலிமை! இறுதியாக அவள் நோய்வாய்ப் பட்டபடி படுக்கையிலேயிருந்து தனது அந்தரங்கத் தாதியும், உண்மைத் தோழியுமாகிய மோகனத்தை விளித்து! 'சகி! இன்னும் பட்டாபிஷேகத்திற்கு எத்தனை நாட்களிருக்கின்றன?' என்று கேட்டனள். பதிலாகத் தோழி இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன என்றனள். அச்சொல் காதில் விழுவதற்கு முன் விஜயகேசரி தீர்க்க சுவாசம் விட்டு மூர்ச்சையாயினள். அந்தோ! அம்மூர்ச்சையே பிராண மூர்ச்சையாய் நேர்ந்தது. தேகாத்தியந்தமும் குளிர்ந்து சில்லென்றாயிற்று. சிறிது சிறிதாகப் பிராண நாடியும் அடங்கிற்று. சாப்பறையின் தொனி கருணாஸ்வரத்துடன் அரண்மனை வெளியில் கோஷிக்க, வெள்ளை வஸ்திரந்தரித்த விருத்த வேதியர் தோன்றி மரணச் சடங்குகளை அரசமரியாதைக்கேற்பச் சீராய்ச் செய்து முடித்தனர்.

VII

இச்செய்தி சோநாட்டில் காட்டுத்தீபோல் பரவி அரசனது செவிக்கு மெட்டியது. மதனகாந்தன் அச்சமயம் தனது சித்திர விலாஸ மண்டபத்திலிருந்து அங்குள்ள சுவர்களில் அழகாக வரிசைபெறத் தொங்கவிடப்பட்டிருந்த பலதேச அரசர்களின் திருவுருவங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். இறுதியில், சுவற்றின் கோடியில் திவ்வியமான திரைச்சீலையினால் நன்றாக மூடப்பட்டிருந்த உருவப்படமொன்று இவனது எண்ணத்தைக் கவர்ந்தது. 'இவ்வுருவம் யாருடையதா யிருக்கலாம்; பார்ப்போம்' என்று கருதி அப்படத்தின் அருகணைந்து அத்திரைச் சீலையை நீக்கினன். ஆ! இதுவென்ன அதிசயம்! அந்த வீர மாதாகிய விஜயகேசரியின் திருவுருவமாயிருந்தது. அவளது கோமளமேனி, அழகமைந்த அங்கங்கள், அன்றலர்ந்த தாமரையன்ன திருமுகம், நீலோற்பல விழிகள், பவள வாய், முத்துக்கோர்வை நிகர்த்த பல்வரிசைகள், ஒருகோடி பொன்னுக்கு மேலுமுயர்ந்த புன் சிரிப்பு—பிறை போன்ற நெற்றி—நீண்ட கேசராசிகள்—நீலாம்பரம்—இளந்தோள்கள் — மெல்லிய நீண்ட கரங்கள்—ஆகியவைகள் அவன் மனத்தை

விகசிக்கச்செய்தன. வியந்த சிந்தையனாய் "அந்தோ! காட்டிற்கெரித்த நிலவு யாதோர் பிரயோஜனத்தையும் அடையாமல் வீணாய்ப் போவது போல், இவளது அழகின் நவனனைத்தும் அநியாயமாய் மண்ணுக்கிரையாய்ப்போவது போற்றெரிகிறதே! அந்தோ! நான் நினைப்பதும்—எனக்குத் திடீரெனத்தோன்றுவதுமாகிய இக்காட்சி உண்மைதானா? உண்மையாயின் மிகவும் இரங்குகின்றேன்." என்று தன்னுட் கூறிக்கொண்டு பின்னும் ஊன்றிய கருத்துடன் மனத்தை ஒருவழிப்படுத்திச் சித்திரம்போல் அசைவற்று நின்று தேக திருஷ்டியாய்க் கூர்ந்த பார்வையில் அவ்வுருவத்தையே பார்த்துக்கொண்டிருந்து, ஏதோ உண்மையறிந்தவன்போல் பெரு மூச்சு விட்டுப் பெருந்துயரத்திலாழ்ந்து முடிவில் "லாவண்ய நிலயமாகிய இத்திருவுருவம் இனி இங்கிருத்தல் உசிதமன்று. இதுவைத்தற் கேற்ற இடம் வேறு. அது என்னுடைய மதன கேளிவிலாஸ மாளிகையேயாம்" என்று கூறி அருகிருந்தாரைக் கூவி அப்படத்தைக் கீழிறக்குமாறு செய்து யாரிடமுங்கொடாது தானே தனது மார்பகத்துத்தாங்கிக் கொண்டு அங்குநின்றும் அப்பாற் சென்றனன்.

மாசி நிலா யாதோர் மருவுமின்றி வெள்ளிய அமிர்த கலசம்போல் வெகு துல்லியமாய்ப் பிரகாசித்து வான மண்டலத்தை அழகு படுத்திக்கொண்டிருந்தது. ஆனால், சற்று நாழிகைக்குள் பயங்கரமான கடிய காற்று அலைமோதி வீச வாரம்பித்தது. எனினும் சோர்தலைவன் மதனகாந்தனின் இராஜ சபையில் எள்ளிட இடமின்றி ஜனத்திரள் நிறைந்து அரசன்வரவை வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால், அரசன் வந்தானில்லை. இராஜ பெருமாட்டி விஜய கேசரியின் திருவுருவமமைந்த சித்திரப்படத்தைத் தன் மடி மீது வைத்துக்கொண்டு கூர்மையும் கருக்குமுடைய தனது உடைவாளால் மதனகாந்தன் தனது மார்பைப் பிளந்துகொண்டு அதனின்றும் பிரவகிக்கின்ற ரத்ததாரைகளைத் தனதுமடியகத்து வைத்துக்கொண்டிருக்கிற அப்படத்தின் மார்பின்மீது சொரிந்துகொண்டிருந்தனன். சற்று தூரத்தில் ஒதுங்கி நின்று கொண்டிருந்த அரசனது அந்தரங்க மெய்க்காப்பாளன் அரசனது செயலுக்குத் துணுக்குற்று யாதுந் தோன்றாது மெய்மறந்து அசைவற்று நின்றனன். அரசனது ஆருயிரும் அந்தரத்தில் மறைந்தது. விஷயங் கேட்டாரனைவரும் வியந்தனர். என்னே! அரசனது உத்தம அன்பு!—பிரேமையின் பிரவாகம்!

"அன்பின் வழிய துயிர் நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

எனப் பலவாறு பேசிப் பிரிந்தனர்.

முற்றிற்று.

நமது பத்திரிகையில் கொஞ்சங் கொஞ்சமாக அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் சுபோத ராம சரிதம் ஆறு காண்டங்களும் உள்படத் தனிப் புஸ்தகம் நமது ஆபீசில் கிடைக்கும். வேண்டுவோர் ஆறணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கல்விச் செல்வம்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு."

"தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

மடியும், மிடியும், கொலை, களவு, கட்காமக் குரோதாதிகளும் நாலா பக்கங்களிலும் வியாபித்து நிற்பதைப் பாராய்! துர்க்கிருத்தியம், துக்கம் என்ற நீர்த்துளிகள் நிரம்பிய வாழ்வென்னும் ஆறு பெருகியோடுவதைக் காணாய்! சகல இன்னல்களுக்குந் தாயான தேவை, அல்லது வறுமை மாந்தரைப் பீடித்து வருத்துவதை நோக்காய்! கொடுங்கோன் மன்னர்களையும், செருக்குற்ற தனவந்தர்களையும், பசியுற்ற ஏழைகளையும், பிணியுற்ற மக்களையும் சகிக்கக்கூடாத துச்சர்களையும், தேக சுகமும் ஞானவின்பமு மில்லாது பரிதவிக்கும் குழந்தைகளையும் பாராய்! ஆசை காட்டி மோசஞ் செய்யும் வேசையரின் மோக வலையிற் சிக்கிப் பற்பல லீலைகள் செய்து, பொருளையிழந்து, இளமையிற்றானே முதுமையடைந்து வாடி மடியும் பேதையரை உற்றுப் பாராய்! பொய்ச் சாந்து பூசப்பட்ட சுகபோகங்களையும் சாமானியரின் அருவருக்கத்தக்க ஸ்திதியையும் சற்று கவனித்து நோக்காய்! அரைவயிற்றுக் கஞ்சியுமில்லாது, நாள் தோறும் காலை முதல் மாலை வரையிலும் உழைத்து இம்மைப் பயன்களைச் சிறிதேனும் பெற்று அநுபவிக்காது கண்மூடிச் செல்லும் துர்ப்பாக்கியர்களின் கதியை நினைத்துப் பாராய்! ஆசாபாசங்கள், மனக் கொந்தளிப்பு, தரித்திரம், நோய், இடுக்கண்களென்ற பிரம்மாண்ட அலைகள் நிரம்பப் பெற்ற வாழ்வென்னுங் கொடிய கடலைக் கடந்து அபரிமிதம்—ஜயம்—இன்பம்—ஆனந்தம் என்பனவாதிகள் தங்கப் பெற்ற நற்கரையைச் சேர்வது எங்ஙனம்? கருணாகரக் கடவுளால் இப்பிரபஞ்சம் படைத்துப் பரிபாலிக்கப்பட்டு வருவதென்பதும் நாளுக்குநாள் நித்தியானந்தமே இப்பூமியின்மீது பாவி நிற்கு மென்பதும் கவி தத்வக்ஞருடைய கற்பிதமோ? அவ்வின்னல்களைப் போக்குதற்கான வழியும், அவைகள் நிலவி வருதற்குக் காரணமும் என்னையோ?

மேற் சொல்லிய தோஷங்கள் இவ்வுலகிற் பெருகி நிற்பதற்குக் காரணம் அஞ்ஞானமே. ஞான சஞ்சீவியினால் மாந்தரின் பிணிகளைத் தீர்க்கலாம்; ஞானமிருதத்தினால் அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யலாம்; ஞான ஜோதியால் பாமரர் பண்பிலாரின் மன இருதயங்களைத் தெளிவித்துப் பிரகாசிக்கச் செய்யலாம்; ஞானமென்ற வற்றாவூற்றுத் தண்ணீரைக் கொண்டு ஆசை, லோபம், அகந்தை, வஞ்சகம், பொய் முதலியவைகள் நிரம்பிப் பாலை வனம் போன்ற இவ்வுலகை அன்பு, ஈவு, இரக்கம், பச்சாத்தாபம் என்பனவாதிகள் பரிணமிக்கப் பெற்ற எழிற் பொழிலாக மாற்றலாம். அஞ்ஞான விருள் செறிந்த படுகுழியிலாழ்ந்து அலறும் பாபிகளைச் சுசீலராகச் செய்வது ஞானம்; அவித்தையாகிய பேயினாற் பிடிக்கப்பட்டு அலப்புறும் அறிவீனர்களைத் திருத்தி உயர்த்தி இம்மைப் போகங்களையடைந்து இனித்திருக்கச் செய்வது ஞானம்; கயமையின் தாயான அறியாமை யென்ற விருட்சத்தை முறித்து விழுத்துவது ஞானமாகிய சண்டமாருதமே. ஞானத்தை எவரும் அநியாயமாய் அபகரிக்க முடியாது. விசாலமான முதிர்ந்த அறிவு பெறாதவன் ஜடப் பொருள்களுக்

குங் கீழாகிறான். அறிவுமுதிர்ச்சியில்லாத அநாகரிகன் நாகரிகனாகிறான்; மிடியன் செல்வனாகிறான்; பாமரன் கல்விமானாகிறான்; அயோக்கியன் சத்புருடனாகிறான். பகுத்தறிவு, விடாமுயற்சி, அகங்காரம், படிறு, அசூயைகளில்லாமை, தீவிர விசாரிப்பு, உண்மையாசை, சிரத்தை ஆகியவைகளே அறிவின் லக்ஷணங்கள். அவைகள் தக்க கல்வியினாற்றான் செழிப்பன. கல்வி யறிவைப் பூச்சி புழுக்கள் அரிக்கா; காலமுமிடமும் தாக்கியழிக்கா; அக்கினி எரிக்காது; நீர் நனைத்து அழுகச் செய்யாது; கள்வர் கவர்ந்துவிட முடியாது.

விரிந்து ஆழ்ந்த நதிபோன்றது வாழ்க்கை. நதியின் விசாலமும், ஆழமும், பயனும் அது ஓடுமிடங்களைப் பொருத்திருப்பதுபோல் வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகள் அதைச் செலுத்தற்கான சரீரத்தின் வனப்பை யொத்துள. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்." மிக்க சாமான்ய அன்னபானாதிகளை ருசிக்கச் செய்வது ஆரோக்கிய நிலைமையே; கைக்கொண்ட தொழிற்களை உற்சாகத்துடன் செய்து முடிக்கத் தூண்டுவது ஆரோக்கிய சரீரமாம்; வாழ்க்கைக் கோப்பையை ஆனந்தமாகிய அமிருதத்தினால் நிரப்புவது ஆரோக்கியமே. மேலேற வேண்டுமென்ற எண்ணமே விதையாகும்; கல்விப் பயிற்சியே உழவுகோலாகும்; ஊக்கமுமுழைப்புமே தண்ணீராகும்; விசுவாசம் என்பதே காற்று; ஞாபகமே வலிய பட்டையாகும்; இதனின்று ஞானமாகிய மலர் அலர்ந்து, அருள் என்ற கனி பழுக்கும்.

தேக புஷ்டிக்கு நல்லுணவு எவ்வாறு பிரதானமோ அவ்வாறே மனோவளர்ச்சிக்கு நற்கல்வி இன்றியமையாதது. மனத்திற்குக் கல்வி உதவுவதைப்போல் சூக்ஷ்ம திருஷ்டிக் கண்ணாடி கூட நம் நேத்திரங்களுக்கு உதவி புரிவதில்லை. கல்வி யறிவு பெற ஊக்கமு முழைப்பும் அவசியமாவன. மடியுந் துயிலும் மரணத்தின் சகோதரர்; அவித்தை அல்லது மடமை காலனின் ஒற்றன். எடுத்தாளாத ஆயுதம் துருப்பிடிப்பதுபோல் கல்வியினால் துலக்கித் திருத்தி வன்மைபெற்று உயர்த்தப்படாத மனம் பாழடைகின்றது. உழைப்பில்லாத உடல் உரங்கொள்ளாது. புஜபலமுள்ளவனுக்குத்தான் வெற்றி; சற்பாத்திரங்களில் செலவிடுபவனுக்கே தனம்; ஞானமும் அருளும் நியமவுடையவனுக்கே கீர்த்தி. புறங்காட்டி யோடுபவர்களுக்கும், ஆரம்பத்திலுண்டாகும் அபஜயத்தினால் மனந்தளர்ந்து மேற் கொண்டவைகளைக் கைவிட்டுத் துக்கிப்பவர்களுக்கும் உய்வில்லை. வாழ்க்கையாகிய வீரன் வழியிலுண்டாகும் கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்து இடையூறிடுக்கண்களை அப்பாற் படுத்தித் தான் முன் செல்லக்கூடும். வெற்றி தோல்விகள் நம்முடைய அறிவையும் குணநடத்தைகளையும் சார்ந்திருக்கின்றன. சிந்தனைகளுங் காரியங்களும் வீண்போகா. நாம் சிந்திக்கும் எண்ணங்களும் செய்யும் வேலைகளும் நாளடைவில் வெளியாகும். பொறாமை உதடுகளைச் சுருங்கச் செய்கின்றது; துவேஷம் வாயைக்கோணலாக்குகின்றது. சலவைக் கல்போன்ற தேகத்தை அவலக்ஷணப்படுத்தி யழிப்பதும், கண்ணொளியை மழுக்குவதும், கோவையையொத்த செவ்விரத்தத்தைக் குறைத்து நானாவித நோய்களின் வாசஸ்தான மாக்குவதும் காமமேயாம். அபக்தி அல்லது நிர்விசுவாசம் வாழ்க்கையின்பத்தை நசிப்பிக்கும்; சஞ்சலம் மனதையரிக்கும் துருவாகும்; கவலை புண்ணாக்கும்.

மானிட தேகம் ஓர் அழகிய மாளிகையாகும்; ஞானம் மேன்மை தங்கிய மண்டபமாகும்; ஞாபகம் விசாலப் புத்தகசாலையாகும்; மனக் கற்பனைகள் சித்திரங்களடங்கிய தாழ்வாரமாகும்; நம்பிக்கையே கோபுரம்; கல்விப்

பயிற்சியும் உள்ளாராய்ச்சியும் செழிக்கப் பெற்ற மனமே சிற்பி; காவியங்கள், புராணங்கள், தத்துவ நூல்கள், பிரகிருதி சாஸ்திரங்களான நல்லாடைகளை நெய்து வெளிப்படுத்துந் தரியாம் ஞானமென்பது. உழைப்பினாற் கிடைத்த விஷயங்களான சாமான்கள் தாங்கிய புலன்களென்ற கப்பல்களை ஒழுங்குடன் கரை சேர்ப்பது விவேகமே. குண நடத்தைகளைச் சீர்ப்படுத்தும் சிற்பி விவேகமாம். அவ்வப்போது நம்முன் தோன்றும் இன்னலிடர்களை அகற்றியுங் குறைத்தும் மேற் செல்லக் கை கொடுத்து அநுகூலிப்பது விவேகமே. இச்சிறப்பு வாய்ந்த விவேகம் தக்க கல்வியினால் வளர்ந்து வனப்புறும்.

உலக வாழ்க்கை யென்பது வீரர் நடையையும் கடும்போரையும் ஒத்துளது. மேலோ கீழோ, முன்னோ பின்னோ, சதாகாலமும் இடம்விட்டிடம் பெயர்ந்து சென்றுகொண்டேயிருக்கவேண்டும். நிற்குமிடத்திலேயே ஒரு விநாடி கூடத் தங்கமுடியாது. இன்னமும், வாழ்க்கை யென்பது நீரோட்டத்தை ஒத்தது. நீரோட்டம் தடைகளைத் தகர்த்துத் துளைத்து முன் தாவலாம்; பள்ளங்களிற் பாய்ந்து படிந்து விடலாம்; அல்லது கங்குகரையில்லாது நாலாபக்கங்களிலும் பரவி வறண்டு போகலாம்; அல்லது பாறைகளை ஊடுருவிச் செல்ல முடியாது பின் வாங்கிச் சுலபமான இடங்களில் உலாவிப் பறந்து விடலாம்; அல்லது களி, சேறுகளுடன் கலந்து நிஷ்பிரயோஜனமும் அபாயமும் நிரம்பியதாகிவிடலாம். கரையும் ஆழமும் ஆற்றுக்கு உதவுவனபோல் அறமும் ஞானமும் ஜீவான்மாவுக்கு உதவி புரிகின்றன.

உள்ளே பதுங்கிக் கிடக்கும் சுயகுணவொழுக்கங்களையும் நுண்ணறிவையும் நல்வழியால் சுஜீவனுக்கும் இதரர்க்கும் நன்மை புரியுமாறு வெளிக் கொணர்தலே மெய்க் கல்வியின் இலக்கணம். இக்கல்வி பலபாகங்களையுடையது; பல பிரிவுகளாலாயது. இப்பாகங்கள்—பிரிவுகளனைத்தையும்ஓர்ந்தறிந்து மன இருதயங்களையும் புத்தி புலன்களையும் மனவந்தக்கரணங்களையும் செம்மைப்படுத்தி மாண்புறச் செய்து ஆன்மாவைச் சுயவொளியுடன் ஜ்வலிக்கச் செய்வதே மெய்க் கல்வி.

ஜீவப் பிராணிக்கும் ஜடப்பொருளுக்கும் உள்ள வித்தியாசம் யாதெனில் முன்னது உள்ளிருந்து மேல் வளர்வது; அதாவது செடி முதல் மனிதனீறாக, இவ்வுலகாதிகளனைத்தும் தம்குணம், போக்கு, தன்மைகளுக்குத் தக்கபடி உட்கொண்டு, கழிப்பனக் கழித்து, சேர்ப்பனச் சேர்த்துத் திருத்தி உபயோகப்படுத்தி மேல் வளர்வன. பின்னதோ தன்மீது படிவன வெல்லாவற்றையும் ஒன்றின்மேலொன்றாகக் குவிப்பது. தூய்மைப் படுத்தி, மாற்றி, நேர்மை நேர்த்தி நற்பயன்களை உண்டாகச் செய்வது ஜீவனின் குணாதிசயம். ஜடப்பொருளோ வண்ணத்தில் மாத்திரம் மாறுபடுமே யல்லாது குணத்தைப் பொருத்தவரையிலும் ஒரு விதமாகவேயிருக்கும். முன்பின் ஆராய்ந்தறிதல், நன்மை தீமைகளைப்பற்றி அறிவு, ஞாபகசக்தி, ஈசுவரஞானம் என்ற உடமைகளால் மனிதன் சிறப்புற்று விளங்குகிறான். ஆனால் அவைகள் கல்வித் தேர்ச்சியினாற்றான் செழித்தோங்கி வளர்ந்து திகழ்வன.

ஆலோசனை, சிந்தனை, கருத்து, மனோதிடம், எண்ணம் எனப் பலவிதமாகக் கூறப்படும் அரும் பெருஞ் சக்தியால் ஆகாதது ஒன்றுமில்லை. இப்பிரபஞ்சம் பிரபஞ்சாதிகளை நிருமிப்பதும் துகளாக்குவதும், "மிக்க அழகு" அல்லது 'ரம்மியமானவை' என ஸ்துதிப்பதும் 'விகாரம்' அல்லது 'விரூபங்கள்' எனப் பழித்துத் தள்ளுவதும் எண்ணமே. சுகம், கஷ்டம், தனம், தரித்திரம், ஆரோக்கியம், பிணி, உயர்வு, தாழ்வு, தோற்றம், மறைவு, தளர்ச்சி,

கிளர்ச்சி, மடி, ஊக்கம், வளர்ச்சி, தேய்வு, அழிவு என்பனவாதிகளெல்லாம்எண்ணத்தின் பிரயோகத்தையும், வித்தையையும், வன்மையையும் ஒட்டியுள. மரணம், நோய், நல்குரவு, அபஜயம், அவமானம் ஆகியவைகளைப் பொருட்படுத்தாது தைரியத்துடன் முன்போகச் செய்வது திடமுந் தூய்மையும் வாய்மையும் வாய்ந்த ஓர் சீரிய எண்ணமன்றோ? மனோ சக்தியின் முன் சதுரங்க சேனைகளும், பீரங்கி துப்பாக்கிகளும், புகைக்கப்பல், ஆகாய விமானங்களும் எம்மாத்திரம்? விசுவாமித்திரனின் ஆவேசத்தையும் கர்வத்தையும் பல சமயங்களில் அடக்கியது எத்தகைய ஆயுதமோ? செருக்குற்ற தேவர்களை மானபங்கப்படுத்தித் திரிபுரம் எரித்தது எச்சக்தியோ? இத்தகைய எண்ணத்திற்கு ஆதாரமாவது கல்வியே.

கேவல புத்தி மாத்திரம் அகந்தைக்குக் காரணமாகும்; மனோசக்தி மாத்திரம் பற்பல கொடூரங்களுக்கு இடந்தரும்; உள்ளக்கிளர்ச்சி (பிரேமை) மாத்திரம் நானாவித ஆசாபாசங்களால் அலைக்கப்பட்டுக் கெடும். இவைகளை ஒழுங்கு படுத்தி ஒற்றுமையுடன் ஒளிக்கச் செய்வது கல்வியே. தீர்ந்த ஞானம், பூர்ண நன்மை, வாக்குக் கடங்காயினிமை, அப்பிராகிருத சக்தியானவைகள் ஒவ்வொரு ஜீவான்மாவுள்ளும் பூரித்திருக்கின்றன. இவைகளை வெளிப்படுத்தற்குச் சரியான தூண்டுகோல் விரிந்து ஆழ்ந்த படிப்பே. மானுடராசியின் சத்துரு அஞ்ஞானம் என்பதல்ல. ஆனால் நடிப்பு, பாசாங்கு, ஆடம்பரம் அல்லது வீண்மனோராஜ்யங்களேயாம். பின்னவைகளை அழித்து முற் கூறிய பெருஞ் சக்திகளைப் பெருக்கிப் பரப்புவது கல்வியே.

"ஒரு தேசத்தினரின் பெருமை அவர்களுடைய இலக்கியங்களினின்றும் கலைகளினின்றும் உண்டாகிப் பெருகுகின்றது." "இலக்கியங்களின் போதனைகளும் தேசத்தினரின் குணவொழுக்கங்களும் ஒன்றை யொன்று பிரதி பலிக்கச் செய்வன." ஒரு ஜாதியருடைய நாகரிகத்தின் தன்மை அவர்களால் 'சீரியர்' எனக் கௌரவிக்கப்பட்டு வருபவரின் மனப்போக்கையும், குணாதிசயத்தையும், அவர்கள் வெளியிட்ட நூற்கள், செய்த அல்லது செய்யத் தூண்டிய காரியங்களின் சிறப்பையும் சார்ந்திருக்கின்றது. சுதந்திரம், உரிமை, கடமை, வீணான அநியாயக் கட்டுப்பாடுகளினின்று விடுத்துக்கொள்ளல் முதலியவை ஒருவருடைய கல்வித் திறத்தையும் அளவையும் ஒத்துள. நன்மை தீமைகளைப் பகுத்தறிதற்கும் சுதர்மத்தைத் தெளிவாக அறிந்து கடைப்பிடித் தொழுகுதற்கும், மன வெழுச்சிக்கும் விசாலத்திற்கும், தேகாரோக்கியத்திற்கும், ஆத்ம ஞானத்திற்கும் கல்வி அத்தியாவசியமானது. இருதயம், ஆன்மா, பரம்பொருள் களைப்பற்றிய உண்மைகளை விடுத்து, இகபோகவின்பங்களையே முன்னிட்டு விவேகம் அல்லது லௌகிக அறிவையே விருத்தித்து, தற்சிந்தனையையே பெருக்கக்கூடிய மனப் பயிற்சி மெய்க் கல்வியல்ல. மெய்க் கல்வி யாதெனில் இகபரவின்பங்கள், மன இருதயங்கள், ஜடஜீவன்கள், ஜீவன் பரமான்மா முதலானவைகளிரண்டையும் பற்றிப் பாரபக்ஷமில்லாமல் பரிபூரணமாக அறிவித்து, பல்வேறு பொருள், விஷயம், சம்பவங்களின் தோற்றம், மாற்றம், தேய்வு, அழிவு, இவைகளுக்கான காரணம், வழி, இறுதிப்பயன், உள்ளிணக்கம் என்பனவாதிகளை உணர்த்தி, உள்ளும் புறமும் சத்தியம், சுத்தம், உறுதி, தெளிவு ஆகியவைகளைப் பெருக்கி, அமைதி, இன்பம், ஆனந்தங்களையளித்து இனித்திருக்கச் செய்வதேயாம். பொது ஜன நன்மை, பந்தவிமோசனம், நடுநிலைமை, மேலேற்றங்களுக்குச் சகாயிக்காக

அல்லது சகாயிக்கக் கூடாத கல்வி கல்வியாமோ? இவ்வுலகாதிகளனைத்திற்கும் பிறப்பிடம், அடிப்படை, முடிவிடமான ஆதி சக்தியைப்பற்றி அறிவுறுத்தாத முயற்சியும் இயக்கமும் தொழிலும் படிப்பும் புகழத்தக்கனவல்ல. பூத்துக்காய்த்துப் பழுக்காத மரத்தினால்—அது எவ்வளவு பெரிதானாலுஞ்சரி, பலவாயிரம் பேர்களுக்கு நிழலளித்துக் குளிர்ப்பித்தாலுஞ்சரி—உண்மையான சாஸ்வத நன்மையை யொட்டிய வரையிலும் உண்டாகும் பயனென்னையோ? நன்மை தீமைகளை உய்த்துணர்ந்து முன்னதைப்பற்றிப் பின்னதை விலக்குவதற்கு மாத்திரம் கல்வியும் சுதந்திரமும் வேண்டப்படுவனவல்ல. சிற்றின்பம் பேரின்பம், ஸ்திரவஸ்து சலனப்பொருள், சிறு நன்மை பெரும்பலன், சிறு பிழை பெருங்குற்றம், போகம் பேரானந்தம், அற்பசுகம், அந்தமிலின்பம் என்பனவாதிகளின் ஒற்றுமை வேற்றுமைகளையும் தாரதரங்களையும், அவைகளைப் பெற்று அநுபவித்தற்கான அநேக வழிகளின் தாரதம்மியங்களையும் தீர ஆராய்ந்து நிதானித்துப் பார்த்துத் தெளிந்து, அவற்றில் எது அதியுன்னத நிலையிலமர்த்தக் கூடியதோ அந்நெறியையே கைக்கொண்டு தொடர்ந்து உய்தற்கும் கல்வியும் சுதந்திரமும் மூலக் கருவிகளாவன. புலன்களினிச்சைகளையும், இந்திரியங்களின் சேஷ்டை, படாடோபங்களையும் திருத்திச் சீர்ப்படுத்துவதற்கும், மனத்தை ஒருமுகப்படுத்தற்கும் புத்தியின் உதவி வேண்டும். புலன்களின் வாயிலாகப் பிரபஞ்சாதிகளின் போக்கு வரவுகளை மனம் அறிகின்றது. இவ்வறிவின் ஏற்றத் தாழ்வுகளைக் கிரகித்துக் கொள்ளற் பாலதைக் கொண்டு, தள்ளற்பாலதை விடுத்து, முன்னதைப்பற்றி யொழுகுதற்கான சக்தியை மனத்திற்கு அளிப்பது புத்தியாகும். இப்புத்தி சலிக்கையிற்றான் மனம் தடுமாடுகின்றது; மனத் தடுமாற்றம் உண்டாகும் பொழுது புலன்கள் இச்சை வசமகப்பட்டு தத்தம் வழிகளிற் சென்று தத்தளிக்கின்றன; இச்சமயத்தில் அஞ்ஞானமாகிய காரிருள் ஜீவான்மாவைச் சூழ்ந்து உள்ளொளியை மறைத்து நிரதிசயானந்தத்தை அப்பாற்படுத்தி மீண்டும் மீண்டும் துன்பத்திற்குள்ளழுத்தி வருகின்றது. இவ்விஷயத்தை அறிவித்து, வாட்டவருத்தங்களை யகற்றி, நல்லறிவைப் புகட்டி, நற்கருமஞ்செய்ய உதவி புரிந்து, புத்தியை ஸ்திரப்படுத்தி, ஜீவான்மாவைச் சுயம்பிரகாசத்துடன் திகழச் செய்வது கல்வியே.

பாழ்த்த நிலங்களைப் புதுமணற் பரப்பி நல்லெருவிட்டுச் செழிப்பு நிலங்களாக்குவது போல் 'நிர்ப்பந்த வழக்கம்' 'ஆன்றோர் ஆக்ஞை' 'புராதனக் கொள்கை' என்பனவாதிகளால் பிணிக்கப்பட்டு வருந்துபவர்கள் காலம் மனோவளர்ச்சிக் கேற்றவாறு தம் தர்மங்களைப் புதுக்கிப் பெருக்கி மாற்றித் திருத்தி வரவேண்டும். தர்மங்கள், கொள்கைகள், சாஸ்திரங்கள், ஆசாரங்கள் முதலானவைகளெல்லாம் எவ்வளவு சிரேஷ்டமாயினும் அவைகளொவ்வொன்றிலும் கால தேசவர்த்தமானங்களால் பாதிக்கப்படாது என்னும் மெய்யாகவே விளங்கும் விஷயங்களுடன் மேற் காட்டிய மூன்றுக்கு முட்பட்டு, வேண்டியபடி எப்பொழுதும் மாறுதலடையும் பொருள்களும் கலந்துள வென்பதை நாம் நன்கு அறியவேண்டும். இதற்குக் கல்வியும் உள்ளாராய்ச்சியும் அவசியமாவன. சோகத்தைக் கண்டித்து வாழ்க்கையின்மீது நந்நம்பிக்கையையும் உற்சாகத்தையு மறிந்து, பரோபகார குணத்தை மேலெழுப்பி, வாணாளை மலின மற்றதாகச் செய்யக்கூடியன விரிந்த படிப்பும் ஊன்றிய விசாரிப்பும் பரந்த நோக்கமுமேயாம்.

சுயவளர்ச்சிக்கு மாத்திரம் கல்வி வேண்டப்படுவதில்லை. ஒவ்வொருவருடைய எண்ணம்,

வார்த்தை, செயல்கள் ஏனையோர்களையும் ஒவ்வொரு விதத்தில் பாதிக்கும். இதினின்றே நட்பும் பகையும் நிகழ்கின்றன. பின்னதையடக்கி முன்னதையே வளர்த்தி மாந்தர்க்குள் பரஸ்பர அன்பையும் விசுவாசத்தையும் இணக்கத்தையும் விருத்தி செய்வது கல்வியே.

கல்வி யென்பது நூற்றுக்கணக்கான புத்தகங்களைப் படித்துப் பேதைகளை உருட்டிப் புரட்டித் திகைப்புறச் செய்வதற்காகவல்ல; குயுக்தி, குதர்க்கம், பகட்டுரை இவைகளால் தன்னுடைய இழிய குண நடத்தைகளை மூடிப் பிறரை ஏளனஞ் செய்வதற்குமல்ல. பழக்கத்திலும் பேச்சிலும் இப்புத்தகக் கரையான்களை, போலிப் படிப்பினரைச் சுலபமாக அறிந்துவிடலாம்.

பற்பல பாஷைகளில் நானாவித நூல்கள் வெளியாகி நாளுக்குநாள் மலிந்து பெருகுகின்றன. ஒருவன் தன் வாணாள் முழுதும் படித்தாலும் முடித்தற்கியலா அளவாகப் பலதிறப்பட்ட இலக்கியங்கள் எழுதப்படுகின்றன. அவைகளில் நம்மனதுக் கிசைந்தவைகளைத் தேர்ந்தறிந்து படிப்பதொன்றுமே நமக்குச் கஷ்டசாத்திய மாயிருக்கின்றது. தற்காலப் புத்தகசாலைகளொன்றுட் செல்வோம்.

மாந்தர்க்குப் பொதுவான இடையூறிடுக்கண்களைப் பொறுத்து தன்னலத்தைக் கிஞ்சிற்றேனும் மனத்தில் வகியாது உழைத்த சுசீலர்களைப்பற்றிய நூல்கள் ஒரு பக்கம்! வான்முகட்டைத் தடவி நிற்கும் மலைகள்மீதும் கடும் புயலும் புரண்டோடும் திவலைகளும் நிரம்பிய சாகரங்கள் மீதும் ஓடியும், துஷ்ட மிருகங்களும் விஷச் செடிகளும் நிறைந்துள்ள கானகங்களுட் பிரவேசித்தும், கொதிக்கும் பாலைவனங்களுக்கும் பனியுங் குளிரும் உள்ள இடங்களுக்கும் போயும் ஆங்காங்கு தாம் கண்டவை, அநுபவித்தவைகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி நம்முடைய அறிவு விசாலிக்கும் பொருட்டு எழுதப்பட்ட புத்தகங்கள் மற்றொரு பக்கம்! அடாது செய்து படாதுபடும் புல்லறிஞரைச் சன்மார்க்கராகச் செய்யக்கூடிய தர்மசாஸ்திரங்கள் வேறொரு பக்கம்! மெய்யுணர்வில்லாது அவதிப்படும் பேதையரைத் தெளிவிக்கக் கூடிய இலக்கிய விலக்கணங்கள் ஒரு பக்கம்! அளவளாவி வியாபித்து நிற்கும் ஆகாயத்தின்கண்ணுள்ள செஞ்ஞாயிறு, வெள்ளியமதியம், நக்ஷத்திரம் முதலானவைகளைப் பற்றி விவரிக்கும் வான சாஸ்திரங்கள் மற்றொரு பக்கம்! உயிர் தோன்றி வளரும் மர்மத்தை விஸ்தரிக்கும் உயிர் நூல்கள் ஒரு பக்கம்! மருள் மயக்கத்தினின்றும் விபரீத ஞானத்தினின்றும் விடுபட்டு மெய்ஞ்ஞானியாதற்கான வேதாந்த சாஸ்திரங்கள் வேறொரு பக்கம்! தேகாரோக்கியத்தைப்பற்றி அறிவு புகட்டக்கூடிய வைத்திய புத்தகங்கள்; மாந்தரின் போக்கு, ஐக்கியம், லக்ஷியம், நாகரிகங்களின் ஆரம்பம் வளர்ச்சி முதலானவைகளை யறிவிக்கும் சரிதங்கள்; நீராவி யந்திரங்கள், காற்றுக் கப்பல், மின்சாரம் முதலான அற்புதங்களைப் பற்றிக்கூறும் புத்தகங்கள்; லளித வித்தைகளைப்பற்றிய நூல்கள்; முதலானவைகளால் நிரப்பப்பட்டிருப்பதைப் பார்ப்போம்.

அப்புத்தகங்களை விட மிக்க சிறந்த பொக்கிஷம் வேறு எங்குளதோ? பெற்றோர்களை விடப் பன்மடங்கு அதிக ஊக்கத்துடன் உயரிய உண்மைகளை ஊட்டுவதும், மனைவி ஊழியக்காரரைவிட அதிக வினயத்துடன் வேண்டிய வேளைகளில் உடனிருந்து நம்மைத் திருப்திப்பதும், நண்பர்களைவிட மிக்க மேலான பண்பு தங்கியதும், காலையியோ மாலையிலோ, தூக்கவேளையிலோ சந்தோஷநேரத்திலோ, எப்பொழுதும் நம்மை யணுகி நம்முடைய வியாகுலத்தை விலக்குவதும், மனோல்லாசத்தை

உண்டு பண்ணுவதும், ஞாபகசக்தியைப் பலப்படுத்துவதும், எண்ணம், சொல், செயல்களைக் குற்றமற்றனவாகச் செய்வதுமான புத்தகங்களின் மகிமையை அறுதியிட்டு உறுதி கூற வல்லார் எவர்?

ஞானம் எல்லையற்றதாதலால் அது பற்பல அங்கங்களாக வகுக்கப்பட்டுளது. ஒழிவு நேரமோ கொஞ்சம்; அறிய வேண்டிய விஷயங்களோ அநந்தம்; படித்தற்கான நூல்களோ எண்ணிறந்தன. ஆயுளோ சொற்பம். எனினும் அதைரியப்பட வேண்டுவதில்லை. ஆயிரக்கணக்கான கிரந்தங்களிருப்பினும் அவைகளினின்று அவரவர் மனவமைப்பு, சக்தி, ஆதர்சங்களுக்கிசைந்த இலக்கியங்களைத் தெளிந்தெடுத்துப் படித்தலே நன்மை பயக்கக் கூடியது.

"கற்கக் கசடறக் கற்பவை; கற்றபி
னிற்க வதற்குத் தக."

படிக்கும்பொழுது கவனிக்கவேண்டிய விதி அவ்விரண்டு வரிகளிலும் அடங்கி விட்டது. மேலும் நற்கல்வியின் மெய்க்குணமும் காட்டப்பட்டுளது. விரிவிக்கின் பெருகும். எப்படி அன்ன பட்சியானது நீரிலிருந்து பாலை மட்டும் பிரித்து உட்கொள்கிறதோ அவ்வண்ணமே படிக்கும் புத்தகங்களில் அசத்தைநீக்கி சத்தை கிரகித்தலே கல்வி கற்பதின் பிரதான நோக்கமாக இருக்கவேண்டும்.

ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபாலன்.

நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக்கொடி.

(ஸ்ரீமதி பாகீரதியம்மாள்.)

(467-ம் பக்கத் தொடர்ச்சி.)

பத்தாவது அத்தியாயம்.

நமது கதையின் பிரதமபாகத்தின் கதாநாயகனான அயாஸின் அத்தியந்த துக்க வனவாசம் முடிந்தது. பிரிய வாசகர்களும் அநேக நாட்கள் அவனுடன் வனவாசத்திலிருக்க வேண்டி வந்தது. ஆனால் வாசகர்களுக்கு ஒரு விசேஷ சங்கதி மட்டுஞ் சொல்ல வேண்டியதுண்டு. பிரீதி தேவதையோடு சகவாசஞ் செய்து வரும் ஒருவனுக்கு ஆரண்யம் அரண்மனையாகத் தோன்றுகிறது. மகாசமுத்திரம் கணுக்கால் வரையே இருக்கின்றது. எண்ணிறந்த கஷ்டங்கள் சம்பவித்தபோதும் அவைகளைச் சாந்தமுடன் சகித்திருக்கச் சக்தி பிறக்கின்றது. இருமனமும் ஒருமித்து இவ்வளவு பெருங்காரியங்களைச் செய்யுமென்றால், சர்வ மனங்களையும் நிர்மாணிக்கவல்ல ஈசுவரனது கடாக்ஷமிருக்குமாயின் மனிதன் யாது செய்ய வல்லான்?

சுருங்கச் சொல்லுங்கால், காளகூடத்தால் வியாபிக்கப்பட்ட நபோமண்டலத்து மத்தியில் மின்னல் ஜ்வலிப்பது போலும், அதிக விஸ்தீர்ணமுள்ள மணல் நிறைந்த பாலைவனத்தின் மத்தியில் நானாவித பழங்களின் பாரத்தைத் தாங்கச் சக்தியில்லாது தலைகளை வணங்கி நிற்கும் விருட்சங்களும் சுகந்தத்தை எல்லாத் திசைகளிலும் பரப்ப அவ்விருட்சங்களைச் சுற்றிப் படர்ந்திருக்கும் புஷ்பக் கொடிகளும் நிறைந்த உபவனம் தென்படுவதுபோலும் சம்சாரம் என்னும் பெரும் வியாதிக்கு மத்தியில் தென்படும் மருந்து பிரேமை எனப்படும் சஞ்சீவினியே! இப்பிரேமையின் பிரபாவத்தை யாதென்று வர்ணிக்க மாளும்? அமீனா அயாஸிடங் கொண்டிருந்த பிரேமையைப்பற்றி முன்னாலேயே கூறப்பட்டிருக்கிறது. அமீனாவின் தேகமோ இப்பொழுது மண்ணோடு கலந்துவிட்டது. ஆனால் அயாஸின் மனத்துடன் அமீனாவின் மனமும் கலந்துள்ளதா அல்லது இல்லையாவெனக் கவனிப்போம். கலந்தே இருக்கவேண்டுமெனத் தோற்றுகிறது. இல்லையேல் அயாஸ் அமீனாவின் குழந்தையைத் தியாகஞ் செய்து எப்பொழுதேயோ பக்கிர் ஆகியிருக்கவேண்டும். இதுவரை பிரீதி தேவதைக்குப் பாத்திரனாயிருந்த அயாஸ் இப்பொழுது வாத்ஸல்ய தேவிக்கு அடிமையாயினன். துர்த்தெய்வ வசத்தால் வந்துள்ள தன் குமரியை சம்ரக்ஷிக்கும் பொருட்டு ஓர் உத்தியோகத்தைச் சம்பாதிக்க எண்ணி, கந்தஹார் வனத்தினின்றும் தன்னைக் காப்பாற்றிய வர்த்தகனுடன் அக்பர் பாதுஷாவைத் தரிசிக்கத் தயாராயினன். ஆகையால் பிரிய வாசகர்காள்! நாமும் அவனுடன் மொகலாய குல திலக அக்பர் பாதுஷாவின் தர்பாருக்குச் செல்லுவோம்.

அச்சமயம் அக்பர் சக்கிரவர்த்தி தில்லியில் ஆண்டு வந்தனன். அக்பர் மிக்க புத்திமான். வித்வான்களுக்குப் பூஷணமாய் விளங்குபவன். ஜாதிபேதம், தர்மபேதம் இவைகளுக்கிடங்கொடாது பல ஜாதிகளினின்றும் பக்ஷபாதமின்றிப் பண்டிதர்களைப் பொறுக்கித் தன்னைச் சுற்றி இருக்கச் செய்து, தனது உதாரகுணத்தை ஜகத்துள்ளோருக்கு வெளியிட்டனன். தேசத்தின் ஒற்றுமையைக் கெடுத்துவந்த ஜாதிபேதப் போர்களை அடக்கி, எல்லோரும் ஒருமித்திருக்கவேண்டிய ஐக்கிய பலத்தையுண்டாக்கவே இச்சை கொண்டனன். இந்த மகமதிய ஐக்கியத்திற்காக ரஜபுத்திரர்கள், மகமதியர்கள் இவர்களுக்குள் விவாக வியவகாரங்களை ஆரம்பித்தனன். 'ஈசுவரர் ஒருவர்! நாமெல்லோரும் அவரது குழந்தைகள்!' என்ற எல்லா தர்மங்களுக்கும் சம்மதமான சித்தாந்தத்தைத் தேசமுழுதும் பரவச்செய்யவேண்டி, ஒவ்வொரு தர்மத்தைச்சேர்ந்த பண்டிதர்களையும் அடிக்கடி வரவழைத்து அவர்களுடைய முக்கிய சித்தாந்தங்களின் உண்மையையறிந்து கொண்டனன். பிரசித்த தத்துவ ஞானியான பைஜீ என்போன் இவ்விஷயத்தில் மிக்க உதவியாயிருந்தான். அக்பரது மந்திரியான அடில் பாசலும், இந்த பைஜியும் நெருங்கிய பந்துக்களாவார்கள். பைஜீ பாரசீகம் அராபி முதலிய பாஷைகளில் வல்லவனாயிருந்ததுமன்றி சம்ஸ்கிருதபாஷையிலும் நல்ல ஞானத்தைப்பெற்றிருந்ததால் அக்பருக்கு இந்த தர்மத்திலுள்ள முக்கியசித்தாந்தங்களை எடுத்துச் சொல்லி ஞானத்தைப் புகட்டி வந்தனன். அடிக்கடி மகமதியர்களுக்கும் ரஜபுத்திரர்களுக்கும் கொள்வனை கொடுப்பனைகளை எவ்விதம் ஆரம்பஞ் செய்வதென அக்பர் இவனுடன் யோசித்துவந்தனன். ஆனால் வீணாக யோசித்துட்கார்ந்திராது தன் இராஜ்யத்தின் அஸ்திவாரத்தை ஸ்திரமாகக் கட்டுவிக்கக் கருதி, தான் சில ரஜபுத்திர கன்னிகைகளை மணந்ததுமன்றி, தனது புத்திரர்களுக்கும் ரஜ

புத்திர இராஜகன்னிகைகளையே மணம் புரிவித்து, குடிகளுக்கும் தன் விருப்பத்தை வெளியிட்டனன். முதலில், ஜோத்பூர், ஆல்வார், ஜயபூர் முதலிய தேசங்களில் ஆண்டுவந்த ரஜபுத்திர அரசர்களெல்லோரும் அக்பருக்கு இக்காரியத்தில் உதவி புரிந்தனர். இளவரசன் சலீம் என்போன் ரஜபுத்திரகன்னிகையின் வயிற்றிற் பிறந்தவனாயிருந்ததுமன்றி, தானும் மான்சிங் என்பவனது சகோதரியை மணந்தனன். இவ்வண்ணம் அக்பர் இந்து மகமதிய ஐக்கியத்தை அதிகரிக்கும் பலத்தான காரியத்தைக் கைக்கொண்டனன். இவ்விஷயத்தில் அக்பருக்கு மான்சிங்கின் முக்கியஉதவிகிடைத்தது. இவன் அக்பருக்கு வலது கையாய் விளங்கி வந்ததுமன்றி, கடைசிவரை அநேக யுத்தங்களில் நின்று க்ஷத்திரியர்களது சத்தியத்தையும் சூரத்துவத்தையும் உலகோருக்கு வெளிக்காட்டினன். இராஜ்யத்தில் நியாயமான மாசூலை வசூலிக்க, பட்னமீஸ், ராஜாதோடர்மல் முதலியவர்களிருந்தார்கள். பைஜீ, அபுல்பாசல் முதலிய உதாரகுணமுள்ள மகமதியர்களும், பீர்பல் என்போனைப் போன்ற அதிபுத்திசாலிகளாகிய இந்துக்களும் அக்பரது மந்திரிகளாயிருந்தார்கள். ராஜாங்க விஷயத்திற் கைதேர்ந்த கங்க கவியைப்போன்றவரும் அநேகர் இவனுடனிருந்தார்கள். எண்ணிறந்த வித்வான்கள், சாஸ்திரிகள், மௌல்விகள் முதலியவர்களது உதவியால் அக்பர் பாதுஷா குடிகளின் வாத்ஸல்யத்தைச் சம்பாதித்து மிக்க தோரணையுடன் இராஜாங்கத்தை நடத்தி வந்தனன்.

‘தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்’ எனப்படும் பழமொழிக்கொப்ப, அக்பர் குழந்தைப் பருவமுதலே மிக்க உதாரகுணத்தைப் பெற்றிருந்தனன். தனது தாருண்யத்திலிருந்தே பண்டிதர்களது சகவாசத்திலிருந்து நல்விஷயங்களைப் பற்றி விசாரித்துக் காலத்தைக் கழித்து வந்ததால், நாளாக ஆக இவனது உதாரபுத்தி அதிகரித்துக்கொண்டே வந்தது. இவனுக்கு 13 வருஷமும் 6 மாதமுமாயிருக்கும்பொழுது, இவனது தந்தை ஹுமாயூன் ஹேமு என்ற ஒரு ஹிந்துவுடன் சண்டைசெய்யவேண்டி வந்தது. ஹேமு மிக்க சூரத்தோடு சண்டைசெய்து, கடைசியில் சத்துருவின் கையிலகப்பட, அக்பரிடம் கைதியாக அனுப்பப்பட்டனன். இந்த ஹிந்து சத்துருவைத் தன் கரத்தாற் கொன்று புண்ணியத்தைச் சம்பாதிக்க பஹிராம்கான் இச்சை கொண்டனன். ஆனால் அக்பரோ தோல்வியடைந்த சத்துருவை மறுபடியும் எதிர்த்துச் செல்லுவது அநியாயமென ஆக்ஞாபித்தனன். அதுமுதற்கொண்டு பஹிராம்கான் அக்பரைத் திரஸ்கரிக்கலானான். இவ்வண்ணம் அக்பாது உதார நீதியாற் குடிகள் எங்கும் குதூகலங் கொண்டிருந்தார்கள்.

அக்பர் தனது இராஜ்யத்தை அலகாபாத், ஆக்ரா, அயோத்யா, ஆஜ்மீர், குஜராத், பீஹார், வங்காளம், தில்லி, காபூல், லாகூர், மூல்தான், மாளவம், விராடம், கானதேசம், ஆமத்நகர் என்ற பதினைந்து பாகங்களாகப் பிரித்தனன். ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு அதிகாரியை நியமித்தான். இவ்வதிகாரிகளுக்குமேல் புத்திக்கூர்மையுள்ள இந்துக்களையும் மகமதியர்களையும் ஒன்று சேர்த்துச் சபைகளாக அமர்த்தினான். அதிகாரிகள் யாவரும் இச்சபையோரின் ஆக்ஞைக்குட்பட்டிருக்கும்வண்ணம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தான். நமது கதை நிகழ்ந்த அச்சமயம் அக்பர்பாதுஷா லாகூர் பிராந்தியத்தில் ஒரு விஸ்தீர்ணமான மைதானத்தில் எண்ணிறந்த கூடாரங்களமைத்துப்பெருத்த சைனியங்களுடன் தங்கியிருந்தனன். மைதானத்தின் மேற்கோடியில் ‘திவான்-இ-காஸ்’

அல்லது கொலுமண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

இக்கொலு மண்டபத்தில் அக்பர் பாதுஷா நிதமும் சிற்றரசர்கள், பண்டிதர்கள், மௌல்விகள் முதலியவர்களது சபையைக் கூட்டி, ராஜநீதி, ராஜதர்மம் முதலிய வியவகார விஷயங்களைப்பற்றி சாந்த சித்தத்துடன் வாதித்துக் கொண்டிருப்பது வழக்கம். ராஜசபையில் பற்பல தேசங்களிலுள்ள கீர்த்திபெற்ற பண்டிதர்களும் மௌல்விகளும் ‘தான்’ என்ற அகம்பாவத்துடன் மற்றுள்ளவரைக்கண்டு பொறாமைகொண்டிருப்பது சகஜமே. ஆனால் அப்படிப்பட்ட பண்டிதர்களும் மௌல்விகளும் அக்பர் பாதுஷாவின் சபைக்கு வர நடுக்கமுற்றனர். பிரபல பண்டிதர்களும் அக்பரைக் கண்டமாத்திரத்தில் ஊமைகளைப் போல் வாய்களை மூடியிருந்தார்களென்றால் அதிகமாய்ப் பேசுவானேன்? அச்சமயம் அப்பிராந்தியத்தில் சில அதிகாரிகள் அக்கிரமங்களைச் செய்து வருவதாக அக்பர் காதுக் கெட்டியது. அவர்களைப்பற்றி விசாரிக்க எண்ணங்கொண்டு, ராஜா பிரஜைகள் அதிகாரிகள் முதலியவர்களது வாஸ்தவமான கடமைகள் யாவை என்னும் விஷயங்களை வாதித்துக் கொண்டிருந்தனன். ஒவ்வொரு பண்டிதர்களும் தத்தம் மனதிலுள்ளவற்றைச் சொல்லலுற்றார்கள். இவர்களெல்லோரும் சொல்லி வந்ததை அக்பர் செவிசாய்த்துக் கேட்டிருந்தபின், பீர்பலுக் கடுத்தாற்போலுட்கார்ந்திருந்த கங்க கவியின்மேல் பாதுஷாவின் திருஷ்டி நாடியது. பாதுஷாவின் பார்வை யெனில் சாமானிய சன்மானமல்ல! கங்க கவி உடனே “மஹாராஜா! ஜலாலுதீன் அக்பர்! சத்தியவந்தனும், விசுவாசமுள்ளவனும் வேலைக்காரன் கிடைப்பது மிக்க கடினமே!” என்று பொருள்படும்படி ஒரு கவியை ஆரம்பித்தனன். அச்சமயம் அச்சபையிலுள்ளோர் பதுமைகள் போல் அசைவற்றுக் கங்க கவியின் கவியைக் கேட்கலாயினர். ‘அகந்தை, அசூயை, தன்னலம் பாராட்டுதல் முதலிய கெட்ட குணங்களையுடைய ஜனங்களுக்கு இவ்வுலகில் கடைசியில் துக்கமே சம்பவிக்கும்’ என்ற பொருள்படும்படி கடைசியாகத் தன் கவியைச் சொல்லி முடித்த மாத்திரத்தில் அச்சபையிலிருந்த ஜனங்களது முகமெல்லாம் வேறுபட்டன. குற்றமுள்ள நெஞ்சோடிருந்தவர்களது முகங்கள் சுருங்கின. சிலர் தலையைத் தொங்கவிட்டனர். மற்றுஞ் சிலரது கண்கள் கோபத்தாற் சிவந்தன. கங்க கவி என்னமோ உளறுகிறானெனச் சிலர் முணுமுணுத்தனர். அக்பர் பாதுஷா இன்று கங்க கவிக்குப் பெருத்த சன்மானத்தை அளியாதிரான் எனக்கண்ட சிலர் கோபமுண்டவர்களாய் சபையிலுள்ள ஜனங்களை நோக்கினார்கள். இவ்வண்ணம் அக்பர் பாதுஷாவின் தர்பாரில் துர்ஜனர்கள் நாட்டியமாடிக் கொண்டிருக்கும்பொழுது துர்ஜனர்களது கையிற் சிக்கி மிக்க கஷ்டத்திற்குள்ளான அயாஸ் கந்தஹார் வியாபாரியுடன் அக்பரது கொலுமண்டபத்தின் சமீபம் வந்து சேர்ந்தனன். பிறகு வழக்கப்படி அங்கு காத்திருந்த துவார பாலகர்களது அனுமதி பெற்று அவ்விருவரும் உள் நுழைந்தார்கள். தர்பார் அதிகாரிகள் அவர்களது யோக்கியதைக்குத் தகுந்த வண்ணம் அவர்களை வரவேற்றுப் பாதுஷாவின் சன்னிதானத்திற்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தனர். அயாஸ் மிக்க வணக்கத்துடன் பாதுஷாவிற்கு சலாம் செய்து, தன்னாசனத்திலமரவே அவனது முகத்தைக்கண்டு அச்சபையிலுள்ளோரனைவரும் குதூகலித்தனர். பாதுஷாவின் மனதிலும் இவன் யாரென அறிய ஆவலதிகரித்தது. சுருங்கச் சொல்லுங்கால், மிக்க நேரம் அச்சபையில் எல்லோரும் வாதித்துக்

கொண்டிருந்த விஷயங்களெல்லாம் அப்படியே நிற்க அயாஸைப்பற்றி அறியவே எல்லோரும் ஆவலுற்றனர்.

பிறாது துக்கத்தைத் தனதெனக் கருதும் பாதுஷா கம்பீரத்துடன் வாயைத் திறந்து மிக்கப் பிரேமையுடன் ஒரு சாதாரண மனிதனைப்போல் அயாஸை அவனது ஊர், பெயர், தர்பாருக்கு வந்த காரணம் முதலியவற்றை விசாரிக்கலானான். அக்பரைப்போல் சார்வபௌம பாதுஷா தன்னைப்போலுள்ள கேவலம் ஒரு பாமரனை அன்பு கொண்டு இவ்வண்ணங் கேட்கவே அயாஸ் தன் கதையைச் சொல்லலுற்றான். அச்சபையிலுள்ள யாவரும் கேட்டு வந்தனர். பாதுஷாவின் கிருபையினால் எந்நாளும் சுகசமாதானத்துடன் காலத்தைக் கழித்து வந்த அச்சபையிலுள்ள அனைவரது தேகங்களிலுள்ள உரோமங்களும் சிலிர்த்தன. சிலர் கண்களைக் கொட்டாது வாய்கள் திறந்த வண்ணமிருந்தனர். சிலர் தலைகளை ஆட்டிய வண்ணமிருந்தனர். 'அல்லா குதா!' எனச் சிலர் துக்கத்தோடு பகர்ந்தனர். இவ்வண்ணம் அத்தர்பாரிலுள்ள யாவரும் அயாவின் கர்ம கதையைக் கேட்டுத் துக்கத்திலாழ்ந்தனர். கல்லையுங் கரைக்கும் அயாவினது விருத்தாந்தத்தைக் கேட்டுவந்த அக்பரது கண்கள் நீரால் நிரம்பின. அதிகமாய்ப் பகருவானேன்? சபையிலுள்ள எல்லோரது நேத்திரங்களிலும் கங்கையும் யமுனையுமாகவே இருந்தன. இவைகளைக் கண்ணுற்றுவந்த அயாஸ் தன் மனதில் "ஈசுவரா! நீ இவ்வுலகில் என்ன சமத்காரத்தைச் செய்கின்றனை? ரத்த சம்பந்தமுள்ள ஜனங்கள் என்னை வெறுக்கவும் அன்னிய தேசத்திலுள்ள ஜனங்கள் என்னைக்கண்டு கண்ணீர் பெருக்கவும்! தேவா! உனது விளையாட்டின் விசித்திரத்தை யாதெனப் பகருவேன்!" என்றனன். பிறகு பாதுஷாவும் அச்சபையிலுள்ளவரனைவரும் அவசரத்துடன் தத்தம் கண்களைத் துடைத்துக் கொண்டனர். பாதுஷா அயாஸுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக வாக்களித்த பின்னர் வழக்கப்படி புதிய வஸ்திரங்களை அயாஸுக்கீந்து அவனைக் கௌரவப்படுத்தித் தன் மந்திரிகளிலொருவனாக நியமித்தான். தர்பாரும் கலைந்தது.

(தொடரும்.)

நான் யார்?

(ஸ்வாமி சுந்தரானந்தர்).

[திருவண்ணாமலையில் பிரஹ்மானந்த சொரூபராய் வீற்றிருக்கும் பகவான் ஸ்ரீரமண ரிஷி அவர்களிடமிருந்து பக்தர்களால் சம்பாஷணை மூலமாக கிரகிக்கப்பெற்றது].

வினா:—நான் யார்?

விடை:—ஸப்த தாதுக்களாலாகிய ஸ்தூல தேகம் நானன்று. சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம் என்று சொல்லப்பட்ட பஞ்ச விஷயங்களையும் தனித்தனியே அறிகின்ற சுரோத்திரம்(காது), ஹஸ்தம் (கை), சக்ஷுஸ் (கண்), ஜிஹ்வா (நாக்கு), கிராணம் (மூக்கு), என்கிற ஞானேந்திரியங்கள் ஐந்தும் நானன்று. வசனம், கமனம், தானம், விஸர்ஜனம், ஆனந்தம் என்கிற இவ்வைந்து தொழில்களையும் செய்கிற கர்மேந்திரியங்கள் ஐந்தும் நானன்று. சுவாசாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி ஐந்து வாயுக்களும் நானன்று. நினைக்கின்ற மனமும் நானன்று. சர்வ விஷயங்களும் சர்வ தொழில்களும் அற்று விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமும் நானன்று.

வினா:—இவை யெல்லாம் நானில்லாவிடில் பின்னர் நான் யார்?

விடை:—மேற் சொல்லிய யாவும் நான் அல்ல என்று உறுதியுடன் தனித்துநிற்கும் அறிவே நான்.

வினா:—அறிவின் சொரூபமென்ன?

விடை:—அறிவின் சொரூபம் சச்சிதானந்தமே.

வினா:—அச்சொரூப தரிசனம் எப்போது கிடைக்கும்?

விடை:—த்ருச்யமாகிய (பார்வைக்குட்பட்ட) ஜகம் நீங்கிய விடத்து அத்ருச்யமாகிய சொரூப தரிசனமுண்டாகும்.

வினா:—தோன்றுகின்ற (ஜகமுள்ள) போதே சொரூப தரிசனம் உண்டாகாதோ?

விடை:—உண்டாகாது.

வினா:—ஏன்?

விடை:—கற்பித சம்பந்தமாகிய ஞானம் நீங்காவிடத்து ரஜ்ஜுவாகிய அத்ருச்யமாகிய ஞானம் தோன்றாது.

வினா:—த்ருச்யமாகிய ஜகம் எப்போது நீங்கும்?

விடை:—சர்வ அறிவிற்கும் சர்வ தொழிலுக்கும் காரணமாகிய மனம் அடங்கினால் ஜகம் மறையும்.

வினா:—மனதின் சொரூபமென்ன?

விடை:—மனமென்பது ஆத்ம சொரூபத்திலுள்ள ஒரு சக்தி. அதுசகல நினைவுகளையும் தோற்றுவிக்கிறது. நீக்கிப் பார்க்கின்றபோது தனியாக மனம் என்று ஒரு பொருளில்லை, ஆகையால் மனதின் சொரூபம் நினைவே. நினைவுகளைத் தவிர்த்து ஜகமென்று ஒரு பொருளில்லை. ஆகையால் மனதின் சொரூபம் நினைவே. நினைவுகளைத் தவிர்த்து ஜகமென்று ஒரு பொருள் அன்னியமாயில்லை. தூக்கத்தில் நினைவுகளில்லை; ஜகமுமில்லை. ஜாக்கிர சொப்பனங்களில் நினைவுகளும் ஜகமும் உண்டு. சிலந்தியானது எப்படித் தன்னிலிருந்து வெளியில் நூலை நூற்று மறுபடியும் தன்னுள்ளே இழுத்துக் கொள்ளுகின்றதோ அது போலவே மனமும் தன்னிடத்திருந்து நினைவாகிற ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னுள்ளேயே ஒடுக்கிக் கொள்ளுகின்றது. மனம் ஆத்ம சொரூபத்திலிருந்து பிரிந்து வெளிப்படும்போது ஜகம் தோன்றும். சொரூபம் தோன்றாது. சொரூபம் தோன்றும்போது (பிரகாசிக்கும் போது) ஜகம் தோன்றாது. மனதின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டே போனால் 'தான்' என்பதே மனமாக முடியும். 'தான்' என்பது ஆத்ம சொரூபமே. மனமானது எப்போதும் ஒரு ஸ்தூலத்தை அனுசரித்துக் கொண்டேயிருக்கும்; தனியாக நிற்கிறதில்லை. மனமே சூக்ஷ்ம சரீரமென்றும் ஜீவனென்றும் சொல்லப்படுகிறது.

வினா:—மனதின் சொரூபத்தை விசாரித்தறியும் மார்க்கம் என்ன?

விடை:—இத்தேகத்தில் 'நான்' எனக் கிளம்புகின்றதெதுவோ அதுவே மனமாம். 'நான்' என்கிற நினைவு தேகத்தில் முதலில் எவ்விடத்தில் தோன்றுகிறதென்று விசாரித்துக் கொள்ளவேண்டும். அங்ஙனம் விசாரித்தால் அந்த நினைவு முதலில் உதிப்பது இருதயத்திலென்று தெரியவரும். அதுவே மனதின் இருப்பிடம். 'நான் யார், நான் யார்' என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட அந்தவிடத்தில்தான் கொண்டு போய் விடும். மனதிற் தோன்றுகின்ற நினைவுகள் எல்லாவற்றிற்கும் 'நான்' என்கிற நினைவே முதல்

நினைவு. இது எழுந்த பிறகே ஏனைய நினைவுகள் எழுகின்றன. தன்மை தோன்றிய பிறகே முன்னிலை படர்க்கைகள் தோன்றுகின்றன. தன்மையின்றி முன்னிலை படர்க்கைகளிரா.

வினா:—மனம் எப்படி அடங்கும்?

விடை:—'நான் யார்' என்கிற விசாரணையினாலேயே மனம் அடங்கும். 'நான் யார்' என்கிற நினைவு மற்ற நினைவுகளையெல்லாம் ஒழித்து மனதை நிர்மலமாக்கி விடுவதால் அப்போதுதான் மனம் தானும் அடங்கும். அதன் பிறகே சொரூப தரிசனம் உண்டாகும்.

வினா:—'நான் யார்' என்கிற நினைவை சதா காலமும் பிடிக்கும் மார்க்கம் என்ன?

விடை:—பிற எண்ணங்கள் எழுந்தால் அவற்றைப் பூர்த்தி பண்ணுவதற்கு எத்தனியாது அவைகள் 'யாருக்கு உண்டாயிற்று' என்று விசாரிக்க வேண்டும். எவ்வளவு எண்ணங்கள் எழினும் என்ன? ஒவ்வொரு எண்ணமும் கிளம்பும்போதே 'இது யாருக்கு உண்டாயிற்று' என்று விசாரித்தால் 'எனக்கு' என்று தோன்றும். 'நான்' என்பது யார் என்று விசாரித்தால் மனம் தனதிருப்பிடத்திற்குத் திரும்பிவிடும்; எழுந்த எண்ணமும் அடங்கி விடும். இப்படிப் பழகப் பழக மனதிற்குத் தன்னிருப்பிடத்தில் தங்கி நிற்கும் சக்தி அதிகரித்துக்கொண்டு வரும். மனமானது மூளை இந்திரியங்கள் மூலமாய் வெளிப்படும்போது நாமரூபங்கள்—நினைவுகள் — தோன்றுகின்றன. இருதயத்திற் தங்கும்போது நாமரூபங்கள் மறைகின்றன. மனதை அதனிருப்பிடமாகிய இருதயத்தில் வைத்துக்கொண்டிருப்பதுதான் அகம், அந்தர்முகம் எனச் சொல்லப்படும். இவ்விதமாக மனம் இருதயத்திற் தங்கவே சகல வித நினைவுகளும் அடங்கும். எப்போதுமுள்ள வஸ்து எதுவோ அது மாத்திரம் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அப்போது 'தான்' என்பது விளங்கும். எதைச் செய்தாலும் 'நான்' என்கிற அகங்கார மற்றுச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தன் சொந்த மனைவியும் ஜகதீச்வரி போன்று தோன்றுவாள். எல்லாரும் சிவசொரூபமாகத் தோற்றுவர்.

வினா:—மனம் அடங்குவதற்கு வேறு உபாயங்கள் இல்லையா?

விடை:—விசாரணையைத் தவிர வேறு உபாயங்களில்லை. மற்ற உபாயங்களினால் அடக்கினாலும்கூட மனம் அடங்கினாற் போலிருந்து மறுபடியும் கட்டுக்கு மீறிக் கிளம்பிவிடும். பிராணாயாமத்தினாலும் மனம் அடங்கும். ஆனால் பிராணன் (மூச்சு) அடங்கியிருக்கும் வரை மனமும் அடங்கியிருந்து பிராணன் (மூச்சு) வெளிப்படும்போது மனமும் வெளிப்பட்டு வாசனை வசத்தாய் அலையும். மனதிற்கும் பிராணனுக்கும் இருப்பிடம் ஒன்றே. நினைவே மனதின் சொரூபம். நான் என்கிற நினைவே மனதின் முதல் நினைவு; அதுவே அகங்காரம். எங்கிருந்து அகங்காரம் உற்பத்தியோ அங்கிருந்துதான் மூச்சும் கிளம்புகிறது. ஆகையால் மனமடங்கும் போது பிராணனும், பிராணனடங்கும்போது மனமும் அடங்கும். பிராணனானது மனதின் ஸ்தூல சொரூபமென்று சொல்லப்படும். மனம் மரணகாலம் வரையில் பிராணனை உடலில் வைத்திருந்து உடல் மரிக்கின்ற காலத்தில் பிராணனையும் கூடவே கவர்ந்து கொள்ளுகிறது. ஆகையால் பிராணாயாமம் மனதை யடக்கச் சிறிது சகாயமாயிருக்குமேயல்லாது முழுதும் அடக்கச்

சக்தி வாய்ந்ததல்ல. பிராணாயாமத்தைப்போலவே மூர்த்தித் தியானம், மந்திரஜபம், ஆகாரநியமம் ஆகிய இவைகளும் மனதை யடக்குவதற்குச் சகாயங்களே. மூர்த்தித் தியானத்தாலும் மந்திர ஜபத்தாலும் மனம் ஒரே இடத்தில் லயிக்கிறது. மனம் யானைத் துதிக்கை போன்று சதா சலித்துக்கொண்டே இருக்கும் யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்தால் எப்படி அதையே பற்றிக்கொண்டு வேறொன்றையும் பற்றாமற் செல்லுகிறதோ அப்படியே மனதையும் ஏதோ ஒரு ரூபம் அல்லது நாமத்திற் பழக்கினால் அதையே பற்றிக் கொண்டிருக்கும். மனம் அளவிறந்த நினைவுகளாக விரிந்தால் ஒவ்வொரு நினைவும் பலம் அற்றதாகின்றது. நினைவுகள் அடங்க அடங்க மனம் பலம் அடைகின்றது. இப்படியே ஏகாக்கிரத் தன்மையை யடைந்த மனதிற்கு ஆன்ம சக்தி சுலபமாய் சித்திக்கும். மிக சாத்விக ஆகாரத்தால் மனதின் சத்துவ குணம் விருத்தியாகி ஆத்மவிசாரத்திற்குச் சகாயம் செய்கின்றது. ஆகையால் எல்லா நியமத்திலும் ஆகார நியமமே சிறந்தது.

வினா:—விஷயவாசனைகள் (நினைவுகள்) கடலின் அலைபோன்று அளவற்றனவாய்த் தோன்றுகின்றனவே, அவை எப்போது நீங்கும்?

விடை:—சொரூபத்தியானம் கிளம்பக் கிளம்ப, முற்ற முற்ற, சகல நினைவுகளும் அழியும்.

வினா:—தொன்று தொட்டு வருகின்ற சகல விஷய வாசனைகளும் நீங்கி சொரூபமாத்திரமாய் இருக்க முடியுமா? சாத்தியமா?

விடை:—'முடியுமா, முடியாதா' என்கின்ற சந்தேக நினைவுகளுக்கு இடம் கொடாமல் சொரூப தியானத்தையே ஒரே விடாப் பிடியாய்ப் பிடிக்கவேண்டும். ஒருவன் எவ்வளவு பாபியாயிருந்தபோதிலும் 'நான் பாபியாயிருக்கிறேனே, எப்படிக் கடைத் தேறப் போகிறேன்' என ஏங்கியழுதுகொண்டிருந்தால் அவன் கடைத்தேறுவது அருமை.

शंशयात्मा विनश्यति

'சந்தேகமுள்ளவன் நாசமடைகிறான்' எனக் கூறப்பட்டுள்ளது. எவன் 'நான் பாபி' என்ற நினைப்பைவிட்டு சொரூபத் தியானத்தில் ஊக்கமுள்ளவனாக இருக்கின்றானோ அவனே கடைத்தேறுபவன்.

வினா:—விசாரணை எதுவரை வேண்டும்?

விடை:—மனதின்கண் எதுவரையில் விஷய வாசனைகள் இருக்கின்றனவோ அதுவரை 'நான் யார்' என்கிற விசாரணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத்தோன்ற அவைகளை விசாரணையால் நசிப்பிக்க வேண்டும். சொரூபத்தை யடைகின்றவரையில் விசாரணையை விடக்கூடாது. கோட்டையில் எதிரிகள் உள்ளவரையில் வெளியே வந்து கொண்டேயிருப்பார்கள். வரவர வெட்டிக்கொண்டேயிருந்தால் கோட்டை கைவசப்படும்.

வினா:—சொரூபத்தின் இயல்பு என்ன?

விடை:—பதார்த்தமாயுள்ள ஆத்ம சொரூபம் ஒன்றே. ஜக, ஜீவ, ஈச்வரர்கள் சிப்பியும் வெள்ளியும் போன்று கற்பனைகள். இவை மூன்றும் ஏககாலத்திற் தோன்றி ஏககாலத்தில் மறைகின்றன. 'நான்' என்ற நினைவு கிஞ்சித்தும் இல்லாத இடமே சொரூபமாகும். அதுவே மௌனம் எனப்படும். சொரூபமே கடவுள்; சொரூபமே நான்; சொரூபமே ஜகம்.

வினா:—பக்தருள் மேலான பக்தன் யார்?

விடை:—எவன் தன்னையே கடவுளாகிய சொரூபத்தில் தியாகம் செய்கின்றானோ அவனே சிறந்த பக்தனாவான்.

வினா:—வைராக்கியமாவது யாது?

விடை:—எந்தெந்த நினைவுகள் உற்பத்தி யாகின்றனவோ அவைகளை யெல்லாம் ஒன்றுகூட விடாமல் உற்பத்தி ஸ்தானத்திலேயே நசுக்குவதே வைராக்கியமாகும். முத்துக் குளிப்போன் தன்னிடையில் கல்லைக்கட்டிக் கொண்டு முழுகிக் கடலினடியிலிருக்கும் முத்தை எப்படி எடுக்கின்றானோ அப்படியே வைராக்கியத்துடன் தனக்குள் ஆழ்ந்து முழுகி ஆத்ம முத்தை யடைதல் வேண்டும். நிரந்தர சொரூப ஸ்மரணை யிருந்தால் அதுவே போதும்.

வினா:—ஒரு ஜீவனைக் கடவுளாலும் குருவாலும் சிவமாக்க முடியாதோ?

விடை:—கடவுளும் குருவும் முக்தியை யடைவதற்கு வழிகாட்டுவார்களேயல்லாது தாமாகவே ஜீவனை முக்தியில் சேர்த்தலியலாது. ஒவ்வொருவனும் தன்னுடைய முயற்சியினாலேயே கடவுள், குரு இவர்கள் காட்டிய வழியே நடந்து முக்தியடைதல் வேண்டும். தன்னைத் தன் ஞானக்கண்ணாலேயே பார்த்தல் வேண்டும். இராமன் எனபவன் தன்னை இராமன் என்றறியக் கண்ணாடி யெதற்கு?

வினா:—முக்தியில் விருப்பமுள்ளவனுக்கு தனக்கு அன்னியமாயுள்ள தத்துவங்களின் விசாரணை அவசியமா?

விடை:—நாவிதனின் குப்பையைக் கூட்டித் தள்ள வேண்டிய ஒருவன் அதில் இத்தனை மயிர்கள் உள்ளனவென்று கணக்கிடுவதாலும் அவற்றின் நீளம், நிறம் முதலியவைகளை ஆராய்வதாலும் என்ன பயன்? அப்படியே தன்னை யறியவேண்டிய ஒருவன் தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் தத்துவங்கள் அத்தனையும் சேர்த்துத்தள்ளாமல் அவைகளை ஆராய்வதால் யாது பயன்? ஒன்றுமேயில்லை. பிரபஞ்சத்தை ஒரு சொப்பனம்போல் எண்ணிக்கொள்ளவேண்டியது.

வினா:—முமுக்ஷுக்களுக்கு நூல்களைப் படிப்பதால் பிரயோஜன முண்டா?

விடை:—எந்த நூலிலும் முக்தியடைவதற்கு மனதை யடக்க வேண்டுமென்றே சொல்லப்பட்டிருக்கின்றமையால் மனோ நிக்கிரகமே நூல்களின் கருத்தென்று அறிந்து கொண்ட பிறகு நூல்களையளவின்றிப்படிப்பதால் பயனில்லை. மனதை யடக்கத் தன்னை 'யார்' என விசாரிக்கவேண்டுமே யல்லாது நூல்களில் விசாரிப்பதெப்படி? 'தான்' என்பது பஞ்ச கோசங்களுக்குள்ளே யிருக்கும் வஸ்து. நூல்களோ அவைகளுக்கு வெளியிலிருப்பன. ஆகையால் பஞ்ச கோசங்களையும் நீக்கி விசாரிக்க வேண்டிய 'நான்' என்னும் பொருளை நூல்களில் விசாரிப்பது வீணே. சதாகாலமும் மனதை ஆத்மாவில் வைத்திருப்பதற்குத் தான் 'ஆத்ம விசாரம்' எனப் பெயர். கற்றவையனைத்தையும் ஒரு காலத்தில் மறக்கவேண்டியதாயும் முடியும், நேரிடும்.

வினா:—சுகமாவது யாது? ஆத்மாவின்கண் உள்ளதா? அல்லது பிரபஞ்சப் பொருள்களில் உள்ளதா?

விடை:—சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே. சுகம்வேறு, ஆத்ம சொரூபம் வேறன்று. ஆத்ம சுகம் ஒன்றே உள்ளது. அதுவே சத்தியமானது. பிரபஞ்சப் பொருளில் ஒன்றிலாவது சுகமென்பது கிடையாது. அவைகளிலிருந்து சுகம் கிடைக்கிறதாக நாம் நமது அவிவேகத்தினால் நினைக்கின்றோம். உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகின்ற

போதெல்லாம், மனம் தனது யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தையே அநுபவிக்கின்றது. அப்படியே தூக்கம், சமாதி, மூர்ச்சை இவைகளிலும், இச்சிக்கின்ற பொருள் லபிக்கும்போதும் வெறுக்கும் பொருள் நாசமடையும் போதும், மனம் அந்தர் முகமாகி ஆத்ம சுகத்தையே அநுபவிக்கின்றது. மரத்தினடியில் நிழல் சுகமாயிருக்கின்றது. வெளியில் சூரிய வெப்பம் கொடுமையாக இருக்கின்றது. வெளியில் இருக்கும் ஒருவன் நிழலிற் சென்று குளிர்ச்சி யடைகின்றான். சிறிது நேரத்திற்குப் பிறகு வெளியிற் கிளம்பி வெப்பத்தின் கொடுமைக்கு ஆற்றாது மறுபடியும் மரத்தின்கீழ் வருகின்றான். இவ்வாறு நிழலிலிருந்து வெயிலிற் போவதும் வெயிலினின்று நிழலுக்கு வருவதுமாக இருக்கின்றான் விவேகமற்றவன். ஆனால் விவேகமுள்ளவனோ நிழலை விட்டு நீங்கான். அப்படியே ஞானியின் மனமும் பிரம்மத்தை விடுகின்றதில்லை. ஆனால் அஞ்ஞானியின் மனமோ பிரபஞ்சத்தில் திரிந்து துக்கப்படுகிறதும், சிறிது நேரம் பிரம்மத்திற்குத் திரும்பி சுகத்தை யடைகின்றதுமாக இருக்கின்றது. ஜகமென்பது நினைவே. ஜகம் மறைகின்றபோது (நினைவற்றபோது) மனம் ஆநந்தத்தை யடைகின்றது. ஜகம்தோன்றுகின்றபோது துக்கத்தை அநுபவிக்கிறது.

வினா:—ஞான திருஷ்டி என்றால் அர்த்தமென்ன?

விடை:—சும்மா யிருப்பதற்குத்தான் ஞான திருஷ்டி எனப்பெயர். சும்மா யிருப்பது மனதை ஆத்ம சொரூபத்தில் லயிக்கச் செய்வதே யன்றிப் பிறர் கருத்தறிதல், முக்கால முணர்தல், தூர தேசத்தில் நடப்பன அறிதல் ஆகிய இவை ஞானதிருஷ்டி யன்று.

வினா:—ஞானத்திற்கும் நிராசைக்கும் சம்பந்தமென்ன?

விடை:—நிராசையே ஞானம். நிராசைவேறு, ஞானம் வேறன்று. ஞானம் என்பது ஒரு பொருளும் தோன்றாதிருப்பது. நிராசையென்பது ஒரு பொருளிலும் மனம் செல்லாதிருப்பது.

வினா:—விசாரணைக்கும் தியானத்திற்கும் என்ன பேதம்?

விடை:—தியானமாவது தன்னை பிரும்மம் என்றும் சச்சிதானந்தம் என்றும் பாவித்திருப்பது. தன்னிடத்திலேயே மனதை வைத்துக்கொண்டிருப்பது விசாரணை.

வினா:—ஆவியை ஈசனுக்கு அளிப்பது என்றால் அர்த்தமென்ன?

விடை:—ஆத்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனைகள் கிளம்புவதற்கு இடங்கொடாமலிருப்பதே ஈசனுக்கு ஆவியை யளித்தலாம்.

வினா:—முக்தி யென்றால் என்ன?

விடை:—'பந்தத்திலிருப்பவன் யார்?' என விசாரித்துத் தெளிதலே முக்தி. தன்னுடைய யதார்த்த சொரூபத்தைத் தெரிந்து கொள்வதே முக்தி.

[பத்திராதிபர் குறிப்பு:—

ஒவ்வொரு சோமவாரமும் மௌன விரதம் புரிந்து அடிக்கடி உண்ணா விரதத்தையும் கையாண்டு உலகின் கண்ணுள்ள எல்லோரிடமும் ஏக பாவத்துடன் அன்பென்னும் அமுதைப்பெருக்கி ஊட்டி வரும் மகாத்மா காந்தியவர்களே மேற்சொல்லிய ஆன்ம சக்தியின் ஒப்பிலா அத்தாக்ஷியாவார். அவர் கூறும் ஒவ்வொருசொல்லும், எழுதும் ஒவ்வொரு வார்த்தையும், செய்யும் ஒவ்வொரு காரியமும், மேனாட்டார், கீழ் நாட்டார், வேண்டியவர், வேண்டாதவர் என்கிற வித்தியாச மில்லாமல்

ஆண் பெண் அடங்கலாக இப்பூலோகத்திலுள்ள சகல ஆன்மராசிகளின் மனதைக்காந்தம்போல் வசியப்படுத்துவதின் காரணம் அம்மகானின் அபூர்வ ஆன்மசக்தியே யென்பதில் தடையுண்டோ. மனதைச் சிற்றின்ப விஷயங்களிற் செல்லவிடாதடக்கி ஆன்ம விசாரத்தைக் கைக்கொண்டு, ஆன்மசக்தியைப் பெருக்க நம் பண்டையகால அனுஷ்டானப்படி பிரம்மசர்யம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்னும் நான்கு வருணாச்சிரம தர்மங்களை வயதுக்கிரமப்படி முறையே அனுஷ்டிப்பதுதான் சரியான சாதகமென்பதை அவர் நமக்கு சதாகாலமும் உபதேசித்து வருகிறார். ஜன முன்னேற்றத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் இதுவே அஸ்திவாரமாகும். இதைப்பின்பற்றி நடப்பதே நமது உயர்தர லக்ஷியமாக இருக்கவேண்டும். இது சித்தியாவதற்கு ஈசனருள் புரிவாராக. சுபம்.]

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்.)

(476-ம் பக்கத் தொடர்ச்சி.)

கூப்ளேகான் பிறந்த தினக் கொண்டாட்டம்.

விரிவஞ்சி உண்டிவகைகளையும், அவைகளின் சுசிருசியையும், பரிமாறுகையில் நடக்கும் சிறப்பையும் விமரிசையையும் நான் இங்கு வருணிக்கவில்லை.

செப்டம்பர்மீ 28உ கூப்ளேயின் பிறந்த நாள். அன்றையதினத்தைத் தார்த்தார்களெல்லாம் ஒரு பெருந் திருநாளாகக் கொண்டாடுகின்றனர். கூப்ளேகானும் தார்த்தார்களது வருஷப்பிறப்பான பிப்ரவரி மாதம் முதல் தேதிக்குப்பின் தமது பிறந்த நாளையே வருஷத்திலுள்ள மற்றெல்லாத்தினங்களிலும் மிகச்சிறப்புடனும் சிரத்தையுடனும் கொண்டாடி வருகின்றார்.

அன்றையதினம் அவர் அதிக விலையுள்ள பொற்கவசம் அணிந்து கொள்வார். அவரது பிரபுக்களிலும் வீரர்களிலும் இரண்டாயிரம் பெயர்கள் தங்களுக்கு அரசனால் அளிக்கப்பட்ட பொன்னிறமான பட்டு அங்கிகளையும் பொன்வேலை, வெள்ளிவேலைகள் செய்யப்பட்ட அரைஞாண்களையும், பாதரக்ஷைகளையும் அணிவார்கள். கூப்ளேகானுக்கு அடுத்தபடியான அந்தஸ்துள்ளவர்கள் முத்தாபரணங்களையும் அதிக விலையுள்ள அங்கிகளையும் அணிந்து கொள்வார்கள் வருஷத்திலுள்ள பதின்மூன்று மாதங்கள் ஒவ்வொன்றிலும் வரும் பௌர்ணமி தினத்திலும் இவர்கள் இவ்வாறு அலங்காரஞ்செய்து கொள்ளுவார்கள். அப்போது இவர்களெல்லாம் அரசர்களைப்போலவே விளங்குவார்கள்.

கூப்ளேகானது அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களும் சீமான்களும் பிரபுக்களும் தங்களது சக்கரவர்த்தியின் பிறந்த நாளன்று அவருக்குக் காணிக்கைகள் அனுப்புவது வழக்கம்.

சக்கரவர்த்தியின் கீழ் அந்தஸ்தும் அதிகாரமும் பெற விருப்பமுடையவர்கள் அவ்விஷயங்களைக் கவனிக்கவென்று ஏற்பட்டுள்ள பனிரண்டு பிரபுக்களிடம் விண்ணப்பம் செய்து

கொள்ளுவார்கள். அவர்கள் செய்யும் தீர்மானமே சக்கரவர்த்தியினது திருவுள்ளமென்று மதிக்கப்பட்டு வருகின்றது.

இன்னாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும், யூதர்களும், ஸரேஸர்களும், தார்த்தார்களும், விக்கிரகாராதனைக்காரர்களும், எம்மதத்தினரும், எவ்வகையினரும் சக்கரவர்த்திக்கு நீண்ட ஆயுளையும், நித்திய க்ஷேமத்தையும், குறைவற்ற செல்வத்தையுமளிக்குமாறு தத்தம் தெய்வங்களை மன்றாடிப் பிரார்த்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

தார்த்தாரிய வருஷப்பிறப்பாகிய பிப்ரவரிமீ முதல் தேதியன்று சக்கரவர்த்தியும், தார்த்தார்களெல்லாரும், எங்கிருந்தபோதிலும், ஒரு பெருத்த பண்டிகை கொண்டாடுவார்கள். ஸ்திரீ புருஷர்களெல்லாம், வருஷமுழுவதும் தங்களுக்கு நல்லதிர்ஷ்டமே யிருக்கவேண்டுமென்று கருதி வருஷப்பிறப்பன்று வெள்ளை வஸ்திரங்களை யணிவார்கள்.

நகரங்களில் அரசர்களும், மாகாண அதிபதிகளும் தமது கடமைகளை நினைத்தவராய் இத்தினம் சக்கரவர்த்திக்குப் பொன்னாலும் வெள்ளியாலும் செய்த சாமான்களையும், முத்துக்களையும், விலையுயர்ந்த வைரங்களையும், கணக்கற்ற வெள்ளை வஸ்திரங்களையும், வெள்ளை நிறமான வேறு வஸ்துக்களையும், அநேகம் வெண்ணிறமான குதிரைகளையும் கப்பமாக அனுப்புவார்கள். மற்றையோர் வருஷப்பிறப்பன்று வெள்ளை நிறமான வஸ்துக்களை வெகுமானமாக ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக்கொள்வார்கள். சக்தியுள்ளவர்கள் ஒவ்வொரு இனத்திலும் ஒன்பதொன்பது உருப்படிகள் இனமாக அளிப்பது வழக்கம். அதாவது, குதிரைகளை அனுப்புவோன் ஒன்பதொன்பது, அல்லது எண்பத்தொரு உருப்படிகளை யனுப்புவான். பொன் சாமான்கள், ஆடைகள் முதலிய வேறு சாமான்களும் இப்படியே இக்கணக்கின்படி அரசனுக்குச் சில சமயங்களில் லக்ஷக்கணக்காகக் கப்பமாக வந்து குவிகின்றன.

இந்தச் சுபதினத்தில், அரசனது உத்தியோகஸ்தர்கள் பலவிதமான மிருகங்களுடையவும் பக்ஷிகளுடையவும் உருவங்களாற் சித்திரிக்கப்பட்டுள்ள படாக்களால் அலங்கரிக்கப்பட்ட ஐயாயிரம் பட்டத்து யானைகளின்மேல் பொற்பாத்திரங்களும்வெள்ளிப்பாத்திரங்களும்நிறைந்த பெட்டிகளையேற்றி அரண்மனைக்குக் கொண்டு வருவார்கள். இவ்வாறே அரண்மனைக்கு வேண்டிய வேறு சாமான்களைப் பட்டு வஸ்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒட்டகைகளின் மேல் ஏற்றிக்கொண்டு வருவார்கள்.

இன்னாட் காலையில் சக்கரவர்த்தியின் தளகர்த்தர்கள், பிரபுக்கள், போர் வீரர்கள், வைத்தியன்மார், சோதிடர்கள், மாகாணங்களுக்கும் சேனைகளுக்கும் அதிபர்களாயுள்ளவர்கள், மற்றைய பெரிய உத்யோகஸ்தர்கள் ஆகிய இவர்களெல்லாம் சபா மண்டபத்தில் சக்கரவர்த்தியின் எதிரில் வந்து சேர்வார்கள். இந்நெருக்கத்தினால் மண்டபத்தில் இடங்கிடைக்கப்பெறாதார் வேறொரு இடத்திற் தங்களது அந்தஸ்துக்கும் மரியாதைக்கும் தகுந்த ஸ்தானங்களிலிருந்து கொண்டு மண்டபத்தில் நடைபெறும் சடங்குகளைக் கண்ணுறுவர்.

அப்பொழுது நமதுகுருமாருக்குச் சமமான பதவியிலுள்ள ஒரு தார்த்தாரிய குரு முதன் முதல் எழுந்திருந்து 'தலைவணங்கித் துதியுங்கள்' என்று உரத்துச்சொல்லுவான். அக்கணம் அங்கு கூடியிருக்கும் எல்லாரும் தங்கள் தலைகள் பூமியிற் படுமாறு குனிந்து வணங்குவார்கள். பின்பு அக்குரு "கடவுள் நமது சக்கரவர்த்திக்கு நீண்ட ஆயுளும் குறையாத

இன்முங்கொடுத்து ரக்ஷிப்பாராக" என்பான். அப்போது எல்லாரும் "கடவுள் அப்படியே அருள்புரியவேண்டும்" என்று பதிலுரைப்பார்கள். அப்புறம், அக்குரு, "கடவுள் நமது சக்கரவர்த்தியின் ராஜ்யம் பெருகவும் செழிக்கவுஞ் செய்வாராக; அவரது பிரஜைகளுக்கு சுகத்தையும் ஒற்றுமையையும் செழிப்பையுந் தந்து ரக்ஷிப்பாராக" என்பான். இதற்கும் எல்லாரும் "கடவுள் அவ்வாறே அனுக்கிரகிக்கட்டும்" என்பார்கள். இந்த ஆசீர்வாதங்களை நான்கு முறை சொல்லுவார்கள்.

இவ்வாறு வழிபாடு முடிந்த பின்னர் மேற்சொல்லிய குரு சகல அலங்காரங்களுடனும் விளங்குகின்ற ஒரு மண்டபத்தினுட் செல்வான்.

பின்பு எல்லாரும் தாங்கள் சக்கரவர்த்தியிடம் வைத்திருக்கும் பக்தியைக் காட்டுவதற்காக ஒரு தட்டில் வாசனைத்திரவியங்களிட்டுக் கொளுத்தி, அம்மண்டபத்திலுள்ள அரசனது பெயரெழுதப்பட்ட ஒரு சிவப்பு மேஜைக்கும் அம்மண்டபத்திற்கும் தூபங்காட்டித் தங்கள் தங்கள் இடஞ்சேர்வார்கள்.

இவையெல்லாம் நடந்தபின்தான் நான் மேலே சொன்ன கப்பங்கள் சக்கரவர்த்திக்கு அளிக்கப்படுகின்றன. கப்பங்கள் செலுத்தப்பட்டபின் முன் வருணித்தபடி விருந்தினரெல்லாம் தங்கள் தங்கள் மனைவிமாருடன் ஒழுங்காக வைக்கப்பட்ட கலங்களினெதிரேயிருந்து வெகு சிறப்பாக உண்டு குடித்துக் களிப்பார்கள்.

கடைசியாக, பழகிய சிங்கமொன்றைச் சக்கரவர்த்தியினிடம் கொண்டு வருவார்கள். அது தன் எஜமானனைப்பணிந்து கொஞ்சிக்கொண்டு அவரது காலடியில் ஒரு சாதுவான நாயைப் போற் கிடக்கும்.

சக்கரவர்த்தி கம்பலு நகரத்தில் வசிக்கும் டிஸம்பர், ஜனவரி பிப்ரவரி மாதங்களில் கத்தேயைச்சுற்றி யிருக்கும் மாகாணங்களிலுள்ள வேடரெல்லாம், கலைமான்கள், கரடிகள், சிறு மான்கள், காட்டுப்பன்றிகள், மான்கள் ஆகிய காட்டு மிருகங்களை வேட்டையாடிப்பிடித்து அவற்றை அவ்வம்மாகாண அதிகாரிகளிடங் கொண்டுவந்து சேர்ப்பார்கள். அரண்மனையிலிருந்து முப்பது நாட் பயணத்துள்ளிருக்கும் அதிகாரிகள் அம்மிருகங்களைக் கூண்டுகளிலடைத்து வண்டியிலோகப்பலிலோ ஏற்றிச் சக்கரவர்த்தியிருக்குமிடம் அனுப்புவார்கள். நாற்பது நாட் பயணத்திலுள்ளவர்கள் அம்மிருகங்களின் தோல்களை மாத்திரம் அனுப்புவார்கள். அத்தோல்கள் போர்க்கவசங்கள் செய்வதற்கு உபயோகமாகின்றன. சக்கரவர்த்தியிடம் வேட்டைக்கான கழுதைப் புலிகளும் ஓநாய்களும் அனேகம் உண்டு. பாபிலோனிலுள்ள சிங்கங்களினும் பெருத்த சிங்கங்களும் அவரிடமுண்டு. அவைகளின் வெளுப்பும் கருப்பும் சிவப்புமான ரோமங்கள் சிறு கிரணங்களைப்போல் பளபளவென்று மின்னுகின்றன. இச்சிங்கங்கள் கரடிகளையும், முட்பன்றிகளையும், சிறு மான்களையும், காட்டுக் கழுதைகளையும், காட்டெருதுகளையும் வேட்டையாடிப்பிடிக்கப் பழக்கப்படுகின்றன. அவ்வேட்டையில் சிங்கங்களின் வேகமும் தேர்ந்த பயிற்சியும் பார்க்க ஆச்சரியமாயிருக்கும். அச்சிங்கங்கள் குரூரமும் அடங்காத சுபாவமுமுடையவையாதலால் வேட்டைக்குச் செல்கையில் சாதாரணமாக இரண்டு சிங்கங்களை அவைகளுடன் பழகின ஒரு நாயுடன் ஒரு வண்டியில் அடைத்து, அவைகளின் வாசனை மற்றைய மிருகங்கள் மோப்பத்தினாலறிந்து ஓட்டம் பிடியாமலிருக்கு நிமித்தம், அவைகளைக் காற்று வருந்திசைக்கு எதிராகவுங் கொண்டு செல்வார்கள்.

சக்கரவர்த்தியிடம் முயல்களையும் சிறு மான்களையும் பெரிய மான்களையும் நரிகளையும் பிடிக்கப் பழக்கப்பட்ட கழுகுகளும் அனேகம் இருக்கின்றன. அவைகளிற் சில சிறிதும் அஞ்சாமல் ஓநாய்களையுங்கூட அதிக சிரமமும் ஆபத்துமின்றிப் பிடித்து விடுகின்றன.

சக்கரவர்த்தியின் சபையில் போயன், மிங்கன் என்ற இரண்டு சகோதரர்கள் இருக்கின்றனர். அவர்களுக்குத் தார்த்தாரிய பாஷையில் கியூர்க்கோ அல்லது வேட்டையில் தேர்ந்தவர் என்று பெயர். அவர்கள் ஒவ்வொருவனும் பதினாயிரம் ஜனங்களுக்கு அதிபதி. அவர்களுள் ஒருவனது ஆட்கள் சிவந்த ஆடைகளையும் மற்றையோனது ஆட்கள் வானிறமான நீல நிறத்த ஆடைகளையுமணிவார்கள். வேட்டைக்குச் செல்கையில் இவர்கள் வேட்டை நாய்களும் வேறு நாய்களுமாகப் பல ஜாதிகளைச்சேர்ந்த ஐயாயிரம் நாய்களுடன் இடசாரியிலொருவனும் வலசாரியிலொருவனுமாகச் செல்வார்கள். இதனால் அரசனும் அவரது பரிஜனங்களும் செல்லும்வழி ஒரு நாட் பயணமுள்ளதாக விருக்கும். இப்படிச் செல்வதால் ஒரு மிருகங்கூட இவர்களுக்குத் தப்புவதில்லை. இருமருங்கும் வேடர் சூழச் சக்கரவர்த்தி நடுவிற் செல்கையில் வேட்டை நாய்கள் முயல்களையும் கரடிகளையும் மற்றைய காட்டு மிருகங்களையும் துரத்திக்கொண்டு ஓடுவதைப்பார்ப்பது வெகு விநோதமாயிருக்கும்.

இவ்விரு சகோதரரும் அக்டோபர் மாதத்திலிருந்து மார்ச் மாதத்திற்குள்ளாக, ஆயிரம் மிருகங்களையும், பக்ஷிகளையும், குயில்களையும் மீன்களையும் அரண்மனையில் கொண்டுவந்து சேர்ப்பதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

அதிர்ஷ்டம்.

(ஸ்ரீமதி பத்மாவதி)

அதிர்ஷ்டமுள்ளவர்களுக்கு உலகில் எதுவும் ஜயிக்கும் என்று சொல்லுவது புதுமொழியன்று. பிரதி தினமும் சர்வ சாதாரணமாய்க் கண்டு கொண்டிருப்பதைப் புதுமை யென்று நினைப்பவருண்டா? ஆனால், அதைப்பற்றி யோசிப்பவர்களுக்குச் சிலவிஷயங்கள் விநோதமாகப்படலாம். அதிர்ஷ்டத்தைப்பற்றி வெகுவாய்க் கொண்டாடுவதே உலகியல்பு. ஒருவரும் குற்றம் கூறமுடியாத உயர்ந்த ஸ்தானத்தை அதற்களித்து அதன்முன் தலைவணங்குவதை நமது சிற்றறிவிற்கு ஒரு அத்தாட்சியாக நாம் எப்பொழுது தான் நினைக்கின்றோம்; இதனால்தானே "பிறந்தால் அதிர்ஷ்டமுள்ளவர்களா யிருக்கவேண்டும். இல்லாவிடில் ஜன்மமெடுப்பதே வீண்தான்" என்று சிலர் குறைகூறிக்கொள்ளுகிறார்கள். நமக்குப் புகழத்தக்க யோக்கியதையும் குணங்களுமிருந்தும், அதிர்ஷ்டமென்ப தொன்றில்லாவிடில், அவைகள் வெளியிட்டுப் பிரகாசிப்பது அபூர்வமாகிவிடுகின்றபடியால் அவைகளால் நமக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. ஆகாயம் மேகமற்றிருந்தாலல்லாது சிறந்த நக்ஷத்திர மண்டலத்தின் பேரொளியும் புலப்படுவது அரிதாகின்றதல்லவா?

"உலகில் ஜனங்கள் ஏற்றி வைக்கும் மதிப்புத்தானே" என்று நாம் அதைப்பற்றி அலக்ஷ்

யமாயிருப்பது எவ்வளவு அபூர்வமாயும், அப்படி இருப்பவர்களைக் காணும்பொழுது எவ்வளவு ஆச்சரியமாயும் தெரிகின்றது. அதிர்ஷ்டம் மேன்மேலும் வென்று வருவதன் காரணத்திற்கு நாம் அதிகம் சிரமப்படவேண்டியதில்லை. பெரிய மனிதர்களாய் விட்டால், பிறகு அவர்கள் செய்கைகள் யாவற்றிலும் நமக்குத் தானாகவே கௌரவம் விழுந்து விடுகிறது. வாழ்வில் வெற்றிக்கொடியை நாட்டியவர்களிடம் சிறு பிழைகளும் மறைந்து விடுகின்றனவென்று ஒரு சொல் வழங்குவதுண்டு. சாதாரண மனிதனொருவன் ஏதாவது ஒரு அபூர்வ விஷயத்தை எடுத்துச்சொன்னாலும், அதில் எவ்வளவு உண்மை இருக்கின்றதென்று கூடப் பாராமல் ஜனங்கள் சில சமயங்களில் அசட்டை செய்து விடுவார்கள். ஆனால் பெயர் பெற்றவர்களுடைய சொற்களில் தவறுவனவற்றைக்கண்டு பிடிக்க நாம் சிரமப்படுகிறோமா? அர்த்தமில்லாதவற்றிற்குக்கூட நாம் ஏதாவதொரு அர்த்தத்தை உண்டாக்கிக்கொண்டாடத் துவக்குவோம்.

அதிர்ஷ்டமுள்ளவர் புத்திசாலிகளாயிருக்கவேண்டுமென்பது ஒரு கணக்கில்லை. லக்ஷ்மியும் சரஸ்வதியும் சேர்ந்து ஓரிடத்தில் தங்குவதில்லையென்பது எவ்வளவு காலமாக வழங்கி வருகின்றது! அப்படியிருந்தும் வெற்றி ஏற ஏற அதற்குத்தகுந்த அபார புத்தியும் ஒருவருக்கிருப்பதாகவே நினைத்துக்கொள்ளுவதில் நமக்கு ஒரு சந்தேகமும் தோன்றுவதில்லை. பரீக்ஷையில் யாவரிலும் முதன்மையாகத்தேறிய பையன் சாதாரணமாக ஒப்பேறிய மற்றொரு பையனைவிட அறிவில் ஒன்றும் மேன்பட்டவனல்லவென்று சொன்னால் அதை ஒவ்வொருவரும் நம்புவது எளிதாகுமா? இச்சிறந்த கௌரவம் பின்பு அவன் மேன்மேலும் பெருமையை யடைவதற்கும் ஒரு வாயலாகி, ஜனங்களின் நன் மதிப்பை இன்னும் உறுதியாக்குகின்றது. குப்பையில் ஒளிரும் மாணிக்கம் போல் வறுமை, துர்த்தசை இவை மத்தியில் ஒருவர் பேரறிவுடன் பிரகாசிப்பதை நாம் பிரகிருதத்தில் கண்டு உணர்வதைவிட, புஸ்தகங்களிற்படித்து வியப்பும், அனுதாபமும் கொள்ளச் சித்தமாயிருப்போம்.

ஒரு உத்தியோகத்தில் முன்னுக்கு வராதவனைப்பார்த்து அவனுக்கிணங்கி ஆதரவுடன் பேச எப்பொழுதும் சாத்தியமாயிருக்கிறதா? சில சமயம் அசட்டையும், நகைப்பும் தோன்றாமலிருப்பதில்லை. ஒருவரும் அதிகமாய்க் கவனிக்காததினால் நம் மத்தியில் அவன் பின்னடைவதைக்காண அவன் முகக் களைக்கூட குன்றியிருப்பதாக நாம் எண்ணிக்கொள்ளுகிறோம். பொதுவாய் அப்படிப் பட்டவர்களுடைய செய்கைகளில் நம் கண்களுக்கு எதுதான் விசேஷத்தை யுண்டாக்குகின்றது? வீதியில் நடக்கும் பொழுது வழியில் தபாற்காரனைக்கண்டு அவன் தன் தபாலை வாங்கிக்கொண்டால், "அதிர்ஷ்டத்திற்குத்தகுந்த புத்திதானே இருக்கும்?" என்று பிறர் பரிகாசமாகவே நோக்குவார்கள். அதிர்ஷ்டத்திற்கும் புத்திக்கும் சம்பந்தமிருப்பது எப்பொழுதும் ஒரு விதியாயில்லாமலிருக்கும் பொழுது என்ன காரணத்தால் அவ்விதம் கூறுவது? பிறர் ஒத்துக்கொள்ளும்படி பெயர் பெற்றவர்கள் அவ்விதம் செய்வதைக்கண்டால், 'என்ன படாடோபமின்மை!" என்று அதிசயிப்பது சகஜமாகிறது. உலகத்தாரின் இருதயவஞ்சனையை ஒருவர் குற்றம் கூறி என்ன பயன்?

அதிர்ஷ்டமுள்ளவர்கள் தாங்கள் கூறும் வார்த்தைகளிற் கவனமில்லாமல் வரம்பு மீறினாலும் அதை அவர்கள் சுபாவமாகத் தள்ளிவிட யோசியார்கள். அவர்களின் சில்லரைத் தவறுதல்கள், நிதானமற்ற தன்மை, முன்

கோபம் இவையொன்றுமே பெரியகுற்றங்களாக மாட்டா. வாழ்வில் உயர் நலங்களை யடைந்தவர்களிடம் எது சிறந்த தைரியமாக விளங்குகின்றதோ அதுவே அவ்வண்ணமில்லாதவர்களிடம் பல சமயங்களில் விஷய மறியாத உதாசீன சுபாவமாக அவமதிக்கப்படுகின்றது. சுருக்கமாக, பக்ஷபாதமின்றிப்பார்ப்பது ஜனங்களுடைய இயல்பல்லவாதலால் ஒருவரிடம் உயர்வாக அமைந்திருப்பது மற்றவரிடம் வெகு சாதாரணமாய்த் தோன்றுவதற்குக் காரணத்தை நாம் தேடமுயலுவது வீணே.

அதிர்ஷ்டமென்பதென்ன? நாம் விரும்பியவைகளையடைந்து நாம் தொடங்கிய காரியங்களில் வெற்றியும் பெறுவதல்லவா? ஆனால் அவ்வெற்றியை உலகோர் வெற்றியாகக்கொண்டாடவிடாமல் நாம் கிலேசப்படுவானேன்? நாம் செய்து முடித்த காரியத்தைப்பற்றி—அல்லது நாம் பாடுபடும் உயர்ந்த விஷயத்தின்பொருட்டு—நியாயமான பெருமையும், சந்தோஷத்தையும் அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்க, உலகோரின் வெற்றி மதிப்பிலிருந்துதான் நாம் அவைகளைப்பெற வேண்டுமென்று நினைப்பது நமது யோசனைக்குறைவை நன்கு வெளிப்படுத்துகின்றதே யொழிய வேறல்ல. தமது ஒழுக்கமும், சத்திய நெறியும் பிழாது தம் கடமையைச்செய்து முடிப்பவரே வாழ்வில் உண்மையான வெற்றி கொண்டவர் என்று கூறினால், அதைத்தடுத்துச் சொல்லக்கூடியவர் யார்?

பார்வதகுமாரி.

இரண்டாம் பாகம்.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(480-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தாம் அத்தியாயம்.

கன்னிகைக் காட்சி.

பூபேந்திரநாதன் அதே தினம் பிற்பகலில் கன்னிகையைக் காண அந்தப்புரத்திற்கு அழைக்கப் பெற்றான். விமலை என்ற பரிசாரிகை அவனை அழைக்க வந்தாள். விமலை வயதானவளாயிருந்தும் அவள் முகத்தில் சிரிப்பின் செவ்வரி சோபித்துக் கொண்டிருந்தது. அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்—"இராஜகுமாரரே, பாட்டியம்மை கன்னிகையை மாளிகைக்கு வரவழைத்திருக்கிறார். அவளுடைய வருகையால் திருமாளிகை தகதகவென்று ஜொலிக்கிறது. பார்வைக்குப் பிரதிமையை விட நன்றாய் இருக்கிறாள். சமர்த்துள்ளவளாயும் பருவம் வாய்ந்தவளாயும் கூடத் தோற்றுகிறாள். தாங்கள் இன்று அவளையே விரும்புவீர்களென்று எனக்குத் தோற்றுகிறது."

பூபேந்திரநாதன் சொன்னான் — "விமலா, பேஷ், பிரதிமை என்ன பாவம் பண்ணினாள் நான் இவளை விரும்புவதற்கு? அவள் அழகுள்ளவளல்லவா?"

"ஏன் அழகில்லாமல், ஆனால் இவ்வளவு அழகுள்ளவளல்ல." இராஜகுமாரன் இதை

மறுத்து ஒன்றும் கூறாமலே விமலையுடன் அந்தப்புரம் சென்றான். அங்கே பாட்டியம்மையும் பரிசாரிகைகளும் மட்டுமேயன்றி அண்டை அயல் வீட்டுப்பெண்டுகள் பலரும் கூடியிருந்தார்கள். இராஜ குமாரனைக் கண்டவுடனே அவர்களெல்லோரும் ஒரு மெல்லிய ஆநந்த கோஷம் செய்து, கன்னிகை உட்கார்ந்திருந்த அறையின் கதவண்டையும் பலகணியின் பக்கத்திலும் போய் நின்றார்கள். இராஜ குமாரன் விமலையோடு அறைக்குட் சென்று பார்க்கையில், ஓர் அகன்ற இரத்தினக் கம்பளத்தின்மேல் தனக்கொத்த அந்தஸ்துள்ள சில பெண்களோடும் மாதர்களோடும் கூட கன்னிகை உட்கார்ந்திருந்தாள். பாட்டியம்மையும் மற்றுஞ் சில வயோதிக ஸ்திரீகளும் கொஞ்சம் எட்டி உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

பூபேந்திரநாதன் பாட்டியம்மைக்கு நமஸ்காரம் பண்ணி அவள் பணித்தபடி மஞ்சத்தின்மேல் உட்கார்ந்து ஒரு தடவை கண்ணோட்டமிட்டு அக்கன்னிகையை ஏற இறங்கப்பார்த்தான். அப்படிப் பார்த்ததிலிருந்து விமலை சொன்னது முற்றிலும் பொய்யல்லவென்று தெரிந்துகொண்டான். கன்னிகையின் மூக்கு கூர்மையாயும், உதடுகள் செந்நிறமாயும், நெற்றித்தடம் சிறுத்தும் பளபளப்பாயும், விழிகள் காதளவும் பாய்ந்து அகன்றும், புருவக்கொடிகள் கறுத்து மனோஹரமாயும் இருந்ததைப் போலவே முகக்காந்தி வசீகரமாயும், வடிவழகு நாணத்தோடும் மடத்தோடும் கூடியும், அங்கசோபை ரமணீயமாயும் விளங்கின. அவளுடைய உருண்ட தோள்கள் இரண்டும் மார்பகத்தின் இருபாரிசத்திலும் மிக்க வனப்புடன் விளங்க, அழகிய தளிர் போன்ற கைகள் அவளுடைய மடியில் அமர்ந்து செவ்வொளி வீசின. பூபேந்திரநாதன் அறையில் நுழைந்ததும், கன்னிகை நாணத்தால் தலைகுனிந்தாள். அவளுடைய இரண்டு கன்னங்களிலும் இருந்தாற்போலிருந்து செவ்வரி படர்ந்தது. அச்செவ்வரியானது இராஜ குமாரனுடைய ஆவல் நிறைந்ததெனினும் அடக்கமற்றதாகிய பார்வையைத் திரஸ்கரிப்பது போல் காணப்பட்டது. பாலிகையின் மார்பகம் பலமாயும் வேகமாயும் அடித்துக்கொள்வதானது இராஜ குமாரன் அங்கு தங்கியிருப்பதை ஆக்ஷேபிப்பது போலிருந்தது. பல படச்சொல்லியென்ன, அந்த நவயௌவனம் வாய்ந்த நங்கையின் சௌந்தரியத்தாலடிமை கொள்ளப்பட்ட இராஜ குமாரன் இடத்தையும் காலத்தையும் மறந்து அவளை இமை கொட்டாமல் பார்த்தவண்ணமாய் இருந்தான். சற்று நேரத்துக்குள் அவனுக்குச் சுய நினைவு வரவும், தனக்குள்ளேயே வெட்கி வேறு பக்கமாய்ப் பார்வையைத் திருப்பிக்கொண்டு, கிழவியை நோக்கி, "பாட்டி, இந்தப் பெண்ணின் பெயரென்ன?" என்று கேட்டான்.

"போ! நீயே கேழ்க்கிறது தானேடா, குழந்தாய்?"

இராஜ குமாரன் ஒன்றும் சொல்ல நாவெழாமல் தியங்கினான்; பாலிகையும் நாணத்தினால் இன்னும் அதிகமாய் மலைவுற்றாள்.

அங்கே உட்கார்ந்திருந்த ஸ்திரீகளெல்லாம் தன் பெயரைச் சொல்லும்படி அப்பெண்ணை உற்சாகப் படுத்தினார்கள். சரிசமானமான மாதர்கள் அவளுடைய மெல்லிய அங்கங்களில் தம் மெல்லிய விரல்களை வைத்துக் கிண்டி, 'உன் பெயரைச் சொல்லுகிறது தானேடி' என்று அடிக்கடி வற்புறுத்தலானார்கள். இவ்வாறு நாலாபக்கத்திலிருந்தும் உற்சாகப்படுத்தப் பெற்றும் அலைக்கப் பெற்றும் விதியின்றி அந்தப்பெண் கண்களைக் கீழே செலுத்திய வண்ணமாய் இனிமையும் மென்மையும் கொண்ட குரலில் கூறினாள் "உமாசுந்தரி" என்று.

ஆஹா! என்ன இனிமையான குரல், எவ்வளவு அழகிய பல்லொளி! பாலிகையின் ஒப்பற்ற ரூபலாவண்யம் இராஜகுமாரனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அவனுடைய தலை சுழலத்தொடங்கியது. திடீரென்று அவன் ஒன்றும் சொல்லாமலே அங்கிருந்து எழுந்துபோய் விட்டான்.

(தொடரும்)

ஜானகி.

ஒரு சிறு நாடகம்.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

ஸ்தலம்.—கீழ்ப்பாக்கத்தில் ஒரு பங்களா. டிராயிங் ரூமில் ஒரு வட்டமான மேஜையும், அதனருகில் இரண்டு நாற்காலிகளுமிருக்கின்றன. அம்மேஜையின்மேல் எழுதுவதற்கு வேண்டிய சகல சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர ஒரு சிகரெட் டின்னும், தீப்பெட்டியுமிருக்கின்றன. அந்த அறையின் சுவற்றில் ஒரு பெரிய கடியாரம் டிக்டிக் என்று சப்தித்துக்கொண்டிருக்கிறது. அந்த அறையை அடுத்திருந்த அறையின் கதவு திறந்திருக்கிறது.

பாத்திரங்கள்.—ஜானகியும், நாராயணனும்.

வேளை.—இரவு சுமார் பத்து மணி.

ஜானகி:—(நாற்காலியிலுட்கார்ந்த வண்ணம் கடியாரத்தை நோக்கி) என்ன! பதினொன்று அடிக்கப்போகிறதே! (கொஞ்சம் நிராசையுடன்) பதினொன்று! ஆயினும் இன்னும்—(இதற்குள் காலடி சத்தத்தைக் கேட்டு) வராப்போலிருக்கிறதே! (புஸ்தகத்தில் தன் மனதைச் செலுத்தியிருப்பதாகப் பாசாங்கு செய்கின்றனள்.)

நாராயணன் (கதவைத் திறந்து அவசரமாக ஜானகியின் பின்புறமாய் வந்து, அவளது தோளின்மேற் கையை வைக்க, அவள் தோளைக் குலுக்கிக்கொண்டு திரும்பிப் பாராது படித்துக் கொண்டிருக்கிறாள். நாராயணன் ஆச்சரியங்கொண்டு அவளை யுற்று நோக்க, ஜானகி கோபத்துடன் கையிலிருந்த புஸ்தகத்தை மேஜையின்மேலெறிந்துவிட்டு எழுந்திருக்க, நாராயணன் அவளது கரத்தைப் பற்ற யத்தனிக்கிறான்.)

ஜானகி:—என்னை விடுங்கள். என்மேற் கையை வைக்கவேண்டியது அனாவசியம். (அவசரமாக அறைக்குட் செல்ல, நாராயணன் ஆச்சரியத்துடன் உற்று நோக்குகின்றான். அறைக்குட்சென்று) என்னைப்பற்றி உங்களுக்கேன் கவலை! (நாராயணன் அவளைத் தொடர்ந்து அறைக்குட்செல்ல எத்தனிக்க, அவள் கதவைச்சாற்றித் தாளிடுகின்றனள்.)

நாராயணன்:—(திரும்பி வந்து நாற்காலியிலுட்கார்ந்து ஆச்சரியமுற்று) இன்று என்னதான் நடந்ததோ? இவளுக்கிவ்வளவு கோபம் வரக் காரணந்தானென்ன? ஒரு வேளை வேண்டுமென்றே இப்படிச்செய்கின்றாளோ! (அறைக்குள் என்னசெய்கிறாளென அறிய விரும்பிக் கதவருகிற் சென்று பார்க்க, அங்கே யாதொரு சத்தமும் வராதிருக்கக் கண்டு, ஜன்னலருகிற் சென்று சாய்வு நாற்காலியிற் படுத்து, அருகிலிருந்த வர்த்தமானப் பத்திரிகையைப் பிரித்து, அவளது செய்கையைக் குறித்துக் கொஞ்சமேனும் கவலை கொள்ளாதவன்போற் பாசாங்

செய்துகொண்டு, வாசிக்கும் பாவனையா யிருக்கிறான்)

ஜானகி.—(மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு, நாராயணனது நாற்காலிக்குப் பின்புறமாக நின்று) இப்படித்தான் இனி மேலு மிருப்பீர்களோ ?

நாராயணன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்க்கின்றான்.

ஜானகி.—நாள் முழுவதும் தங்கள் வரவை எதிர்பார்த்து உட்கார்ந்திருப்பதுஎதற்காக? மாலையில் சீக்கிரம் வந்துவிடும்பக்ஷத்தில் கொஞ்சநேரமாகிலும் ஆனந்தமுடன் காலத்தைக் கழிக்கலாம். ஆனால்—

நாராயணன் நாற்காலியினின்றும் எழுந்திருக்க எத்தனிக்க,

ஜானகி:—வேண்டாம்,வேண்டாம். எழுந்திருக்கக் காரணமில்லை. நான் நாசமாய்ப் போக! ஏன் பிறருக்குக் கஷ்டத்தைக் கொடுக்கின்றேனே! நாள் முழுவதும் வெளியிற் சென்றிருந்ததால் மிகவுங் களைத்திருக்கலாம். கொஞ்சநேரம் இளைப்பாற வெண்ணிப் படுத்திருக்கலாமென்று எனக்கும் நன்றாய்த் தெரியும்.

நாராயணன் ஏதோ பேச வாயைத் திறக்க,

ஜானகி:—நானிவ்வளவு நேரமெதற்காகத் தங்கள் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தேனோ? விடியற்காலை வரை வரமாட்டீர்களெனத் தெரிந்திருந்தால்—

நாராயணன் கடியாரத்தைப் பார்க்க,

ஜானகி.—கடியாரத்தை ஏன் பார்க்கவேண்டும்? இது மெதுவாகவே போய்க்கொண்டு இருக்கிறது.

நாராயணன் தன் சட்டைப் பையினின்றுங் கடியாரத்தை வெளியே எடுக்க,

ஜானகி:—(கடியாரத்தை அவன் பார்க்கவொட்டாமல் தடுத்து) இந்தக் கடியாரத்தைப் பார்த்துப் பலனென்ன? வேளைப் பிரகாரங் காரியஞ் செய்பவர்களுக்கல்லவோ இது தேவை? இவ்விடத்து இஷ்டமிருந்தால், பன்னிரண்டானாலென்ன, ஒன்றானாலென்ன, நான்கானால்தானென்ன, எல்லாம் ஒரே மாதிரியே!

நாராயணன் உட்கார்ந்த வண்ணம் அவளை நோக்க,

ஜானகி:—இவ்வளவு நேரம் மனதிற்குக் கஷ்டத்தை யுண்டுபண்ண நீங்கள் இஷ்டப்படுவதாக எனக்குத் தெரியவில்லையா ? விடிந்தால் சங்கராந்தி யென்று ஞாபகங்கூட இங் கேயில்லை. எனக்குமாத்திரம் ஞாபகமிருக்கிறது.

நாராய:—ஆனால்—

ஜானகி:—அறிந்தேன். என்னை ஏமாற்ற வேண்டாம்.

நாராய:—(சிரிக்க)

ஜானகி:—என்ன வேண்டியிருக்கிறது? இருக்கிறவாளுக்கு உயிர் போகிறது. சிரிப்பு அழகாகத் தானிருக்கிறது!

நாராய:—(அதிகமாய்ச் சிரிக்க)

ஜானகி:—இவ்வளவு நேரங் கழித்து வந்த காரண மின்னதென இப்பொழுது அறிந்து கொண்டேன். பீச் ஸ்டேஷனில் வண்டியிலேறும்பொழுது அந்த சுந்தரம் சனியனைப் பார்த்திருப்பீர்கள். வழியில் எழும்பூரிலிறங்கும்படி அவரும் உங்களை வற்புறுத்தி யிருப்பார். நீங்களும் நாத்தானாரம்மாளாத்துக்கு இன்று போயிருக்க வேண்டும்.

நாராய:—(ஆச்சரிய முற)

ஜானகி:—அங்கே போயிருந்ததில் சந்தேகமுண்டோ? இல்லை யென்று சொல்லுவதில்

லாபமென்ன? அங்கேயே சாப்பிடும்படி சொல்லி யிருப்பார்கள். உங்கள் சித்தியும் இவ்விடத்துத் தரிசனமானவுடன் பிரமாதமாய்ப்பேசி நடித்து தடபுடலாய்ச் சமைத்திருப்பாள். நல்ல சாப்பாடு கிடைக்கும் பொழுது இந்தக் கவலை யெதற்கு? வீட்டு ஞாபகமே இதுவரை இல்லாமற் போய்விட்டது போலும்! ஆளுக்குத் தகுந்த வண்ணம் அவள் பேசுவாளென எனக்குத் தெரியும்!

நாராய:—(இல்லை யெனக் கையால் ஜாடை செய்துகொண்டே பேச எத்தனிக்க)

ஜானகி:—தெரியும், தெரியும் நீங்களென்ன சொல்ல உத்தேசிக்கின்றீர்களென்று—'டவுனில் இன்று ஒரு பெரிய சபையில் மகாநாடு ஒன்று கூடியது. அங்கே ஒரு துரை இப்படிப் பேசினார். இவர் அப்படிப் பேசினார். ஸ்திரீகளது கல்வி அபிவிர்த்தியாக வேண்டுமென ஒருவர் பேசினார். ஸ்திரீகளுக்கு சுதந்திரங் கொடுக்க வேண்டுமென மற்றொருவர் பேசினார்' என வாஸ்தவமென்று நினைக்கும்படி சொல்ல உத்தேசிக்கின்றீர்கள்.

நாராய:—(ஆச்சரியமுடன் நோக்க)

ஜானகி:--நான் ஏதாவது சொன்னால் உங்களுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கிறதில்லை. அங்கே நாத்தனார் பேசும் பொழுது சிரித்த வண்ணங் கேட்டுக்கொண்டிருந்திருப்பீர்கள்.

நாராய:—(இல்லையெனக் கையால் ஜாடை செய்கிறான்)

ஜானகி:—இல்லை, இல்லை. நான் சொல்லுவது வாஸ்தவந்தான்.

நாராய:—(கொஞ்ச[illegible] சிரித்துக் கொண்டே இல்லை யெனத் [illegible] ஆட்டுகிறான்.)

ஜானகி:—பிறரிடம் சிரித்து விளையாடலாம். என்னிடம் மாத்திரம் இவ்விதம் ஞானமும் பராமுகமுமாக்கும்;(என்றுசொல்லி அழுது கொண்டே ஜன்னலருகிற் சென்று வெளியே பார்த்துக்கொண்டு நிற்கிறாள்).

நாராய:—(நாற்காலியை விட்டெழுந்து அவளருகிற் சென்று பிரியமுடன் பேச வாயெடுக்க)

ஜானகி:—(அலக்ஷிமாய் அவ்விடம்விட்டுவிலகிக் கொண்டு) என்னிடம் யாவரும் வரவும் வேண்டாம். பேசவும் வேண்டாம். (அழுது கொண்டே) எனக்கேன் சாவு வரவில்லை. இந்த ஸ்திரீகளுக்கு மான அவமானமெங்கே யிருக்கிறது?

நாராய:—(பேச ஆவலு கொண்டு வாயைத்திறக்க)

ஜானகி:—இவ்விடத்துத் தயவு பிறக்க வேண்டுமானால் நாத்தானாரம்மாள் செய்வதுபோல், நானும் நீங்கள் வந்தவுடன் உங்களுக்கு முன்னாற் கூத்தாடவேண்டும். பாழாய்ப்போகிற நடனம் யாருக்கு வேண்டியிருக்கு! 'என் அண்ணா வந்து விட்டார், என் அண்ணா வந்து விட்டார்' என்று பார்க்கிறவர்களுக்குத் தமையனை விடுத்துத் தங்கை க்ஷணநேரமும் பிரிந்திருக்கமாட்டாளெனத் தோன்றும்; உங்களுக்கோ கேட்கவேண்டுமா! 'என் தங்கையா ஆஹா! வீட்டிற்கு லக்ஷ்மிதான்' என்கிறீர்கள்.

நாராய.—(தலையை ஆட்டுகின்றான்.)

ஜானகி.—காலை பத்துமணிக்குச் சாப்பிட்டு விட்டுப்போனால், ஒரு தாமா—இரண்டு தாமா—சதா சர்வதா நினைத்து நினைத்துக் கவலையுடன் இவ்வளவு நாழிகைவரை [illegible]ங்களது வரவை எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது வந்து

விடுவார், கொஞ்சநேரத்தில் வந்துவிடுவார்-இந்த வண்டி தவறியிருக்கும்-அடுத்த வண்டியில் வந்துவிடுவார்-அடுத்த வண்டிக்கு வராவிடில், கண்டிப்பாய் அதற்கடுத்தவண்டிக்கு வந்து விடுவார்-இவ்விதமாகவே வீண் எண்ணங்கொண்டு-நாசமாய்ப்போக நான்-கவலையுடன் காத்திருக்க வேண்டியிருக்கு. இங்கேயோ நான் செத்தேனே பிழைத்தேனேஎன்று கேட்கக்கூட ஆளைக்காணோம். (நேத்திரங்களில் நீரை வருவித்துக்கொண்டு) ஈசுவரா! நானென்ன பாவத்தைச் செய்தேன்? உயிரைக்கொடுத்து இவ்விடத்திய தயவை எதிர் பார்த்திருந்தும் பலனில்லை. (அதிகமாய் அழத் தொடங்குகிறாள்)

நாராய:—(சிரித்துக்கொண்டே முகத்தை மறைத்துக்கொள்ள)

ஜானகி:—தங்களுக்கென்ன வேடிக்கையாகத் தோற்றுகிறதோ! தங்கையும் அவள் புருஷனுஞ் சேர்ந்து ஒருவேளை எதாயினும் மருந்துதான் வைத்து விட்டார்களோ? என் பாட்டிகூட நிதமும், 'அடி ஜானகி! உன் நாத்தனாரும் அவள் புருஷனும் உன்னை உயிருடன் சாப்பிட்டு விடுவார்கள்' என்று சொல்லுவாள்.

நாராய:—(அவளை யுற்று நோக்க.)

ஜானகி.—உங்களுக்குப் பொய்யாகத்தானிருக்கும். உண்மையாகவே பாட்டி நிதமும் சொல்லுவாள். ஆனால் நானிதுவரை இதை உங்கள் காதிற் போட்டவளல்ல. தமையனும் தங்கையும் அந்நியோன்னியமாயிருப்பதை நாமேன் வீணிற் கலைக்க வேண்டும் என்றிருந்தேன். மீறிப்போய் விட்டதால் நானிதை இப்பொழுது சகஜமாகச் சொன்னேன்.

நாராய.—(மிக்க வேதனைக் குள்ளானவன் போல் நடிக்க.)

ஜானகி:—என் வார்த்தையால் நீங்களேன் மனதைக் கஷ்டப்படுத்திக் கொள்ளவேண்டும்? பிசகு செய்து விட்டேன், மன்னிக்கவும். இம்முறை தயவுசெய்து க்ஷமிக்கவேண்டும். மறுபடியும் நாத்தனாரைப்பற்றி ஒரு அக்ஷரமேனும் பேசுவதில்லை. அவர்களைக் குறித்து வாயைத்திறந்தால் பேசுங்கள். (அழுகின்றாள்)

நாராய:—(தன் மனைவியை நோக்கி மௌனமாயிருக்கின்றான்.)

ஜானகி.—நான் க்ஷமிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டதுபோதாதா? சரிதான்; விடிந்தவுடன் நாத்தனாரிடஞ் சென்று, 'நீங்கள் செய்வதெல்லாம் சிம்பசரி' என்று சொல்லி விட்டு வருகிறேன். அப்பொழுதாவது இப்படி முறைத்துப் பார்க்காதிருப்பீர்களா? உங்கள் மனைவி தன்காலில் விழுந்துவிட்டாளென்று நாத்தனாருக்கும் ஆனந்தம் பொங்கும். (மௌனத்துடன் தன் கணவனைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறாள்).

நாராய:—(பேசலாமா வேண்டாமா வென்று யோசிக்க)

ஜானகி:—நன்றாயிருக்கு; நீங்கள் வந்தது முதல் நான் மட்டும் பேசிக்கொண்டேயிருக்கிறேன். அவ்விடத்திலிருந்து ஒரு அக்ஷரமேனும் வரக்கூடாதோ!

நாராய.—(பேச வாயைத்திறக்க.)

ஜானகி:—வேண்டாம், வேண்டாம், என்னிடம் பேசவே வேண்டாம்.

நாராய:—(எழுந்து அவளருகிற்சென்று நிற்க.)

ஜானகி:—ஓஹோ! பேசிப்பலனில்லையென்று அடிக்க ஆரம்பித்து விட்டீர்போலிருக்கிறது. சரி, நடக்கட்டும். தாராளமாய் அடியுங்கள். உதையுங்கள். கையைப் பிடித்துத் தடுக்க

இங்கே ஒருவருமில்லை. இந்த ஜன்மத்தில் கஷ்டப்பட வேண்டுமென்று தலையிலெழுதியிருக்கும் பொழுது விடுமா? (அழத் தொடங்குகிறாள்).

நாராய:—(மனைவியைக் கொஞ்சம் சாந்தப்படுத்தவேண்டி வெளியிற் செல்ல உத்தேசித்துக் கதவருகிற் செல்ல.)

ஜானகி:—ஏன் பயப்படுகிறீர்கள்? கதவைத் தாளிடவேண்டாம். அடிக்குப் பயந்து வேலைக்காரர்களை ஒருபோதுங் கூவியழைக்க மாட்டேன்.

நாராய:—(திரும்பி வர.)

ஜானகி:—நீங்களின்னும் என்னை நன்றாயறிந்து கொள்ளவில்லை. நானப்படிப்பட்ட மனைவியல்ல. அடித்தாலும் உதைத்தாலும் உதவிக்கு யாரையுமழைக்கமாட்டேன். அவர்களையழைத்தால் ஊர்முழுவதும் உங்கள் சங்கதி பரந்து விடாதா?

நாராய:—(மௌனம்.)

ஜானகி:—உங்களை ஊர்க்காரரெல்லாம் வாழ்த்துவார்கள்!

நாராய:—(அவளை யலக்ஷியமாய்ப் பார்க்க.)

ஜானகி:—நான் சொல்லுவது காதில் விழுகிறதா?

நாராய:—(பேசாமல் வர்த்தமானப் பத்திரிகையால் தன் முகத்தை மறைத்துக்கொண்டு படிப்பவன்போல் நடிக்கிறான்.)

ஜானகி:—என்னுடன் பேசவுங் கூடாதா? நானிந்தக் காகிதத்தைவிடவா கேவலமாய் விட்டேன்? உண்மையை ஒளிக்க இதுவும் ஒரு நல்ல யுக்திதான். (அவன் கையிலிருந்த பத்திரிகையைக் கைப்பற்றி) வேறொரு புருஷனாயிருந்தால் இவ்வளவுதூரங் கெஞ்சுவதற்குத் தன் பத்தினியைச் சமாதானம் செய்து கண்களைத் துடைத்து சாந்தப்படுத்தியிருப்பான். 'நீதான் என்னுயிர்; நீயே என் ஜீவன்' என்று வாயால் மாத்திரம் சொல்லுகிறீர்கள். ஆனால் சந்தோஷமாய் ஒரு வார்த்தையேனும் வாயினின்றும் வருகிறதில்லை. (நேத்திரங்களில் நீரை வருவித்துக்கொண்டு) வருவதற்கு இவ்வளவு நேரமாகக் காரணமென்ன என்றுதானே கேட்டேன்; இவ்வளவுதானே!

நாராய—,(அவளைத் தன்னருகிலழைக்க.)

ஜானகி.—உங்களை எதிர் பார்த்து உட்கார்ந்து உட்கார்ந்தே இதுவரைக் கழித்தேனெனச் சொல்லவில்லையா? மணியோ பன்னிரண்டாய்விட்டது. இதற்குமேல் ஒருத்தி உட்கார்ந்திருக்க முடியுமா? நாளை முதல் ஏழு மணி வண்டியில் கண்டிப்பாய் வந்துவிடுவதாக நேற்றுச்சொல்லவில்லையா? இவ்வளவு நாழிகையானபின் இருக்கிறவர்களுக்குப் பீதியுண்டாகாமலிருக்குமா? எவ்வளவு மனக்கஷ்டம்! நாள் முழுதும் வேலை செய்துவிட்டு, இராத்திரியாவது கொஞ்சநேரம் சிரமபரிகாரஞ் செய்து கொள்ள வேண்டாமா? என்றால் தங்களுக்குச் சுகமென்பது எப்பொழுது இல்லையோ, பிறகு நானிருந்தென்ன, இறந்தென்ன?

நாராய.—(இதுவரை கொஞ்சமேனும் பேசச் சமயங் கிடைக்காததால் அவளையுற்று நோக்கியிருக்க.)

ஜானகி.—ஒரு வார்த்தையேனும் பேசாமலிருக்கும்படி உங்களுக்கு அவ்வளவு கோபமென்ன? நான் செய்துள்ள அபராதந்தானென்ன? (அழுது கொண்டே) பெற்றோர்கள் காலிற் கட்டும் பொழுதே, நன்றாய்ப் பார்த்துச் செய்திருக்கவேண்டும். ஸ்திரீகளுக்கு இந்தக் கஷ்டங்களெல்லாம் ஏன்? புரு

ஷர்களது இச்சைப்படி வாழவேண்டுமென்று எங்கள் தலையிலெழுதி யிருக்கிறதோ!

நாராய:—(எழுந்து ஜன்னலருகிற் சென்று வெளியே நிற்க.)

ஜானகி:—சரி. இவ்வளவு தானே!—ஈச்வரா! எனக்கிந்த ஜன்மத்தை ஏன் கொடுத்தாய்? இதுவரை சுகத்தைக் கொடுத்து வந்தாய். ஆனாலினிமேல் என்னென்ன கஷ்டங்களைக் கொடுக்கப் போகின்றாயோ? இதை விட மாணமே மேலென நினைக்கின்றேன். (படுக்கையறைக்குட் சென்று படுக்கையில் விழுகின்றாள்).

நாராய:—(இவளறைக்குட் செல்லவே, மறுபடியும் நாற்காலியில் வந்துட்கார்ந்து, விவேக சிந்தாமணி பாடலில், 'ஆலகால விஷத்தையும் நம்பலாம்' எனும் பாட்டை அவள் காதினில் விழும் வண்ணம் உரக்கப் பாடிக் கொண்டிருக்கிறான்.)

ஜானகி:—(கோபத்துடன் எழுந்து வெளியே வந்து அவனெதிரில் நின்று) நன்றாயிருக்கு! நான் கேட்பதற்கெல்லாம் இதுதான் பதிலோ?

நாராய:—(மௌனமுடன் நாற்காலியை விட்டெழுந்து மேஜை மேலிருந்த சிகரெட் பெட்டியினின்றும் ஒரு சிகரெட்டை எடுத்து அதைப் பற்ற வைத்துக் குடித்துப் புகையை மேலே விடுத்து, அப்புகையையே பார்த்துக் கொண்டிருந்தான்.)

ஜானகி:—இவ்வளவு தயவாவது செய்ய வேண்டும். என் ரூமில் சிகரெட் உபயோகிக்கக் கூடாது. எனக்கிந்தப் பீடை நாற்றம் பிடிக்கிறதில்லை. இந்த எழவு சிகரெட்டால் நேற்று என் மெத்தை நெருப்புப்பிடித்து நாசமாயிற்று. முன்னாலொரு புடவையும் சாம்பலாயிருக்கிறது ஞாபகமில்லையா? (இவ்வண்ணம் சொல்லிக்கொண்டே கணவனருகிற் சென்று, சிகரெட்டை அவன் கையினின்றும் பிடித்திழுத்து, ஜன்னல் வழியாக வெளியே எறிகின்றாள்.)

நாராய:—(மறுபடியும் மேஜையினின்றும் மற்றொரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு ஜன்னலருகிற் சென்று நிற்க.)

ஜானகி:—எனக்கெவ்வளவு கஷ்டங்களைக்கொடுக்கலாமோ அவ்வளவையுமிந்த ஜன்மத்திலேயே கொடுத்து விடுங்கள். அடியுங்கள், உதையுங்கள், சிகரெட் நாற்றம் பிடிக்கவில்லை யென்றால்-(அழுதுகொண்டே மேஜையருகிற் சென்று நாற்காலியிலுட்கார்ந்து, மேஜையின் மேற் தலையை வைத்து) 'என் செல்வமே! என் கண்ணே!' என்று நிதமும் வாயால் மாத்திரஞ் சொல்லுகிறது அன்று சங்கராந்திக்குக் கல்லட்டிகை வாங்கித்தருவதாகப் பிரமாதமாகச் சொன்னீர்களே! நானுமந்த ஆசையுடன் காத்துக்கொண்டிருந்தேன். இங்கேயோ இம்மாதிரியாக இருக்கிறது.

நாராய:—(அவளருகிற் சென்று சட்டைப்பையினின்றும் கல் அட்டிகையை யெடுத்து, அவளது கழுத்தில்போட எத்தனிக்க.)'

ஜானகி:-(அட்டிகையைக் கண்டமாத்திரத்தில் ஆனந்தம் பொங்க யெழுந்திருந்து அவனைக் கொண்டாடிப் புகழ்ந்துபேசி) வாஸ்தவமா? ஆனால் ஏனிதுவரை என் பிராணனை வாங்கினீர்கள்? முன்னாலேயே என்னிடமிதைச் சொல்லி யிருக்கக்கூடாதா? இதனாலல்லவோ நீங்கள் வரத் தாமதமாயிருக்க வேண்டும்! நாசமாய்ப் போக நான் உங்கள் மனதை வீணிற் புண்படுத்தினேனே! போதும், போதும், என் கழுத்திற்போட்டு அழகு பார்க்க வேண்டாம். பசி அதிகமாயிருக்கும். முதலிற் சாப்பிட வாருங்கள்.

(நிஷ்கிரமித்தல்.)

(படுதா விழுகிறது.)

சிந்தாமணி பத்திராதிபருக்கு ஒரு வேண்டுகோள்.

(ஸ்ரீமதி ....அம்மாள் எழுதுகிறார்.)

அன்புள்ள சகோதரியே,

தங்கள் சிந்தாமணியின் அபிவிருத்தியை நாடித் தனவணிகர் நாட்டிற்கு விஜயம் செய்திருந்ததாகவும் அதற்கிடையே பெண்மக்கட்குரிய படிப்பைப்பற்றிச் சிலபிரசங்கங்கள் செய்ததாகவும் அறிந்தேன். தங்களால் வெளியிடப்பெறும் சிந்தாமணியானது பெண் உலகத்திற்கு ஒப்பற்ற நன்மையை விளைவிப்பதாயிருப்பது கண்டு அகமகிழாதாரிலை. பூர்வீக லக்ஷியம ஒரு புறமும் நவ நாகரிகத்தோற்றம் மறுபுறமுமாகப் பெண்மக்களின் மனதை இழுத்துப் போராடிவரும் இச்சமயத்தில் ஆழ்ந்த அனுபவமும் தம்சமூக முன்னேற்றத்தில அளவற்ற அபிமானமும கல்வியறிவும் சுதேச பாஷாபிமானமும் ஒருங்கே அடையப் பெற்றுள்ள தாங்கள் சிந்தாமணி என்ற பத்திரிகை ய ஆரம்பித்துப் பெண்மக்களின் ந்யாயமான கோரிக்கைகளையும் அவர்களுக்குரிய கல்வியையும் எடுத்துரைப்பது நமது பாரதப் பெண்மணிகளின் பாக்கியமென்பதில் தடையென்ன? இவ்வரிய மணியாகிய சிந்தாமணியைப் போற்றாதார் யார்?

இன்னும் சில நாட்களில் சிந்தாமணியானது லக்ஷக்கணக்கான சந்தாதார்களைக் கொண்டு நந்தமிழ் நாட்டில் உலவிவரவேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சகோதரியே! தேச மாதாவின் ஊழியம் காரணமாக அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த தாங்கள் தற்சமயம் பெண்கள் முன்னேற்றமே தேச முன்னேற்றத்தை யளிக்கவல்லதென்ற உண்மை கண்டு பெண்களின் முன்

னேற்றங்கருதி உழைத்து வருவதற்கு ஈசனருடன் தமிழபிமானிகளின் ஆதரவும் நிச்சயமாகக் கிடைத்து அதனால் ஏழைப்பெண்மணிகளின் நிலைமையானது கண்ணியமான வழியில் உயர்த்தப்படுமென்பதில் சந்தேகமேகிடையாது. பெண் சமூகத்தில் ஒரு பகுதியாயுள்ள கைம்பெண்களின் நிலைமை சீர்திருத்தப்படுவதற்குத் தங்கள் உழைப்பு பலனை விளைவிக்குமென்றே நம்புகிறேன். பெண்களிடையே பெண்களுக்குரிய கல்வியானது தேச பாஷையில் அபிவிருத்தியடைந்து விடுமாயின் அதனுடன் பெண்களின் கண்ணீர் அறவே ஒழிந்து விடும் என்றதைத் தாங்கள் நிதானித்து அத்தகைய கல்வியைப் பிரசாரஞ்செய்ய முற்பட்டிருப்பதற்கு ஸ்திரீ வித்தியாபிமானிகள் பெரிதும் ஆதரவளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். சீரும் சிறப்பும் செல்வப்பெருக்கும் உதார சிந்தையும் கொண்டு வாழ்ந்துவரும் தனவணிகர் நாட்டில் பெண் கல்வியானது தக்கபடி பரவுமானால் 'பொன்மலர் நாற்ற முடைத்து' என்ற பழமொழிக்கிணங்க இந்நாடு இன்னும் அதிகமான பிரகாசத்துடன் விளங்கத்தடையில்லை.

சிக்கனமும் அடக்கமும் அமைதிபெற்ற வாழ்க்கையும் கொண்டு நடக்கும் தனவணிகப் பெண்மணிகளிடையே பெண்மக்கட்குரியபடிப்பைப் பரவச்செய்வதில் சிரமம் சிறிதும் ஏற்படவே மாட்டாது. நாட்டின் பல பாகங்களிலுள்ள கல்வி ஸ்தாபனங்களுக்கும் தேவாலயங்களுக்கும் தாராளமாகப் பொருளுதவிசெய்வதில் 'நான் முன்னே, நான் முன்னே' என்று முன் வந்து உதவி புரியும் தனவணிகர்கள் தங்கள் நாட்டில் பெண் கல்வியைப்பற்றி தக்க சிரமத்தை எடுக்கவேண்டிய காலம் சமீபித்து விட்டது. வீட்டிலுள்ளவாறு கல்விப்பயிற்சியையடைவதற்கான வசதிகளைப் பெண்மக்களுக்கு இந்நாட்டில் ஏற்படுத்துதலே முக்கிய சீர்திருத்தமாகவிருக்கிறது. தவிர கல்வியிலும் கேள்வி பெரிதென்பது அறிவாளிகளின் அபிப்பிராயமன்றோ? ஆடவர்கள் தாராளமாக வெளியிற்சென்று சிறந்த பிரசங்கங்களைக்கேட்டு அபிவிருத்தியடைவதுபோல் பெண்மக்களும் தெரிந்து கொள்ளுவதற்கான வழியைத்தேடவேண்டாமா? இதற்கு மாதர் சங்கங்கள் அமைக்கப்படல் முக்கியமல்லவா? அம்மையே! பெண்களின் முன்னேற்றத்திற்கெனவே தாங்கள் முன் வந்து உழைக்கின்றீர்கள். ஆயினும் அதிலும் தனவணிக சகோதரிகளின் அபிவிருத்திக்கான வழிகளில் தங்கள் முழுகவனத்தையும் செலுத்துவீர்களானால், இந்நாட்டின் பெண்மக்களும் தங்களுக்குள்ள உதார சிந்தையைக்கொண்டு பல பாகங்களிலுமுள்ள பெண்மணிகளின் அபிவிருத்திக்கு வேண்டியவாறு உதவி புரிய முன் வருவார்கள். அச்சமயம் சிந்தாமணியானது பெண் உலகத்தாலேயே ஆதரிக்கப்பெறக் கூடிய சீக்கிரம் தினசரியாக உலவுமென்பதில் ஆக்ஷேபமே கிடையாது. இந்நாடு முழுதும் தாங்கள் சுற்றுப்பிரயாணம் செய்து பிரசங்க மாரி பொழிந்து பெண்களுக்கென சங்கங்கள் அமைத்துத் தனவணிகப் பெண்களின் முன்னேற்றத்திற்கானவழியைத்தேடவேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

சுபோத ராம சரிதம்.

(ஆறு காண்டங்களும்) விலை அணு ஆறு.

சிந்தாமணி சந்தாதாருக்கு தபால் சார்ஜு இனும்.

பாட்டியம்மாளின் சமூக ஊழியம்.

ஸ்ரீமதி அன்னபூரணி அம்மாள்.

கெட்டதைப் போல் நல்லது சீக்கிரத்தில் பரவுவதில்லை யென்று ஜனங்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் பாட்டியம்மாளின் விஷயத்தில் ஊழியம் முன்சென்ற அதிசயத்தை என்னென்று சொல்வேன். நான் பார்த்து வந்து இரண்டே மாதங்கள்தான் ஆயின. பாட்டியம்மாளின் உழைப்பு முன்னேறியிருப்பதைக்கண்டால் குறைந்தது இருபது வருஷத்திற்குப் பிறகுதான் இவ்வாறு நடக்கும் என்று அறிவாளிகள் நினைப்பார்கள். சில இடங்களில் பெண்கள் கூட்டம் கூடுவதையும் மேனாட்டில் ஸ்திரீகள் முன்னேறி நாகரிகமடைந்திருப்பதைப்பற்றி வர்ணிப்பதையும் அதுபோல் நாம் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும் கேட்டு அநேக விஷயங்களில் என் மனதும் சங்கடத்தை அடைந்திருக்கிறது. நாம் கைவிட்டதை யடைந்து அழுக்கடைந்த மனதைத் துலக்கிக் கொண்டு முன்னேறப் பிரயத்தனப்பட வேண்டியதைத் தவிர கற்றுக்கொள்ள வேண்டியவர்கள் நாமல்ல. நாம் தேசந்தோறும் போய் நம் ஒழுக்கங்களைப் பரப்பினாலும் அதற்கு ஈடு அல்லது சமமான நாகரிகங்களை எங்குங்காணமுடியாது. நான் இவ்வளவு தூரம் சொல்லவரும் விஷயம் பாட்டியம்மாள் ஊழியத்திலிருந்து என்னைத் தூண்டுகிறது. நான் இதுவரை போனபொழுது பேசுவதில் அதிக நேரங்கழிக்க சந்தர்ப்பம் இல்லாததாலும், பாட்டியம்மாளும் தன்னிடம் சில நாள் தங்கிப் போம்படி வற்புறுத்தியதாலும் பெரியோர்களுடைய விஷயங்களை அறிய ஆசையுள்ள நானும், இத்தடவை ஒரு வாரம் தங்கியிருக்க நிச்சயித்துக் கொண்டேன்.

பேச்சை வளர்த்தி வாசகர்களை காக்கவைப்பதிலும் நான் அறிந்து கொண்ட விஷயங்களில் முக்கியமானதைச் சுருக்கமாய்ச்சொல்லிக் கொண்டு போகிறேன். முன் சொன்னபடி நானங்கு தங்கப்போன நாள் சனிக்கிழமை; மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இலவசச்சிகிச்சையென்று கேள்விப்பட்டு அங்கு நடக்கும் காரியங்களைப் பார்க்க ஆவலுடன் காத்திருந்தேன். சுமார் 8 மணிக்கு அடுத்த பெரிய பட்டணத்திலுள்ள வைத்தியர் (டாக்டர்) வந்தார். ஒவ்வொரு மனிதரும் மேலான எண்ணங்களை நினைப்பது சகஜமே. அதைப்போல் நடக்கப் பழகுவதுகடினம். அதிலும் பிறரை அவ்வழிக்குக் கொண்டு வருவது எவ்வளவு கடினமென்பதை அவரவர்களே அறிந்து கொள்ளலாம். பாட்டியம்மாள் தன்னபீஷ்டத்திற்கு ஊராரை இணங்கப் பண்ணினது மாத்திரமல்லாமல் பிறரையும் உபகாரம் செய்யத்தூண்டினதே எல்லாவற்றிலும் ஆச்சரியமானது. மேற்படி வைத்தியர் வாரத்தில் ஒரு நாள் பாட்டியம்மாள் வேண்டுகோளின்படி அடுத்த கிராமம் வந்து இலவசத்தில் வைத்தியம் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார். நான் இங்கு பார்த்தது சாதாரண வைத்தியசாலைகளில் உள்ளதை விட ஒன்றும் குறைவல்ல. மேற்படி வைத்தியசாலையில் "இங்கு வைத்தியம் செய்யப்படும்" என்று பெரிய எழுத்தில் வரைந்த பலகை தொங்கக் காணலாம். இங்கே அவ்விதப் பலகை தவிர பாக்கி யெல்லாம் அவ்விடம் போலவே நடக்கப் பார்க்கலாம். பாட்டிக்கு 4, 5 பேர் சகாவாயிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் உடுக்கக் கதரும் பசிக்குச் சாப்பாடுந்தான். அதில் டில்லி வைத்தியர்

கலாசாலையில் படித்த ஒரு ஸ்திரீ தனக்கு தேச கைங்கரியமே போதுமானதென்று பாட்டியம்மாளுடன் இருக்கிறாள். மற்றொரு ஸ்திரீ உயர்தர ஆங்கிலமும் படித்து நகரங்களில் பள்ளிக்கூட உபாத்திமைத் தொழிலிலிருந்து நகரவாசத்தால் தன் சரீர ஆரோக்கியம் குறையும் போல் தோன்றினதால் கிராம வாசத்திற்கு விருப்பப்பட்டு பாட்டியம்மாளுடனிருந்து இலவசமாய் அவ்வூரிலுள்ள குழந்தைகளுக்கோ ஸ்திரீகளுக்கோ கல்வி கற்றுக்கொடுத்துத் தன் காலத்தைக் கழிக்க எண்ணம் கொண்டு வந்திருக்கிறாள். காலையில் வெளியூரிலிருந்து வந்த வைத்தியருடன் கிராமத்திலுள்ள வியாதிக்காரர்கள் வர அவர்களைக் கவனிப்பதில் அன்று பொழுது போயிற்று. ஆனால் அவ்வூரிலுள்ள ஏழைப் பையன்களுக்கு ஆரம்பக் கல்வி இலவசமாய்க் கற்றுக் கொடுப்பதும் பாட்டியம்மாள் வேலையென்று அறிந்து கொண்டேன்.

மறுநாள் திங்கட் கிழமை பாட்டியம்மாளுக்குக் கதர் வேலை. ஏற்கனவே அவர்கள் வீட்டில் 5, 6 ராட்டினங்கள் உள. இஷ்டப்பட்டவர்கள் வந்து நூல் நூற்கக் கற்றுக் கொள்ளலாம். தானும் தன்னுடனிருப்பவர்களும் மாத்திரம் நூற்பதில் திருப்தி படையாமல் வீடொன்றுக்கு ராட்டினம் ஒன்று அத்தியாவசியமாய் இருக்க வேண்டுமென்பது பாட்டியம்மாளின் கோரிக்கை. பாட்டியம்மாளுக்கு மனப்பூர்வமாய் அதிலுள்ள பக்தியினால் அதைச் சாக்ஷாத் விஷ்ணு சக்கரமென்றே அவர் பன்முறை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒழிந்த நேரங்களில் தான் கொஞ்சம் நூற்பதுடன் பிரதி திங்கட் கிழமையும் தங்கள் சிநேகிதர்களின் வீட்டிற்குப்போய் ராட்டினமுள்ள ஒவ்வொருவரிடமும் மிகப்பணிவுடன் ஸ்திரீயோ புருஷரோ அவர்களுக்குத் தகுந்தபடி 'சென்ற வாரம் எவ்வளவு நூல் நூற்றிருப்பீர்' என்று கேட்பது வழக்கம். அநேகம் பேர்கள் ஒவ்வொரு வாரம் நூற்பதையும் பாட்டியம்மாள் வந்து கேட்கும் சிரமத்திற்குப் பரிகாரமாய் அவர் கையிலேயே கொடுத்து விடுவார்கள். இவைகளெல்லாம் கொண்டு வந்து நம்பர் வாரியாய்ப் பிரித்து மாதமொரு முறை பக்கத்துப் பட்டிணத்திலுள்ள கதர்ச் சாலையில் கொண்டுபோய்க் கொடுத்து அவர்களிடமிருந்து அதற்குப் பிரதியாய் பருத்தியோ அல்லது கதர்த் துணியோ பெற்று வருவது வழக்கம். இது திங்கட் கிழமை அலுவல்.

செவ்வாய்க் கிழமை பாட்டியம்மாளுக்கு ஓய்வு.

புதன் கிழமை ஸ்திரீகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் வேலை. எப்பொழுதுமே யார் வந்தாலும் சொல்லத் தயாராயிருக்கும் பாட்டியம்மாள் இன்று பள்ளிக்கூடம் போல் கல்வியைத் தன் கூட இருப்பவள் கற்றுக் கொடுக்கப் பார்த்துக்கொண்டிருந்து தானும் சில முக்கியமான விஷயங்களைச் சொல்லி வருவதைக் கண்டேன்.

வியாழக்கிழமை குருவணக்கமென்று சொல்வதுண்டு. அன்று அநேகமாய் கோவில்களுக்குப் போவதிலேயே பொழுது போக்குவார்கள். அல்லது அநேகம் ஸ்திரீகளாய்ச் சேர்ந்துகொண்டு பக்கத்திலுள்ள ஸ்தலங்களுக்குக் கால் நடையாய்ப்போய் ஸ்வாமி தரிசனம் செய்துவருவது வழக்கம். இவளுடைய சங்கத்தில் சேர்ந்தவர்களின் குணமும் அநேகமாய்ப் பாட்டியம்மாளின் அம்சத்துக்கு ஏற்றவாறு இருப்பதுடன் சம்பாஷணையும் கேட்பதற்கு விநோதமாயிருக்கும். இவ்வாரம் நானும் அங்கு தங்கினதால் அவர்களுடன் யாத்திரை போகவும், வழி நீளச் சிரமம் தெரியாமலிருக்க ராமாயணம், பஜகோவிந்தம் இவைகளைப்பாடிக்

கொண்டு போனதைக் கேட்க ஆனந்தமாயிருந்ததுடன் ஒவ்வொரு வாரமும் இப்படிப் போகக்கிடைக்க வேண்டுமென்று ஆசையும் உண்டாயிற்று.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை நம்மவர்களில் விசேஷ நாளானதினால் அவரவர்கள் கடமையைச் செய்துகொண்டு வீட்டிலேயே பொழுதைக் கழித்தார்கள்.

அடுத்த நாள் சனிக்கிழமை காலை பாட்டியம்மாள் ஒவ்வொரு வீட்டில் போய்க் குழந்தைகள் சௌக்கியமா என்று கேட்டுவருவதுடன் திடமில்லாத குழந்தைகளையோ, அசௌக்கியமுள்ளவர்களையோ மறுநாள் தன்னிடம் வரும்படி சொல்லிவிட்டு வருகிறார். குழந்தைகள் விஷயத்தில் அவருக்குள்ள அக்கரையை எவ்விதமான வார்த்தைகளில் சொல்லுவதென்று தெரியவில்லை. கடவுள் கண்முன் பிரத்தியக்ஷமானவர்களுக்குக்கூட அவ்வளவு ஆனந்தம் இருக்குமோ என்னவோ என்பது எனக்குச் சந்தேகம். ஆனால் ஒரு திடமான குழந்தையைக் கண்டால் பாட்டியம்மாளுக்கு அதிக ஆனந்தம். சாக்ஷாத் கிருஷ்ணனே வந்து விட்டாரென்று கொண்டாடுவதுடன், இந்தியாவில் திடகாத்திரமான குழந்தைகள் அதிகமில்லாததே தேச முன்னேற்றத்திற்கு ஒரு தடையாயும் சிசுக்களின் மரண விகிதமும் அதிகம் ஏற்படுகிறதற்குக் காரணமாயுமிருக்கிறதென்பது பாட்டியம்மாளின் வாதம். குழந்தைகளின் பெற்றோர்களைக் கண்டால் 'உங்களுடைய முழு கவனத்தையும் சிசுக்களின்மேல் செலுத்துங்கள்; உங்கள் வீட்டில் சாக்ஷாத் கடவுளே வந்திருக்கிறார்; நீங்கள் அவ்விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாயிருங்கள்' என்று எச்சரிப்பது வழக்கம். இதில் அநேக விதமான அர்த்தங்கள் உண்டு. அதற்கு முழு வியாக்கியானமும் பாட்டியம்மாளுக்கே தெரியும். என் போன்றவர்களுக்குக் கிரகிக்க அதிகம் மூளையைச்செலவிடவேண்டும். பகலில் பள்ளிக்கூடம் இல்லாத நாளானதால் பையன்கள் வந்து உபநிஷத்து படிக்கக் கற்றுக்கொள்வது வழக்கம். இன்றே பாட்டியம்மாள் வீட்டில் விசேஷநாள். பிற்பகலில் ஸ்திரீகள் கூட்டம் கூடுவார்கள். ஊரிலுள்ள எல்லாரையும் வாரமொருமுறை சந்திக்க நேரிட வேண்டுமென்று சனிக்கிழமை தோறும் பஜனையென்று ஏற்படுத்தி எல்லா ஸ்திரீகளையும் வரும்படி பாட்டியம்மாளின் வேண்டுதல். அநேகமாய் வயது சென்றவர்களும், விதந்துகளும், கன்னிகைகளும் வருவதே வழக்கமாயிருக்கிறது. அவரவர்களுக்குச் சந்தேகமுள்ளதைக்கேட்பதே இங்கு வேடிக்கை. ஆனால் என் போன்றவர் நூதனமான ஒரு விஷயத்தைக் கண்டு எண்ணம் வேறுபட்டாலும் சீக்கிரம் பேசத் துணிவதில்லை. இப்பொழுது ராஜீயம் முதல் சம்சாரம் வரையிலும் சந்தேகமும் குழப்பமுமாகவே தானிருக்கிறது மனச்சாக்ஷியைக்கொண்டு கஷ்டமோ சுகமோ தைரியத்துடன் முன்செல்பவர்கள் அநேகமாய் முன்னுக்கு வந்து விடுகிறார்கள். எல்லாம் வழியறிந்து செய்யவோ சொல்லவோ அநேகம் பேருக்குத் தைரியம் வருவதில்லை. இது பெண் என்னும் சொல்லுக்குத் துணையாக இன்று வரையிருந்து வருகிறது. இன்று வந்திருப்பவர்களில் முக்காலும் இவ்விதமானவர்கள். மீனாக்ஷிக்கு ஏற்கனவே கொஞ்சம் தைரியமுண்டு. முதல்நாள் நாலைந்துபேர் குளக்கரையில் பேசிக்கொண்டிருந்ததை இவள் கேட்டிருந்தும் மறைவில் ஒன்றும் பேசாமல் பாட்டியை நேரில் கேட்டு விடுவோமென்று உறுதிசெய்துகொண்டு பஜனை முடிந்ததும் 'பாட்டியம்மா, நான் சில சமாசாரம் கேட்க விரும்புகிறேன். நீங்கள் படித்திருக்கிறீர்களே' என்று பீடிகைபோட்டுக் கொண்டு வந்தாள். மத்தியில் கொஞ்ச நாள் ஸ்திரீகள் படிக்காமல் வீட்டு வேலையிலேயே

இருந்ததும் ஏதாவது சந்தேகம் ஸ்திரீகளுக்கு ஏற்பட்டு புருஷஜாதியை வினவும் பொழுது அரைப்படிப்பாளிகள் தங்கள் புத்திபோனவாறும் சௌகரியத்திற்கு ஏற்றபடியும் 'அது சாஸ்திரம்' என்று ஒரே சொல்லால் மடக்கிவிடுகிறார்கள் அல்லவா. உண்மை அவர்களுக்கே தெரியாததுதான் காரணமாயிக்குமோ? அல்லது தங்கள் உயிர் பொருள் எல்லாவற்றையும் ஆங்கிலப்படிப்புக்கு அர்ப்பணமாக்கி விட்டமையால் சாவகாசம் கிடைக்காததினாலோ? இதுவே நமக்குத் தெரியாது!

பாட்டி:—மீனாக்ஷி, நீ பேச வந்தது ரொம்ப சந்தோஷம். உன்னைக் கொஞ்ச நாளாய்க் கிராமத்தில் காணவில்லையே?

மீனாக்ஷி:—நான் என் பெண்ணிடம் பட்டணத்திற்குப் போயிருந்தேன். இவள்தான் என் பெண் (என்று பக்கத்திலிருந்த 18-வயதுள்ள பெண்ணைச்சுட்டிக் காட்டினாள்).

பாட்டி பெண்ணைப் பார்த்து 'உன் பெயரென்ன? உட்காரம்மா' என்றுசொல்லவும், தன் பெயர் புஷ்பமென்று சொல்லி அப்பெயருக்கேற்க அந்தப் பெண் அசையாமலும் நின்றது. இக்காலத்தில் பெரியவர்களைக் கண்டால் வணங்குவது கொஞ்சம்அரிதாகிவிட்டதால் பாட்டியம்மாளும் இதைக் கவனிக்கவில்லை. மீனாக்ஷி ஒன்றும் பேசாமலிருக்க, பாட்டி மறுபடியும் "உன் பெண் இவ்வூருக்கு இப்பொழுதே புதிதாய் வருகிறாள் போலும்" என்றாள்.

மீனாக்ஷி:—என்ன ஆச்சரியம். உங்களுக்கு எப்படித் தெரிந்தது. நான் இங்குவந்து ஆறு மாதங்களாகிறது. பெண் இப்பொழுதுதான் வந்தாள். இவ்வூரிலே பல வீடுகளிருக்கின்றன. யார் புதியவர், யார் பழையவரென்று எப்படி உங்களுக்குத் தெரியும்?

"அப்படியா! இவ்வூருக்கும் மற்ற ஊருக்கும் உனக்கு அடையாளம் இன்னும் புலப்படவில்லையா? அநேகமாய் நாங்கள் அவ்வளவு பேரும் சேர்ந்து ஒற்று வாழப் பிரயத்தனஞ் செய்துகொண்டு, எங்களுக்கு அத்தியாவசியமாய்த் தேவையில்லாத ஒவ்வொரு அயல் நாட்டுச் சாமான்களையும் ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். அவைகளும் அநேகமாய் வெளியேறி விட்டன; மருந்து வகைகள் ஏதோ சிலது தவிர அயல் நாட்டுச் சாமான்கள் இங்கு உன்னால் காணமுடியுமா? உன் பெண்ணின் தலையில் இரண்டு கொண்டை ஊசிகளும் ஒரு சாண் அகலமுமுள்ள சீமைப் பட்டு நாடாவே அவள் இவ்வூருக்குப் புதியவளென்று சுட்டிக் காட்டிற்று. கண்ணுக்குப் பகட்டாயுள்ள அயல் சாமான்களை வாங்கி ஏமாறவேண்டாமென்று ஒவ்வொருவருக்கும் சொல்லி சிரமப்பட்டிருப்பது எனக்கே தெரியும்" என்று பாட்டி சொல்ல இதைப்பற்றி நானும் நினைத்தேன்; உங்களைப் போலுள்ளவர்களே சொல்வது அழகென்று நான் கூறினேன்.

மீனாக்ஷி:—எனக்கு அது விஷயமே தெரியாது. என் புத்தியை நான் அவ்வளவு ஒன்றிலும் செலவு செய்யவில்லை. இது அயல் நாட்டுச் சாமான்வாங்கக்கூடாது, நம்மூரில் உண்டானவைதையே வைத்துக்கொண்டு நாம் காலந்தள்ளப் பிரயத்தனப் படவேண்டும் என்று எனக்கு யோசனையே உண்டானதில்லை. நீங்கள் சொல்லுங்கள்; நான்தெரிந்து கொள்ளுகிறேன்.

பாட்டி:—ஆங்கில ஸ்திரீகள் நம்மைப்போல் தலைக்கு எண்ணெய் உபயோகிப்பதில்லை. கூந்தலைவிரித்து அதைப்பொட்டுக் கட்டிக்கொள்ளுகிறார்கள். நமக்கோ உஷ்ண தேசம். தலையில் எண்ணெய் யில்லாமற்போனால் மூளை வரண்டுபோகும். கொல்லையிலுள்ள வாழை மரம் நமக்கு அன்றன்றுபுதிய நார் உதவும். அதன்பொருட்டு தம்பிடியும் செலவில்லை.

அதைவிட்டு மேற்படி நாடாவை உபயோகிப்பதனால் நமக்கு ஒரு சாதகமும் இல்லை. வீண் செலவும் கண்ணுக்குப் பகட்டுந்தான். இரண்டே நாளில் எண்ணெய் தோய்ந்துவிடும். பழைய மனிதர்களாவது ஜடைக் குச்சு என்று சொல்லும் ஒன்றைப் பின்னலில் தொங்கவிடுவது வழக்கம், அதுவாவது உள்ளூர் சரக்கு, தங்கம், தட்டான் வேலையுள்ளது. கூந்தல் சுருளாமல் நீண்டு தொங்கச்செய்த ஏற்பாடோ என்னவோ! இப்புது நாகரிகத்தில் ஒன்றுமில்லை

மீனாக்ஷி:—பாட்டி, நீங்கள் செ... வளவு நியாயமிருக்கிறது. வாங்க இஷ்டப்படவில்லை. வரும்பொழுது வருத்தப்பட 3 ரூபாய்க்கு இரண்டு நாட... வந்தார். ஐயோ பாவம்! அ... ளம் 50 ரூபாய். பின்னல்... இவ்வளவு செலவு என்று... த்துக்கொண்டேன். 'உனக்... தம்மா, எல்லோரும் நாடாவை... தான் வெளியில்போகிறார்கள்... டிப் பேசினாள் (என்று சொல்... ணைப்பார்த்து), புஷ்பா! என்னுட... செய்யாதே. பாட்டியம்மாள் புக... கேட்டுக்கொள்; இதில்நமக்கு எவ... கமிருக்கிறது. சொல்வாரில்லாமலே கெட்டோம்; ஏதோ நீங்களாவது இவ்வூருக்குவரும்படிபுண்ணியம் நாங்கள் செய்தோமே' என்று சொல்ல வெட்கத்துடன் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த பெண்ணும் பாட்டியம்மாளைச் சரண மடைந்தாள்.

CAUTION
END OF THE FILM RO

பாட்டி:—குழந்தைகளுக்கு அழகான பகட்டுகளில் கண் போவது இயற்கையே. நம்வேலையை நாம் கவனிக்கும்படி போதிக்கவேண்டாமோ. அவள்பேரில் குற்றமில்லை; மீனாக்ஷி, நீ என்னமோ சொல்ல வந்ததை நிறுத்தி விட்டாயே?

மீனாக்ஷி:—அதுவா! ஒன்றுமில்லை; நீங்கள்செய்யும் காரியத்தில் குற்றமுள்ளதாக எண்ணிச் சந்தேகம் நிவர்த்தி செய்துகொள்ள எண்ணி வந்தேன். அவ்வாறு நான் நினைத்தது பிசகென்பதைக்காட்ட எங்களிடமே முதல் குற்றம் கண்டீர்கள். இது சீமை, நாடு ஒன்றும் தெரியாது நாங்கள் செய்தவேலை. ஒரு வேளை நான் கேட்பதில் தப்பிதமுண்டானாலும் சிஷ்யைப்போல் எண்ணி மன்னித்துவிடுங்கள். போன ஞாயிற்றுக்கிழமை துலுக்கச்சி குழந்தையைப் பிரத்தியக்ஷமாய் மடியில் வைத்துக்கொண்டு கண் வலிக்கு மருந்து போட்டீர்களே? அதுதான் கொஞ்சம்—

பாட்டி:—கொஞ்சமென்ன, உங்களுக்கு அருவருப்புக்கு இடமாயிற்று? சரி, என் அபிப்பிராயத்தைச் சொல்லி விடுகின்றேன். ஒரு பெரிய கூட்டம் கூடியிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதில் நானா தேசத்து ஜாதியுள்ள ஸ்திரீ புருஷர்கள் கூடியிருக்கின்றனர். அவர்களுக்குப் பிரசங்கம் செய்பவர் உன் புருஷனென்று வைத்துக்கொள். அவர் பேசும் பொழுது 'சகோதர சகோதரிகளே' என்று தொடங்கும் பொழுது நீ அங்கிருந்தால் 'தீண்டக் கூடாதென்று எண்ணியிருப்பவர்களை சகோதர சகோதரி என்று சொன்னீர்களே' என்று வழக்குத் தொடருவாயோ?

மீனாக்ஷி:—அதில்லை பாட்டி. அது சபையோர்களை மரியாதையாகச் சொல்லும் பேச்சுத் தானே.

பாட்டி:—இது மாத்திரமென்ன ஒட்டிக்கொண்டிருக்கிறது. அவர்கள் அசுத்தமாயிருப்பதினால்தான் தொட அருவருப்பாயிருக்கிறது.

ஆனால் வியாதியுடன் வருந்தும் குழந்தைக்கோ மருந்து போடத்தெரியவில்லை. அப்படி யோசித்து எல்லோரும் தள்ளினால் அது குருடாய் விடும். சுத்தத்திற்காக நான் மறுபடியும் ஸ்நானம் செய்கிறேன். எனக்கோ வயதாயிற்று. நான் ஜீவனை எல்லாரிடத்திலும் ஒன்றாய்க் காண்கிறேன். கடவுளிடம் நான் போனாலும் என் பாபத்தை அவர் அறிவார். குழந்தையின் அவஸ்தையைப் பார்க்க என் மனம் கேட்காது. பகுத்தறிவுள்ள மனிதர்களுக்குத் தயவுதான் முக்கியம். ஸ்ரீராம கிருஷ்ணர் கடவுள் நாலிடத்தில் இருக்கிறார் என்று சொல்லுகிறார். அதாவது (1) குழந்தை, (2) கிழவர், (3) நோயாளி, (4) ஏழை இவர்கள் நான்கு பேரிடத்திலும் கடவுள் வசிக்கிறார். அவதூதர், வேடன், வலையன் இவர்களை வணங்கினாரென்று சாஸ்திரம் சொல்லுகிறது. அதனால் அவர் நீசஜாதியாய்விடுவாரா? நாம் அவரைக் கிருஷ்ணனைப் போல் போற்ற வில்லையா? அவர்களுக்குத் தங்கள் அம்பிலும் தூண்டிலிலும் உள்ள லக்ஷியத்தைப்பார்த்தார்; தானும் கடவுளிடத்தில் அவ்விதமான லக்ஷியம் வைக்கவேண்டுமென்று அவர்களைக் குருவாய் அடைந்தார். இதுபோகட்டும். தற்காலத்தில் ஆஸ்பத்திரியிலும் ரயிலிலும் சமத்துவம் கொண்டாடப்படவில்லையா. ரயிலில் ஏதாவது பேசமுடியுமா? இருக்கிற இடத்தில் அவர்களுக்கும் கொஞ்சம் கொடுத்து நாமும் பக்கத்தில் உட்கார வேண்டியதுதான். எச்சல் துப்பி ஆபாசம் செய்யாமல் நாமும் அவர்களுக்குப் புத்தியில் படும்படி இதமாய்ச் சொன்னால் இரண்டு பேருக்கும் சுகமுண்டு. ஆஸ்பத்திரியிலும் இதுபோலவே. ஆனால் அவ்விடத்தில் சுத்தமிருக்கலாம். எல்லோரும்—ஆண் பெண் இருபாலரும்—தயவுக்குக் கட்டுப்பட்டு சுத்தமும் ஒழுக்கும் கையாண்டார்களானால் சுயராச்சியம் என்ற சத்தம் வாயில் வாராது. மனதுடனேயே குடிகொண்டு விடும்.

இதை யெல்லாம் கேட்ட மீனாக்ஷி கொஞ்ச நேரம் பிரமித்தது போலிருந்தாள்.

மீனாக்ஷி:—பாட்டி, கலியாணமாகாத 13-வயதுப்பெண்ணை வீட்டில் வைத்துக்கொள்ள எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது?

பாட்டி:—என் மனச்சாட்சியில்தான் சொல்லியிருக்கிறது. என்னிடமிருக்கும் அப்பெண்ணின் தாய் தகப்பன் மிகவும் ஏழை. நூல் நூற்றே சாப்பிடுகிறார்கள். இதில் பெண்ணின் தாயோ படித்தவனைத் தன் பெண் மணக்கவேண்டுமென்கிறாள். எதிர் ஜாமீன் பிசாசோ குறுக்காக நிற்கிறது. ஏழைகள் இதன் வாயில் என்ன போடமுடியும்? தாங்களேதான் விழவேண்டும்! கலியாண நாள் வந்துவிட்டதே! இன்னும் ஏன் கலியாணம் செய்யவில்லை என்று ஊரார் பெற்றோர்களை இதே வேலையாய்த் தூண்டுகிறார்கள். அவ்வூரில் நாலைந்து வீடுதானுள்ளது. பெண்ணின் தகப்பன் இக்கஷ்டத்தை என்னிடம் முறையிடவே இங்கு விட்டு வைக்கச்சொன்னேன். தரிவேலை செய்யும் ஒரு ஏழைப் பையன் பகூலிபட்டணத்திற்குச் சாயம் போடக் கற்றுக்கொள்ளப் போயிருக்கிறான். அவன் வந்ததும் அவர்களிருவருக்கும் மணம் முடித்து, திருவள்ளுவரும் வாசுகியும் போலிருங்களென்று ஆசீர்வதிப்பேன். நேரமாய் விட்டது என்று பாட்டி எழுந்திருக்கக் கூட்டம் கலைந்தது. எல்லோரும் வீடு போனார்கள்.

பாட்டியம்மாளின் ஊழியச் சிறப்பை நான் கண்ணில் கண்டவாறு "சிந்தாமணிக்கு" எழுதலானேன் சுபம்!

இன்ப ஊற்று.

(ஒரு தேசாபிமானி)

அன்புடையோர்களே!

உலகத்திலே பிறவி யெடுத்த உயிர் அனைத்தும் இன்பானுபவம் ஒன்றே முக்கிய பலனாகக் கருதும். அவ்வின்பானுபவம் வரும் வழியாதென ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்து அதன் வழி நடத்தல் வேண்டும். நடத்தலே இன்பானுபவத்திற்குத் தக்க காரணமாகும்.

அவ்வின்பத்தை உவமிக்கின் ஓர் ஒப்புயர்வற்ற கனியை ஒக்கும். அக்கனியை அடைய அன்பாம் பைங்கூழ் அறத்தொடு வளர்தலே நலம். அப்பைங்கூழ் கல்விப் பெரு மழையின்றி ஓங்கி வளர்ந்து உறுபயன்றரா. ஆகலால் கல்வியே எவ்வகை யின்பங்களையும் பெற்று மகிழ்தற்கு ஏற்ற சிறந்த காரணமாகின்றது. கல்வி ஆண்பால் பெண்பால் என்ற இருபிரிவினருக்கும் மிக உரியது. ஆகலால் கல்வியை ஆண்பாலரேயன்றிப் பெண்பாலரும் அவசியம் கற்றல் வேண்டும் என்பது ஒருதலை, இல்லற இன்பத்தையும் நல்லறங்களையும் ஒருங்கே நடத்துபவர் அவராதலின்.

நிற்க, பெண்மணிகட்கு இயற்கை யுணர்வு இயல்பாகவே மிகுதியும் உள்ள தென்பது அநுபவ முறையில ஒவ்வொருவரும் உணர்ந்ததே. அவ்வுணர்ச்சியோடு செயற்கை யுணர்வாகிய கல்வியும் ஒருங்கே பெற்று விடுவார்களாயின் நம்தேயமும் பெறமுடியாத பொருள் இருக்கின்றதோ வென்று நாம் பெரு மகிழ்வெய்தலாம். பெண்மணிகட்கு அன்பும இயற்கையாகவேயுள்ளது. அவ்வன்போடு கல்வியும் சேரின் பொன் மலர் நாற்ற முடைத்தாம் தன்மையையடையும். மேலும் மகளிர் கல்வியிற்றேர்ந்திருப்பின் அவர்கள் வயமாயே நடக்கும் குடும்பபாரம் செவ்வனே நடைபெறும். நாயகனுடைய வருவாய்க்குத் தக்க செலவு செய்ய அவர்களுக்குத்தோன்றும் தம்மகவைச் சீரும் சிறப்பும் உறச்செய்து கல்வியிற்றேருவித்து ஒழுக்கத்திற் குன்றா உயர் நலம் அடையச்செய்வார். தந்தை மகற்குச்செய்ய வேண்டிய உதவியைத் தாயே பொறுப்பேடுத்துச் செய்வாள். "கற்றவரைக்கற்றவரே காமுறுவர்" என்றபடி மகளிர் கல்வி தம் புதல்வர் கல்விவரை ஏற்ற அனுகுணத்தைச் செய்யும்.

நிற்க, சிறுவர் தந்தையைப்பார்க்கினும் தாயிடமே அன்புடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். அன்புள்ள இடத்திலே இன்பம் விளையுமாதலின் தாய் சொன்ன வார்த்தைகள் எல்லாம் குழந்தைகட்கு இன்பத்தைத் தருவனவாகும். அவ்வார்த்தைகள் கல்வியோடு பழகுமாயின் தக்க பலனைத்தரும். கல்வி இளமையிலன்றி முதுமையில் வளர்ச்சியுறா. "இளமையில் பழகிய பழக்கம், நன்றேயாயினும் தீதேயாயினும் அதுவே பெரும் பான்மையும் மரண பரியந்தம் தொடரும்" என்பது பெரியோர் வாக்கு. இளமையில் தீய பழக்கம் குடிகொண்டுவிடின் பின் ஒரு பொழுதும் அதினின்றும் புதல்வர்களை நன்னெறியில் மீட்கமுடியாது. உதாரணமாக, ஒரு இளைய மூங்கிலை வெகு இலகுவாக வளைத்து விடலாம். அம்மூங்கிலும் பெறற்கரிய பேறு பெற்று அரசன் பவனிவரும் பல்லக்கிற்கு ஆதாரமாக நிற்கும். இளமையில் வளைக்காமல் விட்ட மூங்கில் கழைக்கூத்தாடுபவன் கையில் புக்கு இன்னலுறும். இதுபோல குழந்தைகளும் இளமையில் நன்னெறி பயிற்றப்பெறுதல் வேண்டும். அதற்

குத் தாய்மார்கள் கல்வியே முக்கிய கருவியாகும். தந்தை இப்பொறுப்பை ஏற்றால் நலம் விளையாதோ? இதற்குத் தாய்மார்களே கற்றுக் கற்பிக்கவேண்டும் என்னும் அவசியம் என்ன? என்று ஒரு சிலர் சிந்திக்கலாம். தந்தை தன் குடும்பத்தைக் காப்பதற்குப் பொருளீட்டல் வேண்டுமன்றோ? பொருளீட்டல் என்பது இலகுவான காரியமன்று. எத்தனையோ முயற்சிகள் செய்து பொருளீட்ட அயல் தேசம் செல்ல நேரும். நேருங்கால், இல்லற தர்மத்தை நடத்திவருபவள் மனைவியேயாகின்றாள். அப்பொழுது எப்பொறுப்பையும் நாயகன்மேல் சுமத்தினால் அவன் மனம் பல வழியாலும் கலங்க நேரிடும்; பலர் கூடிச் செய்யக்கூடிய ஒரு பெருங்காரியத்தை ஒருவராகச் செய்ய இயலாதவாறுபோல அவன் ஒருவனாய் மிகுந்த பொறுப்பு ஏற்றுக்கொள்ளின் மனவலி குறையும். மனவலி குறைந்தால், உடல்வலி உடனே குறையும்; உடல்வலி குறையின் ஒன்றும் செய்ய இயலாது; அல்லலுற்று அழிய நேரிடும். ஆதலின் தாய்மார்கள் படித்தே தம் மக்களை நலவழிப்படுத்தலே நம் நாடும் நாமும் பெறற்குரிய பெறும் பேறாகும்.

அன்றியும், தம் நாயகர் விதிவலியின்றி விண்ணுலகேகின் தம்முடைய புதல்வர், பொருள் முதலியவற்றைக் காத்துவரும் வன்மை படைத்தவர்கள் தாய்மாரன்றோ?

நிற்க, ஒரு சிலர் பெண்கள் கற்பதால் தீங்கு விளையும் என்று உணர்வென்பது ஒரு சிறிதும் இன்றி உரைக்கின்றார்கள் ஒரு ஆடவன் குமாரப்பருவத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் பயக்கும் நூல்களை வாசிக்குங்கால் அவனறிவு முன் சொன்ன இரண்டிலும் பின் சொன்ன ஒன்றிலும் செல்லாது இடைப்பட்ட இன்பத்தின்பாலே குடிகொண்டு நல் வழியில் அதனை யநுபவியாது தீயவழியாக வேசியர் வீடே வேட்கைதணியும் இடமாகக் கொள்வானாயின், அவனைப் பெற்றோர் படிக்க வைக்காமல் இராது படிக்க வைத்துக் கெடுத்தனர் என்று கூறுவார் கூற்றை ஒத்து நிற்கும் அன்னார் உரைகள். ஆனால் பெண்கள் முற்காலத்தில் படித்திருக்கவில்லை என்றும், பெரியோர் சென்ற வழியே நாம் செல்லல்வேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள். அன்னவருக்கு "நீங்கள் பாலப்பருவத்தில் பயின்ற நூல்களை எண்ணிப்பார்த்தால் நுமக்கே விடை விளங்குதலோடு முன்னோர் செய்த செயல்கள் அனைத்தும் நாம் செய்கின்றோமா என்றும் கருதுங்கள்" என்றும் உரை பகரலாம். ஔவையார் உரைத்த நூல்களைப் பயின்று அவள் இனமாகிய பெண்களுக்குக் கல்வி புகட்டக்கூடாது என்று உரைப்பார் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற மூதுரையின் பலன் கைவரப்பெறுவர். அன்றியும் காரைக்காலம்மையார் கல்வியின் திறத்தை ஊன்றிப் பார்க்கும் உத்தமர்க்கே பெண் கல்வியின் பலன் நன்கு விளங்கும்.

நிற்க, ஆசிரியர் திருவள்ளுவர் "புதல்வர்ப் பேறு" என்னும் அதிகாரத்தில் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்றருளிச்செய்கின்றார். இதை நோக்குங்கால், மகனைச் சான்றோன் என்று அறிவான் முதிர்ந்தோர் கூறலை உணர வேண்டுமாயின், தாயும் கற்றறிந்தவளாயிருந்தாலொழிய மகனைச்சான்றோன் என்று உரைத்தல் விளங்கிப் பெருமகிழ்வு எய்த முடியாது. ஆதலால் பெண் கல்வி இத்துணைப்பெருமையுடைத்தாயிருப்பதால், அதனை மகளிர்ப்பேறு பெற்ற ஒவ்வொருவரும் உணர்ந்து பெண் கல்வியை மேன்மை யடையச் செய்து நாம் இன்பப் பெரும் பேறு அடைவோமாக.

பெண் கல்வியைப் பெருமை யடையச்செய்தற்கு உரிய வழியிப்பொழுது நாம் பெற்று இருக்கின்றோம். அது பொதுவாக எந்நாட்டார்க்கும், சிறப்பாக வைசிய நாட்டார்க்கும் உயர்ந்த பலனைத்தருமென்று எண்ணுகின்றோம். அதுவே நமது தேவைமா நகரில் உள்ள "ஸ்ரீசொர்ண மூர்த்தி பெண் பாடசாலை"யாகும். அப்பாடசாலைத் தலைவர் இவ்வூர் வைசியர் குலத்துதித்த திருவாளர் வெ. அழகப்ப செட்டியார் என்பவராவர். இவவாண்டு ஆவணித் திங்கள் 22 ம் நாள் நிறுவப்பெற்றதாகும் அப்பாடசாலை. அதன் தலைவர் தனக்கென வாழாப்பிறர்க்குரியாளர். தம் பாடசாலை செவ்வனே நடக்கவேண்டுமென்று அதனிடத்தே கண்ணுங் கருத்துமாய் இருப்பவர். மாணவிகள் நிறைவாக வந்து கொண்டிருப்பின் இவர்மனம் ஆநந்தசாகரத்தில் அமிழ்ந்துவிடும். இவர் இன்னும் கைத்தொழிலாகிய பின்னல், தையல், பின்னற் கோலாட்டம், நூல்நூற்றல், பாகசாஸ்திரம் முதலியனவும் சங்கீதப் பயிற்சியும் பயிற்ற ஓர் நன்னடக்கை வாய்ந்த உபாத்தியாயினியையும் விரைவில் நியமிக்கப் பெருமுயற்சி செய்கின்றனர். பிள்ளைகள் பயிலும் பாடம் நன்னடைபயிற்றும் நாவலர் நூல்களே; பாடும் பாடல்கள் நாவலர் பாடிய நன்மைப் பாடலே. சுதந்தர வாழ்வை நிதந்தரும் பாரதியார் பாடலுமுண்டு.

ஆதலால் பெண்மகவீன்ற ஒவ்வொருவரும் தம் அருஞ்செல்விகளை இவர் பாடசாலையில் படிக்கச் செய்து உலக முன்னேற்றமடைய நன்மை புரிவார்களாக. சுபம்!

இரங்கோன் துறைமுகத்தில் கட்டாயமாக அம்மை குத்தல்.

(ஸ்ரீமான் எஸ். ஆர். நாயுடு)

இரங்கோன் துறைமுகத்தில் கட்டாயமாக அம்மை குத்துவதினால் ஏற்படும் கஷ்டங்களைப்பற்றி விசாரணை செய்வதற்காக 1918-ம் வருஷத்தில் நியமனம் செய்யப்பட்ட கமிட்டியார் தமது விசாரணையின்பின்னர் இரங்கோனுக்குவந்து சேரும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்குத் தெளிவான அம்மை குத்தின அடையாளம் இல்லாவிட்டால் அவர்களுக்குத் துறைமுக சுகாதார ஸ்டேஷனில் அம்மை குத்தப்பட வேண்டுமெனத் தீர்மானித்தனர். ஏராளமாக வந்து சேரும் தொழிலாளர்கள் பலவிடங்களுக்குப் பரவிவிடக் கூடியவர்களெனவும் அவர்களை ஒருதடவை இரங்கோனில் பரவவிட்டு விட்டால் அவர்களை மறுபடியும் அம்மை குத்துவதற்காக ஒன்று சேர்க்க முடியாதெனவும் அவர்கள் சாக்குக் கூறிவந்தனர். கட்டாயமாக அம்மை குத்தும் இந்த வழக்கத்தை ஏற்பாடு செய்து 8 வருஷங்களுக்கு மேலாகியும் இங்கு வந்திருக்கும்பொழுது ஏற்படும் கஷ்டங்களைக் குறைக்கப் பொது ஜனங்கள் கவர்ன்மெண்டாருடன் ஒத்துஉழைப்பதில்லை. பல தடவைகளில் கப்பல்கள் மிகவும் உஷ்ணமான நேரத்தில் வந்து சேருகின்றன. அம்மையின் அடையாளங்கள் தெளிவாக இல்லாவிட்டால் அவர்கள் பலவந்தத்தின்பேரில் அம்மை குத்தப்படுகிறார்கள். மழை நாட்களிலோவெனின் நிலைமை இன்னும் மோசமாக இருந்து வருகிறது. ரயில்வே ஸ்டேஷன்களில் இருப்பதைப்போல் பிளாட்பாரம்

இல்லாததால் பிரயாணிகள் நனைந்து விடுகின்றனர். இவர்கள் பரிசோதனைக்காக இடுப்பு வரையில் துணிகளை அவிழ்க்கவேண்டி நேரிடுகிறது. பரிசோதனை முடிந்த பின்னர் மீண்டும் நனைந்த ஆடைகளையே அணிந்துகொண்டு அவர்களுடைய வீட்டிற்காவது அல்லது தர்மசாலைக்காவது போகவேண்டி நேரிடுகிறது. மேலும் பிளேக் பிளாண்டுகள் இருக்கின்றனவாவென்று கண்டறிவதற்குப் பிரயாணிகளின் தொடையின் அடிப்பாகமும் பரிசோதனை செய்யப்படுகிறது. இவ்வாறுகப் பிரயாணிகளின் கட்டுப்பாடான பரீக்ஷை எந்தத் துறைமுகத்திலும் செய்யப்படுவதே கிடையாது. சின்ன அம்மைநோயை இந்தியப் பிரயாணிகள் பரவச் செய்கிறார்களென்று அவர்கள்மீது குற்றஞ் சாட்டப்படுகிறது. இவ்வளவு வருஷங்களாக மும்முரமாகப் பரீக்ஷை நடத்திவந்தும் இரங்கோனில் அம்மைநோயும் பிளேக் நோயும் பரவிக்கொண்டுதான் வருகிறது. பரிசோதனையைச் சுளுப்படுத்துவதற்காக ஸ்திரீகள் தமது சொந்தக்கார ஆண்பிள்ளைகளிடமிருந்து தனித்து வைக்கப்படுகின்றனர். இந்திய ஸ்திரீகள் பொது இடங்களில் நடமாடுவது வழக்கமில்லாததுபற்றி அவர்களது சொந்தக்காரர்களை எப்படி சந்திப்பதென்பது அவர்களுக்குத் தெரியாமல் போய்விடுகிறது. முக்கியமாக அம்மை குத்தும் அசௌகரியத்தைத் தடுப்பதற்காக பாமர ஜனங்களுக்குக் கல்வி அறிவு ஊட்டுவதில் மிகவும் சிரத்தைகொண்டு மேன்மை தங்கிய பர்மா கவர்னர் சுகாதாரக் காட்சியைத் திறந்துவைத்தது போலவே காங்கிரஸ் கமிட்டி, அகில இந்திய ஹிந்து சபை, முஸ்லீம் சங்கம் முதலிய பொது ஸ்தாபனங்களும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒன்றுகூடி இது விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு இவ்விடத்தில் கட்டாயமாக அம்மை குத்தப்படுவதைப் பற்றி பிரசங்கங்கள் மூலமாகவாவது விளம்பரங்கள் மூலமாகவாவது பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். இரங்கோனுக்கு வர விரும்புகிறவர்களுக்கு தமது அம்மை அடையாளங்களைப்பற்றி ஏதாவது சந்தேகம் ஏற்படுமாயின் அவர்கள் முன்னதாகவே அம்மை குத்திக்கொள்வதன்றியில் கூடுமானவரையில் இரங்கோனிலுள்ள பரிசோதனை செய்யும் அதிகாரி முன்னிலையில் அம்மை குத்திக்கொண்டதாக சர்டிபிகேட்டுகளையும் காண்பித்தல் நலம். இவ்வாறு செய்தால் துறைமுகத்தில் அம்மை குத்திக்கொள்வதினால் ஏற்படும் அசௌகரியங்களைத் தடுத்துவிடக்கூடும்.

உறவினர் கூட்டம்.

(காவேரிக் கரையில் பிறந்தவள்.)

நாராயண சாஸ்திரிக்கு உடன் பிறந்தவர்கள் நால்வர். அவர்கள் முறையே சாமிநாதன், கிருஷ்ணமூர்த்தி, தர்மன், கோபாலசாமி எனப்படுவர். நாராயண சாஸ்திரியின் மனைவியின் பெயர் தர்மாம்பாள், ஒரு பெண்ணும் இரண்டு பிள்ளைகளுமுண்டு. பெண் பெயர் ஞானம்.

சாமிநாத சாஸ்திரியின் மனைவிக்கு கமலாம்பாள் என்று பெயர். அவர்களுக்கு மூன்று பிள்ளைகளும், ஒரு பெண்ணுமுண்டு. மூத்த மகன் பெயர் மூர்த்தி, மகள் பெயர் மீனாக்ஷி.

கிருஷ்ணமூர்த்திக்கு விசாலாக்ஷி என்ற மனைவி; மூன்று பிள்ளைகளும், நான்கு பெண்களுமுண்டு. மூத்தமகள் பெயர் ஸரஸ்வதி.

தர்மனுக்கு ராஜம் என்று பெயர்கொண்ட மனைவி. ஒருபிள்ளை, இரண்டுபெண்கள்; பெண்களுக்கு மங்களம், சாந்தா என்று பெயர்.

கோபாலசாமிக்கு லீலாவதி என்று பெயர் பூண்ட மனைவி. மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களுமுண்டு. பெண்களின் பெயர் பட்டு, செல்லம்

சகோதரர்கள் ஐவரும் தங்கள் தங்கள் குடும்பங்களுடன் பெங்களூரில்சமீபத்திலேயே குடியிருந்தார்கள். ஆதலால் எந்த விசேஷங்களுக்கும் எல்லோரும் சந்தித்துக் கூடுவதற்குச் சௌகரியமா யிருந்தது. இவர்கள் எல்லோரும் தரித்திர நிலையிலாவது, அல்லது பெரிய பணக்கார ஸ்திதியிலாவது இல்லை. சாதாரண ஸ்திதியில்தான் இருந்தார்கள். சகோதரர்களுள் பணவிஷயத்தில் கொஞ்சம் ஏற்றத்தாழ்வு; அதிகமில்லை. ஆயினும் ஸ்திரீகளுக்குள் சச்சரவு உண்டாவதற்குப் போதுமான வித்தியாச மிருந்தது. இன்னம் இதைப்போன்ற சிறிய வித்தியாசங்கள் சில உண்டு. அவர்களுக்குள் மனத் தாங்கலுக்கு அநேக காரணங்களும் உண்டு. முக்கியமாய் அவர்கள் புத்தியை வேறு விஷயத்தில் செலுத்துவதில்லை. ஒருவரைப்பற்றி ஒருவரிடம் பொய்யுரைப்பதிலும், ஊரிலுள்ள தங்கள் சிநேகிதிகளிடம் தங்கள் வீட்டு விஷயங்களைக் குறித்து கதை கட்டுவதுமே தொழிலாயிருந்தார்கள்.

தற்சமயம் இவர்கள் கூடியிருப்பதின் காரணம் சாமிநாத சாஸ்திரியின் மூத்த மகனாகிய ராமமூர்த்திக்கு ஸீமந்தம்.

கூடத்திற்கு அடுத்த ஹாலில் ஸ்திரீகளெல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். கமலாம்பாள் மாத்திரம் மீனாக்ஷியைக் கையில் பிடித்துக்கொண்டு கூடத்தில் நிற்கிறாள். சாமிநாத சாஸ்திரி வாசலிலிருந்து கூடத்திற்கு வந்தார். கமலாம்பாள் அவரைக் கண்டதும் தலையிலடித்துக் கொண்டு "ஐயோ! ஐயோ! நான் அப்பொழுதே சொன்னேனே! இந்த சம்பந்தம் வேண்டாமென்றேனே. கேட்டீரா! என்னையும் என் குழந்தை மீனாக்ஷியையும் சந்தி சிரிக்க அடிக்கிறீர்களே. உங்களுக்கு அவமானமாயில்லையே. ஐயோ! இப்படி வெட்கமில்லாமலிருக்கலாமா? எல்லோருக்கும் பங்கடங்கிப் போய்விட்டதே. எனக்கு ஏன் வயதானபிறகு இந்தப் பெண் பிறந்தது"?

சாமிநாத சாஸ்திரி "இந்தா, இதைப்பாரு! மெள்ளப்பேசு; யாராவது கேட்டுக்கொண்டிருப்பார்கள். இப்பொழுது திடீரென்று என்ன கோபம்?" என்றுமிக்க சாந்தமாய்க் கேட்டார்.

கமலா—"கோபமென்ன, ராமமூர்த்தி நாலு நாழியாகத் தன் மச்சினனுடன் பேசிக்கொண்டிருக்கிறான். குழந்தை அண்ணாவிடம் போகிறேன் என்று போனாள். அவன் 'அம்மாவிடம் போ' என்று சீறி விழுந்தானாம். ஐயோ! நான் என்ன செய்வேன்! என் குழந்தையைக் கண்டால் ஒருவருக்கும் ஆகவில்லை. ஸ்வாமி என் குழந்தைக்கு நல்லவழியாக விடணுமே! இதோ இந்த ஹாலில் உட்கார்ந்திருக்கிறார்களே, (குரலைச் சற்று இறக்கி) அவர்கள் யாராவது என் குழந்தையைப் பார்த்து 'அம்மா சாப்பிடவாடி.' என்று சொன்னார்களா? நான் குழந்தைக்கு ரொம்ப செல்லம் கொடுக்கிறேனாம் (கம்பீரமாய் தலையை நிமிர்த்தி) ஆமாம், செல்லம் கொடுப்பேன். என் குழந்தையை நான் அருமையாகத்தான் வளர்ப்பேன். இவர்களெல்லோரும் வளர்த்திருக்கிறார்களே. பெண்களின் அழகைப்பார்! கூத்தாடிகளாட்டமா! என்ன பெண்கள்! ஒவ்வொரு பெண்ணின் மாமியாரும் என்னிடம் சொல்லி அழுதிருப்பது கொஞ்சமோ! ஏன் அந்த வடுவூர்க் காரியைத்தான் பாருமே! ராங்கி வீசுகிறது. பிற

ந்த இடம் பணக்கார இடமாம். என் தகப்பனார் ஏழைதான். அதனால்தான் இதுகளுக்கெல்லாம் 'சாம்பமூர்த்தி மகளாவது, நல்லசாப்பாடு சாப்பிடலாமா, நல்ல புடவைகட்டிக் கொள்ளலாமா, பெண்ணுக்கு நல்ல பாவாடை கட்டலாமா' என்று அடைத்துத் திணருகிறது."

சாமிநாத சாஸ்திரி பார்த்தார், "ஏது இதற்கு முடிவில்லை" என்று எண்ணிக்கொண்டு "மீனா! வா" என்று குழந்தையை எடுத்துக்கொண்டு வாசலுக்குப் போய்விட்டார். கமலம் புருஷன் போன பிறகு தானும் உள்ளே போனாள். அவள் போனதும் அதுவரையில் தூண் மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த ராஜம் ஸ்திரீகள் கூடியிருக்கும் ஹாலுக்குள் போனாள். போனதும் "தர்மாம்பா மன்னி! உங்களைப்பற்றி இத்தனைநேரம் கூடத்தில் நடந்த லெக்சர் கேட்கவே முடியவில்லை. வடூர்க்காரி என்று அவள் புருஷனிடம் எத்தனை சொன்னாள் தெரியுமா?" என்றாள் ராஜம். தர்மாம்பாள் இவர்கள் யாரைக்கண்டாலும், எந்த வம்பில் தன்னை இறக்கி விடுவார்களோ என அச்சப்படுவாள். ஆயினும் இவர்களுடன் பொல்லாப்புக் கூடாது என்று "என்ன சொன்னாள்?" என்று கேட்டாள்.

உடனே எல்லோரும் அவளை வளைந்து கொண்டு 'என்னடீ! என்னநடந்தது! சொல்லு' என்று ஆத்திரத்துடன் கேட்டார்கள். ராஜமோ மகா உற்சாகமாய்க் கனைத்துக்கொண்டு, கமலாம்பாள் அங்குள்ள ஒவ்வொருவரையும் குறித்துத்திட்டினதாகக்கதைகட்டிப்பிரசங்கம் ஆரம்பித்தாள். தர்மாம்பாளைத் தவிர மற்றவர்கள்யாவரும்கண்ணைக்கூடக் கொட்டாமல்கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தக் காலக்ஷேபம் இவ்விடம் நடந்துகொண்டிருக்க, பின் கட்டில் கமலாம்பாள் ஸரஸ்வதியுடன் பேசிக்கொண்டிருந்தாள். இப்பொழுது நாம் ஹாலில் நடக்கும் பிரசங்கத்தை கேட்பதா? அல்லது பின் கட்டில் நடக்கும் பிரசங்கத்தை கேட்பதா? ஒரு காரியம் பண்ணலாம். இந்த ஸரஸ்வதியுடனிருப்பதுதான் தேவலை. அவள்தான் ஒரு பிரசங்கத்தையும் விடாது கேட்பவள். அவளுக்கு வம்பென்றால் தேவாமிர்தம். ஆகலால் இப்பொழுது நாம் பின் கட்டுக்குப் போவதுதான் சரி.

ஸரஸ்வதி—"பெரியம்மா! நீங்களென்னமோ மீனா உங்களுக்கு பிறக்குமுன், எங்களெல்லோரையும் ரொம்ப அசடு என்றும் எங்களைத் தாயார் சரியாய்வளர்க்கவில்லையென்றும் பரிஹாஸம் பண்ணினீர்களாம். அதற்காகத்தான் ஞானம், பட்டு, மங்களம் எல்லோரும் 'இவளென்ன வாலையும், தலையும் கிள்ளி வளர்க்கிறாளோ? ரொம்ப செல்லத்தைக் கொடுக்கிறாள். பெண்ணுக்கு முழங்காலில்தான் புத்தி இருக்கும்' என்று சொல்லுகிறார்கள்."

கமலம்—"அடியே! என் வயிறு எரிகிறது! இந்தப் பாவிகள் கலியாணங்களுக்குக் காசாலும் பணத்தாலும் உங்கள் பெரியப்பா அழித்தது கொஞ்சமோ? அதிருக்கட்டும். இந்த ஞானம் என்னடீ! ரொம்ப பணக்காரியோ?"—(முகத்தைச் சுளித்துக்கொண்டு கண்களில தீப்பொறி பறக்க)—"என்னமோ கல்லிழைத்த வளையல் கையில் போட்டுக்கொண்டு மினுக்குகிறாளே. இந்த மாதிரி என் பெண்ணுக்குப் பண்ணிப்போட எத்தனை நாழி செல்லும். அடியே, அவம்மா வடூர்க்காரி போனமாதம் இங்கு வந்து புடவைக்காரனை வீட்டுக்கு வரவழைத்து ரூ 75-க்குக் கடனாகப் புடவையை எடுத்துக் கொண்டுபோனாள். அடியே, அந்தக் கடன் என் புருஷன்தாண்டீ கொடுத்தான். இந்தப்பாவி ஏண்டி இப்படி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிறாள்?"

ஸரஸ்வதி மனதிலுள், "சண்டாளி! பெரியம்மா புடவைக்குப் பணத்தைக் கொடுத்து விட்டுத்தானே போனாள். என்னபொய்சொல்லுகிறாள்! மகாபாவி!" என்று எண்ணிக்கொண்டு, உரக்க "ராஜம் சித்தி இருக்கிறாளே. அவள் சொல்லுகிறாள்—'கமலம் என்ன, பிள்ளையுடனும் மருமகளுடனும் சதா சண்டையிடுகிறாள். புருஷனுக்குத் தெரியாமல் நகை பண்ணுகிறாள். ஏகப்பட்ட பணம் வட்டிக்கு விடுகிறாள். பாவம்; மச்சினனுக்குச் சரியாய் சாதமே போடுவதில்லை. அவரைப்பார்த்தால் அங்கலாய்ப்பாயிருக்கிறது' என்கிறாள்."

கமலம்—"அந்தத் துஷ்டை தன் மச்சினனுடன் பேசிப்பேசி அவர் தலையைத் தடவியிருப்பது கொஞ்சமோ? நானென்ன பணக்கார இடத்தில் பிறந்தவளா? இவள் அப்பன் பணக்காரன். அதனால் இவள் ஆம்படையான் தலையையும் தடவிப் பணத்தை நிறையக்கொட்டி புடவையோ நகையோ பண்ணிக்கொண்டுவிட்டு 'என் பிறந்தாத்தில் பண்ணினா' என்று மினுக்கிக்கொண்டு சொல்லுகிறாள். நான் அப்படிச் சொல்லமுடியுமோ? ஏன், என் புருஷனுக்கு 300 ரூபாய் சம்பளம். நான் வட்டிக்கு விடுவேன்; இந்த தரித்திரம் அதைக் கேட்கலாமா? எல்லாச் சனிகளுக்கும் பொறாமை."

ஸரஸ்:—"லீலாவதி சித்தி உங்களுடன் பேசுவதே யில்லையாமே?"

கமலம்:—"அவள் கிடக்கிறாள். புருஷனுக்கு ரூ. 500 சம்பளமாம். ஆகாசத்தையும் பூமியையும் ஒரே தாண்டாய் தாண்டி விடுகிறேனென்கிறாள். (திடீரென்று முகத்தில் சாந்தக்களையைக் காண்பித்து) பணத்தினாலாவதென்ன? அது என்ன ஒசத்தி? என்னமோ நாம் ஈச்வரனுக்குப் பொதுவாக நடக்கவேண்டும். எனக்கென்னமோ இந்தப்பணம் ஒரு பொருளாகவே தோன்றவில்லை (என்று சற்று யோசனையில் ஆழ்ந்து மறுபடியும்) அபூர்வமாகத்தானே இந்த மீனா பிறந்திருக்கிறாள். அவளுக்கு நல்ல

தாய் ஒரு பாவாடையோ, நகையோ வாங்கிக் கொடுத்தாலென்ன? இவள் பெண்களுக்கு ஜரிகையில்லாத பாவாடையே கட்டுவதில்லை. தினுஸு தினுஸாய் நகை. பட்டு, செல்லம் இரண்டும் தாஸிப்பெண்களைப் போலிருக்கின்றன. இவர் 'கோபால்சாமி, கோபால்சாமி' என்று உயிரை விடுகிறாரே. அவன் இப்பொழுது ஒரு தம்பிடிக்குப் பிரயோஜனப்படுகிறானா?" பரிசாரகன் உள்ளிருந்து வந்து 'அம்மா, டிபன் தயாராகி விட்டது. சம்பந்தி யாத்துக்கு அனுப்புங்கோ' என்றான். கமலம் உள்ளே நுழைய ஸரஸ்வதி கூடத்தில் நடக்கும் கச்சேரிக்கு வந்து சேர்ந்தாள். அப்பொழுதுதான் ராஜம் தனது கதையை முடித்த சமயம். எல்லோரும் இவளைக் கண்டதும் 'எங்கேயடி போயிருந்தாய்?' என்றார்கள். அவள் "முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தேன்" என்றாள். உடனே எல்லோரும் "என்னடி சொன்னா?" என்றார்கள். ஸரஸ்வதி "அவளென்ன சொல்லுகிறாள்? தன்னால்தான் இந்த உலகம் நடக்கிறது. எல்லோரும் தன் புருஷன் சம்பாதிக்கும் பணத்தில்தான் சாப்பிடுகிறார்கள் என்கிறாள்" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தாள்.

ராஜம்:—"என்னடி, இப்பொழுது கையில் மூன்றுவளையல்கள் ஏறியிருக்கின்றனவே. அவைகள் ஏதென்று சொன்னாளா?"

விசாலாக்ஷி:—ஆமாம், வளையலுக்கு மெருகு போடவில்லை. எதற்காகத் தெரியுமா? புருஷனுக்குத் தெரியக்கூடாதாம்.

மங்களம்:—ஏண்டி, மீனாளுக்கு வைரத்தோடு வாங்கிப் பெட்டியில் வைத்திருக்கிறாளாமே, போட்டாலென்ன?

ராஜம்:—பாவம்! அந்தப் பிராமணனுக்குச் சரியாய் சாதமே போடுவதில்லை. சாப்பாட்டுச் செலவுக்கென்று பணத்தைக் கேட்டுவாங்கி இப்

படியெல்லாம் நகை பண்ணுகிறாள். நான் ஒரு நாள் பத்து ரூபாய் வேண்டுமென்று கேட்டனுப்பினேன் எனக்கு அவசரமாக வேண்டியிருந்தது. உடனே மறுநாள் ஆளை அனுப்பிப் பணத்தை வாங்கி வரச் சொல்லி விட்டாள். நான் என்ன பத்து ரூபாய் பெறமாட்டேனா? அந்த மச்சினன் பணம் எனக்குச் சொந்தமில்லையா?

ஸாஸ்வதி:—அப்புறம் நீங்கள் பணத்தை அனுப்பி விட்டீர்களோ?

ராஜம்:—"நானென்ன செய்வது? என் மகன் இவன் பிள்ளை சுப்பிரமணி போட்டிருக்கும் ஷர்டுப்போல் வேண்டுமென்று அழுதான். அதனால்தான் பணம் கேட்டனுப்பினேன்" என்று அந்த ஆளிடம் சொல்லி 'தவிர இதை யஜமானிடமே சொல்லு' என்றும் சொல்லியனுப்பினேன். அவனே பத்து நிமிஷத்துக்கெல்லாம் மறுபடியும் வந்து 'இல்லை, பணத்தை உடனே வாங்கி வரச் சொன்னா' என்றான். நான் உடனே அடுத்த தெரு காமாக்ஷியிடம் போய் இதைச் சொல்லிப் பத்து ரூபாய் கடனாகக் கேட்டேன். அவள் உடனே மிக்க பரிதாபப்பட்டு பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள். நான் அதை அந்த நாயின் மூஞ்சியில் விட்டெறிந்து விட்டேன்." விசாலாக்ஷி ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும் லீலாவையும் ஞானத்தையும் சுட்டிக்காட்டி "அதோ பார்! கல் வளையும் கல் அட்டிகையும் பேசிக் கொள்கின்றன. கோபால்சாமி குழந்தைகளை அழைத்துகொண்டு வெளியில் போயிருக்கிறாராம். அவரைத்தான் பார்த்தாயா? தன் மனைவி குழந்தைகள் பேரில் அசாத்திய மோகமாயிருக்கிறார்.

சாந்தா:—பெரிய பெரியம்மா எங்கே?

ஸாஸ்வதி:—அவள் காப்பி யாத்துக்குப் போயிருக்கிறாள்.

மங்களம்:—அம்மா, பெரியம்மா மோதிரத்தைப் பார்த்தாயா?"

விசாலாக்ஷி:—"தர்மாம்பா மன்னி போட்டுக்கொள்ளும் நகை, புடவை எல்லாம் என் பணந்தான்" என்று சொல்லுகிறாள் கமலம்.

ராஜம்:—சொல்லட்டும். மன்னிக்கு என்ன அத்தனை நகை? இங்கு நம்முடன் பேசிக் கொண்டிருந்தாலென்ன? மோதிரம் என்ன இப்பொழுது?

விசாலாக்ஷி:—"ஆமாம். இப்பொழுது நாமெல்லோரும் இல்லையோ? மோதிரம் போட்டுக்கொண்டால்தான் பெருமையோ? எனக்கு என்னமோ நமக்கிருப்பது போதுமே என்று இருக்கிறதே தவிர மேலே மேலே பண்ண வேண்டும் என்ற எண்ணமில்லை. இருந்தாலும் நான் அந்த மோதிரம் மாதிரி இன்னம் ஒரு மாதத்தில் பண்ணிப் போட்டுக்கொண்டு விடுகிறேன்." திடீரென்று திரும்பி "இந்தத்தளுக்கை பாருங்கோடி" என்றாள். எல்லோரும் திரும்பிப் பார்க்க லீலா மகனுக்கு நிஜார் போட்டுக் கொண்டிருந்தாள்.

ராஜம்:—லீலா, இப்படி வாயேன். நீ ஏன் பேசவேயில்லையே. ஞானத்தைக் கூடக் காணோமே.

லீலா:—"ஞானம் மாமாவாத்துக்குப் போயிருக்கிறாள். சாந்தாவைப் பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தி விட்டீர்களாமே.

ராஜம்:—ஆமாம் எனக்கென்ன பணமா காசா, எல்லோரையும் போல் நானிருக்கிறேனோ? என் மகனுக்கு ஒரு நல்ல ஷர்டு உண்டா, நிஜார் உண்டா. என்னமோ நான் மெள்ள ஏதோ காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறேன்.

ஸாஸ்:—"ஏது சித்தி! நீங்கள் கட்டியிருக்கும் புடவை சுமார் ரூ 60 இருக்கும்; அதற்கேற்ற நகைகள். இவைகளைப் பார்த்தால் இப்பொழுது நீங்கள் சொல்வது கொஞ்சங்கூடப் பொருந்தாதது." ராஜம் உடனே ஸாஸ்

வதியைப்பார்த்த பார்வையானது அவள் பட்டுகீழே விழுந்துவிடுவாள் போலிருந்தது. ஆனால் அப்படி ஒன்றும் நேரிடவில்லை. ஸாஸ்வதி லீலாவுடன் "எல்லோரும் உன் அட்டிகையைபற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாத்துக்கும் பொறாமை" என்று ரகசியமாய்ச் சொன்னாள். மங்களமும் சாந்தாவும் தமது தாயாரிடம் "இந்த ஸாஸ்வதியை லேசில்விடக்கூடாது. இவளைபற்றி எல்லோரிடமும் கலகக்காரி என்று சொல்ல வேண்டும். தர்மாம்பா, கமலம் இருவர்களிடமும் எல்லாம் சொல்லவேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். விசாலாக்ஷி மகளுடன் லீலாவிடம பேசிக் கொண்டிருந்தாள். இதற்குள் கமலம் உள்ளே நுழைந்தாள். பரிசாரகன் டிபனுடன் பின் தொடர்ந்தான.

விசாலம்:—மன்னீ! நீஙகள் இவ்வளவு நேரம் காரியம் பண்ணினீர்களாக்கும். பாவம்! முகமெல்லாம் வேர்க்கிறதே!

ராஜம்:—மன்னீ! நமக்கெல்லாம் எப்பொழுதும் காரியம்தான. சில பேரைப்போல் மனிககு என்ன கல்வளை கட்டத் தெரியுமா? கல் அட்டிகை கட்டத்தெரியுமா? என்னமோ பாவம், அவர் என்னைப்போல ஒரு அசடு.

கமலம்:—"கல்வளையாவது, அட்டிகையாவது? எனக்குச் சாப்பாட்டிற்கிருந்தால் போதாதா? எனக்கு சுகமென்பது இநத ஜன்மத்தில் உண்டோ? கொண்ட புருஷன் எப்படியிருக்கிறார்? அவருக்கு நானும் இந்தப் பெண்ணும் இல்லாவிட்டால் தேவலை நான் எங்கே போவது? எல்லாரையும்போல் புருஷன் என்னிடம் பணம் கொடுக்கிறாரா? ஏதோ ஆத்துக்கென்று கொஞ்சம் கொடுக்கிறார். நான் போதும் போதாது என்று சொல்லலாமா? அல்லது பாக்கிப் பணம் எங்கே என்று கேட்கலாமா? அது இருக்கட்டும். எல்லோரும் டிபன் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள். எல்லோரும் லீலாவை மாத்திரம் கூப்பிடாமல் டிபன் எடுத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். சாமிநாத சாஸ்திரி கூடத்தில் வருவதைக் கமலம் கண்டு "அம்மா, லீலா, வா! கொஞ்சம் ஏதாவது எடுத்துக் கொள். குழந்தைகளெங்கே? வெளியில் போயிருக்கிறார்களோ? ஞானம், மன்னி ஒருவரையும் காணோமே. எல்லோரும் வரட்டும். பிறகு நான் எடுத்துக் கொள்ளுகிறேன். லீலா, வா அம்மா! ஏதாவது எடுத்துக் கொள்" என்று இனிமையாய் உபசாரமாய் மொழிந்தாள்.

எல்லோரும் வடை, பொங்கல் இரண்டையும் வாயிலடைத்துக் கொண்டே அங்கு தற்சமயம் இலலாத ஞானம தர்மாம்பாள் இருவரையும் பற்றி அவதூறு சொல்லிக் கொண்டும், லீலா தஙகளுடன் பேச்சில கலக்காததால் அவளையும் பற்றி ஒருவருக்கொருவர் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு ஜாடையாய்ப் பரிகாசம் பண்ணிக் கொண்டும வயிற்றை நிரப்பிக்கொண்டார்கள்.

திருச்செந்தூர் கந்த ஷஷ்டி.

(சிறு கதை.)

சகோதரி வி. பாலம்மாள்

(காபிரைட்.)

"அடியம்மா! போதுமெனக்கு. என் ஜன்மம் மட்டும் புதுமையாகவிருக்கிறதன்றிப் பெண்ணாய்ப பிறந்தவர்கள் எலலாம இப்படியா இருக்கிறார்கள். கோவிலென்றும் குளமென்றும் போகவில்லையா? அடுப்பங்கரையைக் கட்டிக்கொண்டு ஆயுள் முடிய அழுதால் என்றைக்குததான நலலது பொலலாதைப் பார்க்கிறது?" என செல்லம்மாள் முணுமுணுத்தாள். "ஏன அமமா, உஙகளுக்கென்ன? காசிலலையா, பணததிற்குக் குறைவா? சிறு குழந்தைகளின உபத்திரவமா? இஷ்டமான விடத்திற்குச் சென்று வாலாமே" என்று சுந்தரி வினவினாள். "இந்தப் பிராமணன் இருக்கிறாரே. ஒரு காசு செலவழிபபதெனறால அததுடன உயிரை விட்டுவிடுவார். பணத்தைககொடுத்து டிக்கெட்டு வாங்கித்தானே ரயிலேறிப போகவேணடும். சிறு வயதில் குஞ்சு குழந்தைகளை எல்லாமிழுத்துக்கொண்டு எப்படிப்போகிறது என்று சாக்குச் சொன்னார். இபபோ தனக்குக் கண் மந்தமாய்விட்டது; ரயில் பிரயாணம முடியாதென்று சொலலுகிறார். இப்படியே என ஜனமம் கழிந்துவிட்

டது. நேற்று எதிர் வீட்டு யோகாம்பாள் கோவிலுக்கு வந்திருந்தாள். திருச்செந்தூரில் கந்தஷஷ்டி உற்சவம் மெத்தக் கண்காட்சியாயிருக்குமாம். புருஷனும் மனைவியுமாகத் திருச்செந்தூர் செல்லப்போகிறதாக அவள் சொன்னாள். 'உமக்கு வரமுடியாவிட்டாலும் நல்ல துணைபோகிறதே; நானாவது போய் வருகிறேன்' என்று ஆனவரை எங்காத்துக்காரருடன் மன்றாடினேன். கையில் ஒரு காசுகூட கிடையாதென்று ஒரே அடியாய் சாதித்து விட்டார். இக்காலத்துப் பெண்களைப்போல் புருஷன் கையைப் பாராமல் தனிக்காசும் கொத்துச் சாவியும் வைத்துக்கொள்ள எனக்குத் தெரியவில்லையே. என் பெயரால் பிறந்தவீட்டார் கொடுத்த மஞ்சக்காணியைக்கூட ஆத்துக்காரர் பேருக்கு மாற்றிவிட்டேன். மஞ்சள் குங்குமத்திற்கென்று என் உடன் பிறந்தான் கொடுக்கும் பணத்தையும் இந்தப் பிராமணனிடத்திலேதான் நான் கொடுத்து விடுவது வழக்கம். இப்பவும் காசு பணத்தில் எனக்கு அணுவளவும் ஆசை கிடையாது. வயது ஐம்பதாயிற்றே, நல்ல ஸ்தலங்கள் இரண்டொன்றையாவது பார்க்கவேண்டுமென்பதே என் ஆசை. திருச்செந்தூர் சென்றால் வழியில் ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், பழனி, மதுரை முதலிய இடங்களையும் தரிசித்து, தாமிரபரணியிலும் ஸ்நானம் செய்யலாமே என்று மனம் அடித்துக்கொள்ளுகிறது. கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்" என்று செல்லம்மாள் தன்னை நொந்துகொண்டாள்.

இவ்விருவரின் சம்பாஷணையை ஜன்னல் வழியே உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த நாராயணிக்கும் திருச்செந்தூர் ஷஷ்டி உற்சவத்தைக் கண்டு வரவேண்டுமென்ற விருப்பமுண்டாயிற்று. நாராயணியின் கணவன் சென்னை கலெக்டர் ஆபீசில் மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் குமஸ்தாவேலை பார்த்து வந்தார். வீடுநிறைய நான்கு குழந்தைகளும் மட்டச் சம்பளமும் இருந்தும் கிருஷ்ணன் வெகு உற்சாக புருஷராகவே விளங்கினார். இவர் நாள் தவறினும் நாடகம் செல்வதையும் சினிமா காண்பதையும் நிறுத்துவதில்லை. மோட்டார் காரில் மனைவி மக்களுடன் மாலை நேரத்தில் ஒய்யாரமாய் கடற்கரை யோரமாக உலாவச் செல்லவரும் தனவந்தர்களைக் காணும்போதெல்லாம் கிருஷ்ணன் தானும் இவ்வாறு மனைவி மக்களுடன் மாலை நேரத்தை உற்சாகமாகக் கழிக்கவேண்டுமென்று மட்டற்ற ஆசைகொள்ளுவார். சினிமா காக்ஷி சாலைகளில் அருகிலுட்கார்ந்திருக்கும் கணவனுக்கு மனைவி மந்தஹாஸத்துடன் வெற்றிலைமடித்துக் கொடுப்பதையும், ஸோடா வேண்டுமா, சாக்லெட் வேண்டுமாவென்று மனைவியை யுபசரிக்கும் ஆடவர்களையும் காணும்போது தாமும் ஏன் இவ்வாறு ஆனந்தமாகக் காலங்கழிக்கக்கூடாது என்று எண்ணுவார். ஆனால் இவருடைய குடும்ப நிலையானது இதற்கெல்லாம் இடங்கொடுக்கக் கூடிய புஷ்டி வாய்த்திருக்கவில்லை. இளம் வயதில் விதவையாகி, தனக்குக் கிடைத்த ஜீவனாம்ச முதலைச் செலவழித்துத் தம்பியைப் படிப்பித்து பி. ஏ. பாஸ் செய்வித்த தமக்கையின் மேற்பார்வையில் கிருஷ்ணன் குடும்பமிருந்து வந்தது. அதனால் நாராயணிக்கும் இவற்றில் எவ்வளவோ விருப்பமிருந்தும் அவள் மனம்போல் நடக்கமுடியவில்லை. இருப்பினும் எப்படியாவது கந்தஷஷ்டி உற்சவத்தைக் காணவேண்டுமென்று தீர்மானித்துத் தன் கணவன் ஆபீசிலிருந்து வந்ததும் இவ்விஷயத்தைக் கிருஷ்ணனிடம் பிரஸ்தாபித்தாள். இது கேட்ட கிருஷ்ணனுக்கு மனைவியின் விருப்பத்தை முடிக்கவேண்டுமென்று தோன்றியது. தன் தமக்கை பார்வதியிடம் இதைத் தெரிவித்தார். இது கேட்டதும் பார்வதிக்கு மெத்தக் கோபமுண்டாயிற்று. "நீ எங்கு இருக்கிறாய். திருச்செந்தூர் எங்கிருக்கிறது தெரியுமா! ஏவர மறியாக் குழந்தைகளை இழுத்துக்கொண்டு அவ்வளவு தூரம் சென்று வருவதென்றால் உன் அந்தஸ்திற்கு அது கட்டுப்படியாகுமா? புலியைப் பார்த்து நரி சூடிட்டுக் கொண்ட கதையாக உன் மனைவிக்கு ஊர் சுற்றி வரவேண்டுமென்ற ஆசையுண்டானால் அது நடக்குமோ? அவள் தோழி கமலத்தைப் போலவே அவளும் இருக்க நினைக்கிறாளே. கமலத்தின் புருஷனுக்கு மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் வருகிறது. அவளுக்குக் குஞ்சு குழந்தை என்ற கவலையுங் கிடையாது. புருஷனும் மனைவியுமாகப் பிள்ளை வரங்கேட்பதற்கு ஊர் ஊராகச் சுற்றுகிறார்கள். அவள் சொன்னாளென்று நீயும் என்னைக் கேட்கிறாயே. கையில் நூறு ரூபா யில்லாமல் உன்னால் போய்வர

முடியுமா? இன்னம் நான் இந்த ஜன்மமெடுத்தும் ஒரு சோமவார விரதம் கூட எடுக்காமல் காலங்கழிக்கிறேனே. உனக்கென்ன வந்தது கோவிலும் குளமும்" என்று தம்பியைக் கோபித்தாள். கிருஷ்ணன் மனைவிக்கும் தமக்கைக்கும் நடுவே பாக்கு வெட்டியிலகப்பட்ட பாக்கைப்போலத் திண்டாடினார். இவருக்கு மனைவியின் ஆசையும் நியாயமெனத் தோன்றிற்று. தமக்கை சொல்வதும் சரியென்றே மனதிற்குப்பட்டது. இரண்டும் நியாயமாகத் தோன்றுமேயானால் எந்தவழிதான் செல்வது? மனைவியின் ஆசையைப் பூர்த்தி செய்வதாயின் தமக்கையை மீறி நடக்கவேண்டும். தமக்கை சொற்படி நடப்பதாயின் மனைவியின் மனதை முறிக்கவேண்டும். இவ்வாறு நெடுந்தூரம் யோசித்துக் கலங்கிய கிருஷ்ணனுக்கு முடிவில் மனைவியின் விருப்பத்தை முடிப்பதே உசிதமென்ற எண்ணமுண்டாயிற்று. "எவ்வளவு நாட்களுக்குத்தான் அக்காளுக்கு பயப்படுகிறது? உங்களுக்கு வயதாக வில்லையா? என்னமோ ஜீவனாம்சப் பணத்தைக்கொண்டு தம்பிக்குப் படிப்புப் போட்டதால் ஆயுள் முடிய அதிகாரம்செய்துதீர்க்கவேண்டுமென்று உங்கள் அக்காள் கங்கணம் கட்டியிருக்கிறாள். அந்தப் பாழும் பணத்தால்தான் உங்களுக்குப் பெரிய உத்தியோக மாகாமலிருப்பதும் கூட. நானும் நான்கு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டேன். என்னால் இனியும் இவ்வாறு உங்கள் அக்காளுக்கு அடிவணங்கி நடக்கவே முடியாது. எனனவானாலும் சரி. இவ்வருஷம் திருச்செந்தூர் சென்று வரவேண்டியதுதான்" என்று மனைவி நாராயணி கம்பீரமாய்ப் பேசிமுடித்த சொற்கள் கிருஷ்ணன் மனதில் வேரூன்றின. தன்னைப் படிப்பித்ததற்காக தமக்கையின் அதிகாரத்திற்கே கீழ்ப்படிந்து நடக்கும்படித் தனது வாழ்நாள் முழுதையும் அர்ப்பணம் செய்ய இவர் மனமும் ஒப்பவில்லை. முடிவில் ஒருவாறாகத் தன் தமக்கையிடத்திலும் அனுமதி பெற்றுக்கொண்டார். ரயில் செலவை யுத்தேசித்துத் தனது நண்பனிடமிருந்து பாஸ் ஒன்று பெற்றுக்கொண்டார். அந்த பாஸில் கண்டபடி அப்பிரயாணத்திற்கு இவர் மனைவி நாராயணியை ஆடிடாபீஸில் உத்தியோகம் செய்யும் ராமய்யரின் சம்சாரமாக வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. கிருஷ்ணன் தனக்கு மட்டும் ஒரு டிக்கெட்டு பெற்றுக்கொண்டு மனைவி மக்களுடன் இரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் திருச்செந்தூருக்குப் புறப்பட்டார்.

சிறு குழந்தைகள் கூட வருவதால் கட்டுச்சோறு கையிலிருக்கட்டுமென்று தமக்கை சொல்வது கிருஷ்ணனுக்குப் பிடிக்கவில்லை. 'வழி நெடுகச் சாப்பாடு விடுதிகள் இருக்கும்; இக்காலத்தில் கர்நாடக சம்பிரதாயமாகக் கையில் கட்டுச்சோறு எடுத்துப் போவதேன்' என்று அவர் பரிகசித்தார். பெட்டியில் இரண்டாவது சேலை நல்லதா யில்லாவிடினும் ரயில் பிரயாணத்தில் தன்னை மதிக்கவேண்டுமென்ற அவாவினால் நாராயணி தனக்கு இருக்கும் ஓரே புதுச் சேலையாகிய காச்சி விலக் ரோஜாக் கலர் சேலையைக் கட்டிக்கொண்டிருந்தாள். கிருஷ்ணன் ஒரு டிரங்குப் பெட்டியை எடுத்து வந்திருந்தாராயினும் அதற்குள் கைக்குழந்தைக்கு உபயோகப்படக் கூடிய பழந்துணிகள்மட்டுமே இருந்தன. கிருஷ்ணன் அணிந்திருந்த அல்பாகா கோட்டும், கொள்ளேகால் உருமாலையும், கால் ஸ்லிப்பரும், சோட்டாத் தடியும், இரவல் வாங்கி வந்த ரிஸ்ட் வாச்சும், கம்பீரப் பேச்சும் கை வீச்சும், பாக்கெட்டிலிருக்கும் மணிபர்சும், சிகார் பெட்டியும் ஒரு நவ நாகரிக கனவானைப்போலவே இவர் காணப்பட்டார். ரயிலில் உட்கார்ந்ததும் ரயிலடியில் விளையாட்டு பொம்மை சாமான்கள் என்று பலர் விற்பதைக்கண்டு கிருஷ்ணன் குழந்தைகள் அவைகளை வாங்கித் தரும்படி அழத் தொடங்கின. பையில் அதிகப் பணமில்லாவிடினும் பக்கத்திலிருப்பவர் தன்னை மதிக்கும் நிமித்தம் கிருஷ்ணன் அவைகளை வாங்கினார். பெரிய பிள்ளைக்கு ஊது முக்கால் ரூபாய்; இரண்டாவது குழந்தை செல்லத்திற்கு ஸெலுலாயிடுபொம்மை ஒரு ரூபாய்; மூன்றாங்குழந்தை முகுந்தனுக்குப் பந்து அரை ரூபாய்; கடைக் குட்டி கல்யாணிக்கு ரப்பர் பொம்மை நாலணா; ஆக இரண்டரை ரூபாய் செலவிட்டார். "ஸார், ஒஸ்தி ஆரஞ்சு, நம்ப கிட்டே பேரம் கீரம் கிடையாது; டஜன் ஒண்ணே கால் ரூபா; மூர் மார்க்கட்டிலேயே சாக்கு இல்லெங்கோ" என்று பழக்காரன் வர்ணித்தான். ஆம், கொஞ்சம் பழங்கள் இருந்தால் சிலாக்கியந்தான் என்று கிருஷ்ணன் அது

னும் அரை டஜன் வாங்கிக்கொண்டார். இதற்கிடையே ரயிலும் புறப்பட்டு விட்டது. பழக்காரன் படுத்தும் அவசரத்தில் கிருஷ்ணன் அரையணா காசுக்கு பதிலாக ஒரு ரூபாயை அவனிடம் கொடுத்து விட்டார். பணத்தைக் கை விட்டுக் கொடுக்குமுன் ஒரு முறை யதை கவனித்திருக்கலாமானாலும் பிறர் தன்னை அற்ப புத்தியுள்ளவனென்று நினைத்து விட்டால் என்ன செய்கிறதென்ற முன் யோசனையால் கிருஷ்ணன் தான் கொடுப்பது அரையணாவா அல்லது ஒரு ரூபாயா வென்பதையும் உற்றுப் பார்க்கவில்லை. வண்டி செங்கல்பட்டு ஸ்டேஷன் வந்ததும் "உப்புமா, காபி" என்று ரயிலடியில் விற்பதைக் கண்டு கிருஷ்ணன் இரண்டு பொட்டலம் உப்பு மாவை வாங்கிக் குழந்தைகளிடம் கொடுத்தார். வேண்டாம் வேண்டாமென மறுத்தும் கேளாது பனிக்கு ஒரு கப் காப்பி வாங்கி யளித்தார். நாராயணிக்குக் குழந்தைகளைப் பெறத் தெரிந்திருந்ததன்றி வளர்க்கும் விதம் தெரியவே மாட்டாது. ஆகையால் குழந்தைகளுடன் பிரயாணம் செய்யுங்காலத்தில் நீர்த்த பாத்திரம் ஒன்று அல்லது கூஜாவாவது கையிலிருக்க வேண்டுமென்ற யோசனை இவளுக்குண்டாகவில்லை. உப்புமாவிலுள்ள பச்சை மிளகாயை மென்று விட்டு செல்லமும் முகுந்தனும் தண்ணீர் வேண்டுமென அழுகத் தொடங்கினர். இதைக்கண்டு பக்கத்து பெஞ்சில் உட்கார்ந்திருந்த பார்வதியம்மாள் தன்னிடமிருந்த தண்ணீர்க் கூஜாவை சற்று மறைவில் தள்ளி வைத்தாள். தாகமென்று அழுங் குழந்தைகளுக்குத் தண்ணீர் கொடுத்தால் டம்ளர் பத்துப்பட்டு விடுவதுடன் கூஜாத் தண்ணீரும் அப்போதே செலவழிந்து விட்டால் என்ன செய்கிறது! பார்வதியம்மாள் கணவனுடன் பிள்ளைவரம் கேட்பதற்காகப் பழனிக்குச் செல்பவளாயிற்றே-வீட்டில் காய்ச்சி எடுத்துக்கொண்ட வெந்நீர் தீர்த்தத்தை இப்போதே செலவழித்து விட்டால் பிறகு தனக்கு என்ன செய்வாள் பாவம். கிருஷ்ணன் குழந்தைகளுக்கு ஸோடா வாங்கிக்கொடுத்து தாக சாந்தி செய்வித்துவிட்டு ஒரு புறமாகப் படுக்கவைத்தார். கைக் குழந்தையழும் போதெல்லாம் நாராயணி தான் வைத்திருந்த வாழைப்பழத்தைக் கொடுத்துக் கொண்டிருந்ததால் பொழுது விடிவதற்குள் குழந்தைக்கு பேதியாகத்தொடங்கிற்று. குழந்தையை ஆசையுடனெடுத்துக் கொண்டிருந்த கிருஷ்ணனின் அல்பாகா கோட்டும் கொள்ளேகால் உருமாலையும் குழந்தைச்சேற்றுப் பட்டிருக்கும் வயிற்றுப்போக்கினால் அசுத்தமாய் விட்டன. அவைகளைக் கழற்றிச் சுருட்டி மூட்டை கட்டி வைத்துவிட நேரிட்டது. வீட்டில் தமக்கைக்குப் பயந்து வெளியிற் செல்லும் போதும் கக்கூஸிலுமாகப் புகைப்பிடித்துக் கொண்டிருந்த கிருஷ்ணனுக்கு ரயிலில் இத்தகைய நிர்பந்தமின்றி சர்வ சுதந்திர மேற்பட்டிருந்தமையால் வாயில் வைத்த சிகாரின்று கப்! கப்! என்று புகைமண்டலத்தைக் கக்கிக்கொண்டிருந்தார். இதனால் அவ்வண்டியிலுள்ள பெண்மக்கள் அடைந்த சிரமம் கொஞ்சமல்ல. நவ நாகரிகம் இந்தியரிடம் பரவி சிலரிடம் வேரூன்றியுமிருக்கவே அவர்களை யனுசரித்துப் பெண்களும் சில புதிய முறைகளைக் கொண்டு எப்படியேனும் தம் கணவனைச் சந்தோஷிக்கச் செய்யவேண்டுமென்று பிரயத்தனப்பட்டு வர நேரிட்டிருக்கிறது. ஆயினும் புகை பிடிப்பதாலுண்டாகும் துர்நாற்றத்தையும் வயிற்றுப்பிரட்டலையும் சகிக்க முடியாதவர்களாயிருந்து கொண்டிருப்பதால் கிருஷ்ணன் புகை பிடித்தல் அங்குள்ள பெண்களுக்கு மெத்த வேதனையையுண்டாக்கிற்று. ஆங்கிலேயனைப்போல தலை மயிரை வெட்டிவிட்டுக் கொள்ளவும் டை கட்டிக்கொள்ளவும் காலர் அணியவும் காற்சட்டை மாட்டிக்கொள்ளவும் கற்றுக்கொள்ளல் சுலபமாயிருக்கிறதன்றி பெண்களிடம் அவர்கள் மரியாதையாக நடந்துகொள்ளுவதைமட்டும் நம்மவரில் பலர் கவனிப்பதில்லையன்றோ. (ஸ்திரீகள் உத்தரவன்றி அவர்கள் ஒருபோதும் புகை குடிப்பதில்லை) இவ்வாறு இவ்வளவு வைபவத்துடன் இரவுப்பிரயாணம் முடிவடைந்தது. ரொட்டி, இட்லி, பிஸ்கெட், காபி இவைகளைத் தாராளமாகக் குழந்தைகளுக்கு வாங்கிக்கொடுக்கக் கிருஷ்ணன் பின் வாங்கவில்லை. திருச்சி ஜங்ஷன் வருவதற்குள் அனேகமாய் மணி பதினொன்று அடித்து விட்டது. நாராயணியைப்போலவே குழந்தைகளுடன் திருச்செந்தூர் செல்லும் மற்றொருத்தி காலை ஒன்பது மணிக்கே தான் கையிற் கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்றைக் குழந்தைகளுக்குப்போட்டுத் தானும் சாப்பிட்டு

விட்டு உட்கார்ந்திருந்தாள். இவளைக்கண்டு நாராயணி மெத்தக்கேவலமாக நினைத்ததுடன் "ஏனம்மா! பழஞ்சோற்றைக் குழந்தைகளுக்குப்போட்டால் உடம்புக்காகுமா? எங்காத்தில் இதெல்லாம் வழக்கமில்லை. எங்காத்துக்காரர் கோபிப்பார்; குழந்தைகள் விஷயத்தில் அவர் கணக்குப் பார்க்கவே மாட்டார். பாருங்கள்! ரயிலேறியதிலிருந்து இதுவரை 5, 6 ரூபாய் செலவழித்து விட்டார். திருச்சி ஜங்ஷனில் நல்ல கிளப்பு இருக்கிறதாம் அங்கேதான் நாங்களெல்லோரும் சாப்பிடப்போகிறோம். எங்காத்துக் குழந்தைகள் வெட்டினாலும் பழையது சாப்பிட மாட்டார்கள். மூன்று வேளையும் சுடச்சுடத்தான் சாப்பிடுவார்கள். எங்காத்தில் காலை இட்டிலிக்கு மட்டும் கிருஷ்ணையர் ஹோட்டலுக்கு மாதம் பனிரண்டு ரூபாய் கொடுக்கிறோம்" என்று நாராயணி பெருமை பேசிக்கொண்டாள். இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த சாலாக்ஷியின் கணவனுக்கு மாதம் முன்னூறு ரூபாய் சம்பளம். அவள் உடம்பில் ஆயிரக்கணக்கான நகை நட்டுக்கள் அணிந்து கொண்டிருந்தாள் சாலாக்ஷியின் கணவன் ஒரு சதாரண மனிதனைப் போலும் மெத்த அடக்கவணக்கத்துடனும் காணப்பட்டானன்றி கிருஷ்ணனிடம் நாராயணியிடமும் காணப்படும் வீண் ஜம்பமும் ராங்கியும் சிறிதும் காணப்படவில்லை "எங்காத்தில் இப்படி, எங்காத்துக்காரர் அப்படி" என்று நாராயணி முழக்குவது கண்டு 'உன் புருஷனுக்கு என்ன சம்பளம்' என்று சாலாக்ஷி நாராயணியைக்கேட்டாள். "அவருக்கு ஐம்பது ரூபாய்தான் சம்பளம், ஆனாலும் குழந்தைகளை அவர் வளர்ப்பதுபோல ஜமீந்தார் வீடுகளிலும் இராது. சம்பாதிப்பது குழந்தைகளுக்காகத்தானே என்று அவர் அடிக்கடி சொல்லுவார். பாருங்கள்! இன்னொருவரானால் குஞ்சுங் குழந்தையுமாக திருச்செந்தூர் சென்று வர 100-ரூபாய் ஆகிறதே என்று யோசிப்பார்களே. நான் ஒரு வார்த்தை சொன்னதுதான் தாமதம் உடனே புறப்பட்டு விட்டார்" என்றிவ்வாறு நாராயணி ஜம்பமாகப் பேசி முடிப்பதற்குள் திருச்சி வந்து விட்டது. கிருஷ்ணன் மனைவி மக்களுடன் [illegible]லுக்குச்சென்றும் ரயில்போய் விடுமோவென்ற [illegible] [illegible]னாலும் சாப்பாடு மெத்த சூட்டுடன் இருந்தாலும் சரிவர சாப்பிட முடியவில்லை. கைக்குழந்தை மடியைப்பிடித்துக்கொண்டு அழ நாராயணி உட்கார்ந்து சாப்பிடும் நிலைமை பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாக விருந்தது. சாப்பாட்டை ஒரு விதமாக முடித்துக்கொண்டு இவர்கள் ரயிலேறினார்கள். இதற்கிடையே மூட்டையாகச் சுருட்டி வைத்திருந்த அல்பாகா கோட்டும் கொள்ளேகால் உருமாலும் களவு போயிருந்தன. சரிவர சாப்பிடாததினால் குழந்தைகள் கண்ணில் கண்டதையெல்லாம் வாங்கிக்கொடு வென்று அழத்தலைப் பட்டன. பணப்பையில் இனி இருப்பது இருபத்தைந்து ரூபாய்கள் மட்டுமே. இதைக்கொண்டு சென்னைக்குத் திரும்பி வந்து சேரவேண்டும். இதனால் கிருஷ்ணன் இனி வீண்ஜம்பம் செய்ய முடியாதென்றுணர்ந்தார். கையிலுள்ள பணம் குறையவே குழந்தைகளிடமுள்ள அபிமானமும் குறையத்தலைப்பட்டது. 'வீண் கொஞ்சல் செய்யாதே' என்று குழந்தைகளை கிருஷ்ணன் அதட்டி அடிப்பது கண்டு நாராயணிக்குக் கோபமுண்டாயிற்று. குழந்தைகள் அப்படித்தான் அழும்; அடித்து என்ன செய்கிறது; நான் ஏன் புறப்பட்டேன்! என் புத்தியை செருப்பாலடிக்கவேண்டும். கடன்வாங்கியதும் வாங்கி இன்னும் ஐம்பது ரூபாய் அதிகமாய் வாங்கி வரக்கூடாதா?" என்று நாராயணி ஒரு அத்தியாயம் படித்துக்கண்ணீர் விடலானாள். இப்போதுதான் சாலாக்ஷிக்கு நாராயணியின் உண்மை நிலை தெரிந்தது. இக்குடும்பத்தின் நடவடிக்கைகள் அவ்வண்டியிலுள்ளவர்களுக்கு சினிமா வேடிக்கை போலக் கண்காட்சியாக விருந்து கொண்டிருந்தது. திருநெல்வேலி ஜங்ஷனில் கிருஷ்ணனுடைய நண்பர் ஒருவர் தென்பட்டமையால் இரவு திருநெல்வேலியில் தங்கி அதிகாலையில் திருச்செந்தூர் செல்லலாமென கிருஷ்ணன் தீர்மானித்தார்.

* * *

முனிசிபாலிடி என்பது ஜனங்களின் சுகாதாரத்தைக் கவனித்துவரும் ஸ்தாபனமாகும். இதையே ஜனநிர்வாக முறைக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. முனிசிபல் எலெக்ஷன் சமயத்தில் அபேக்ஷகர்கள் ஓடியாடுவதையும் பிரசங்க மாரி பொழிவதையும் உற்று நோக்கினால் 'ஒரு ஆளுக்கு ஒரு

'வோட்' என்றுதானே யிருக்கிறது, ஆள் ஒருவன் ஆனாலும் கை விரல்களைக் கணக்கிட்டுப் பத்து வோட் செய்வதென்று எனிநக்கக் கூடாது' என்று பேதை ஜனங்கள் நினைக்கின்றார்களன்றி தங்களுக்கு வெளிச்சம், காற்று, சுத்தம், குடிதண்ணீர் இவைகளைக் குறைவின்றி கவனிக்குங் கடமை யாருடைய தென்றுமட்டும் இவர்களுக்கு அணுவளவும் தெரிந்திருப்பதாக நினைக்கவிடமில்லை, தேர், திருவிழாக்களைப்போலவே தேர்தல்களையும் மதித்துச் சாதாரண ஜனங்கள் இவைகளில் கூடுபட உற்சாகங்கொள்ளுகிறார்கள். எவர் தேர்ந்தெடுக்கப்படினும் பொது நன்மைக்கு உழைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதை அபேக்ஷகர்களே மறந்து விடும்போது சொல்ல என்ன இருக்கிறது!

இச்சமயம் இவ்வுற்சவம் திருநெல்வேலியில் கொடியேறி யிருந்தது. இன்னாருக்கே வோட் செய்யுங்கள் என்று கொட்டைபோன்ற பெரிய எழுத்துக்களில் எழுதிய நோட்டீஸ்கள் பலபல நிறங்களில் ஊர் முழுதும் ஒட்டப்பட்டிருந்தன. ரயிலடிக்கு வந்திருந்த கிருஷ்ணன் நண்பரும் ஒரு அபேக்ஷகராவார். கிருஷ்ணன் நண்பருடனும் தனது மனைவி மக்களுடனும் ஜட்காவிலேறிக் கொக்கிரகுளத்திற்குப் புறப்பட்டார். ஸ்ரீமான் ரமணன் தான் ஒரு அபேக்ஷகராக இருப்பதைப்பற்றியும் எலக்ஷனில் ஜயிப்பதற்குச் செய்திருக்கும் முயற்சிகளைப்பற்றியும் கிருஷ்ணனிடம் வாசாமகோசரமாய் வர்ணித்துக்கொண்டு வந்தார். தாம்பிரபரணி நதிக் கரையில் வண்டி வரும்போது இரவு பத்து மணி நேரமாகையால் நான்குனேரியிலிருந்து பாரவண்டிகள் வரிசையாக எதிர்முகமாக வந்துகொண்டிருந்தன. கிருஷ்ணன் உட்கார்ந்திருந்த ஜட்காவை வண்டிக்காரன் ஒருபுறமாய் ஒதுக்கியதும் வண்டி ஆற்றங்கரையில் குடை சாய்ந்துவிட்டது. குய்யோமுறையோவென்று வண்டியிலிருந்தவர்கள் கூவியழுதார்கள். வாரறுந்து குதிரை தாம்பிரபரணியில் விழுந்து ஆழ்ந்து ஆழம் அதிகமா இழுப்பு அதிகமா வென்பதை ஆராய்ச்சி செய்யத் தொடங்கிற்று. எதிரில் கோர்ட்டுக் கட்டடங்கள் இருப்பினும் அவற்றிலுள்ள காவற்காரர்கள் தூங்கிவிட்டமையால் கிருஷ்ணனுக்கு உதவிசெய்ய ஒருவரும் வரவில்லை. கோர்ட்டுக்கள் எல்லாமிருக்குமிடமாயிற்றே. தாம்பிரபர்ணியோ வருஷமொருமுறை கரைகளை இடிக்கத் தலைப்பட்டிருக்கிறதே. வண்டிகளும் அதிகாரிகளும் விசேஷமாக நடமாடும் ரஸ்தாவில் ஆற்றங்கரைக்கு ஒரு கைப்பிடிச்சுவரும் இல்லையே. விளக்காவது பிரகாசமா யிருக்கக்கூடாதா என்று நாம் இவ்வாறெல்லாம் இச்சமயம் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்போமானால் கிருஷ்ணன் கதி என்னவாயிற்றென்பதுபற்றி வாசகர்கள் கவலைகொள்வார்களன்றோ? பாவம்! நாராயணிக்கு இடுப்பில் நல்ல அடி; கிருஷ்ணனுக்குத் தலையில் பெருத்த காயம்; மிஸ்டர் ரமணனுக்குக் கணுக்காலில் காயம். பெரிய குழந்தைக்குக் கழுத்து சுளுக்கிக்கொண்டது. பாரவண்டிக்காரர்கள் செய்த உதவியால் இவர்கள் ஒருவாறு உயிர் பிழைத்து வீடுசேர்ந்தார்கள். திருநெல்வேலியிலேயே இரண்டுநாள் தங்கியிருந்து உடம்பைச் சற்று ஆசுவாசப்படுத்திக்கொண்டு கிருஷ்ணன் குடும்பத்துடன் உயிர் பிழைத்தேனென்று சந்தோஷித்து சென்னைக்குத் திரும்பிவிட்டார், அன்றையிலிருந்து யாராவது கந்தசஷ்டி என்றால் நாராயணிக்குக் குடல் நடுங்கும். இனி எங்குஞ் செல்வதில்லை என்று அவள் தீர்மானித்து விட்டாள். வண்டி முரட்டுயாய் ஒதுங்கியது போலவும் மேடும் பள்ளமுமாக யிடுக்கிடங்கும் ரோட்டில் வண்டியுருண்டதுபோலவும் தலைகுப்புற எல்லாரும் விழுந்துவிட்டதுபோலவும் நாராயணி அடிக்கடிக் கனவுகண்டு நடுக்கிடுவாள். கணுக்கால் வலி தீர்ந்து உடம்பு சுகமடைந்ததும் மிஸ்டர் ரமணன் தமக்கு இம்முறைத் தேர்தலில் ஜயமுண்டானால் கோர்ட்டு வாயிலிலுள்ள ரஸ்தாவை மேடுபள்ளங்களின்றிச் சீர்திருத்தி, ஆற்றங்கரைப்பக்கம் கைப்பிடித் தண்டவாளங்கள் நட்டு, சற்றுப் பிரகாசமாயுள்ள விளக்குகளையும் போடச்செய்வதாய்த் தமது தேர்தல் அறிக்கையில் வெளியிட்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்டால் பிறகு பார்த்துக் கொள்[illegible] மென்பதே [illegible] தைரியம்.

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows :—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes :—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Nagercoil, writes under date 30—12—1925 as follows :—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா !

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். ஸி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் இடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

☞ எமது ஏஜண்டு:—வ. வி. அண்டு சன்ஸ், ஆவிச்சி செட்டியார் அவர்கள், காரைக்குடி.

பரிமள ஓடை ! நறுமண மேடை !! வாசனை வாடை !!!

இவை யாவும் ஒருங்கே அமைந்த

சுகந்தச் சோலை

எது ?

தங்கமெடல் பரிசுபெற்ற கும்பகோணம்

K. அப்துல் ரஹிமான் சாஹிப் & ஸன்ஸ்

பரிமளச்சாலையே. அங்கு என்ன கிடைக்கும் ?

1. காந்திகண்ட சந்தனாதியாம்	9. தேஷ்பாண்டே மெச்சிய கேசர் பவுடர்
2. அரவிந்தர் ஆண்ட அரைக்கீரைத் தைலம்	10. படேல் பார்த்த பஞ்சவர்ணக் கொப்பரை
3. தாஸர் போற்றிய சந்தன வில்லைகள்	11. பண்டித நேரு பரிமளப் பாக்கு
4. முகம்மதலி விரும்பும் பத்தி திருசுகள்	12. ஷௌகத் அலியின் சரிமணச் சுண்ணம்
5. அந்தணர் மாளவியா அகமகிழ் தசாங்கம்	13. பெஸண்டு புகழும் பில்லை திருசுகள்
6. லஜபதி களித்திடும் அம்பர் அரகஜா	14. கிச்சிலு கோரிய நற்குண குல்கந்து
7. சரோஜினி சாற்றிடு ஸ்நானப்பவுடர்	15. கெல்கார் விரும்பிய உயர்தரப் பற்பொடி
8 ஜவாஹிலால் புகழும் புனுகு ஜவ்வாது	16 காங்கிரஸே களித்த நறுமணக் கலவை

காங்கிரஸ் மகாசபையார் கண்டு களித்தது.

ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் ! கேட்லாக் இனாம் !! இன்றே எழுதுங்கள் !!!

K. Abdul Rahiman Sahib & Sons,

ATTAR MERCHANTS, **KUMBAKONAM.**

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற

பி. சுப்பராயின் அபூர்வ ஔஷதங்கள்.

1 லக்ஷ்மீ கோ கஸ்தூரி மாத்திரைகள்,—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த நோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால், எப்பேர்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன், வாயில் அநேக மணி நேரம் சுகந்த வாசனையைத்தரும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயிற்றிழிவு, வயற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால் ஜன்னி கிட்ட நாடாது. ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக் கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்து சாமான்களும், வாசனைத் திரவியங்களும் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. அறைக் குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வபதுக்கும், தேகத்துக்குத் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச் சாற்றில் கொடுக்க சுகமாகும். டப்பா 1க்கு விலை அணா 1, இந்தியாவில் 1 முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, வி. பி., தபால் சார்ஜ் அணா 6 பிரத்தியேகம்

☞ பி. சுப்பராய்,

ஆயுள்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3

வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை.

"தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

மெய்கண்ட மித்திரன்.

சுக்கிர வாரந்தோறும் வெளி வருவது

கிரவுன் பன்னிரண்டு பக்கம் கொண்டது.

தமிழருக்கு இன்றியமையாத பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம், ஒற்றுமை முதலிய சன்மார்க்கங்களை விளங்க உரைப்பது. நடுநிலைமை கோணாது நின்று நியாயம் வழங்கும் இயல்புடையது.

உள் நாட்டுச் சந்தா விகிதம் தென்னாப்பிரிக்காவுக்குத் தபாற் கூலி உள்பட வருஷ சந்தா

பவுன்	1	0	0
ஆறு மாதங்களுக்கு	0	11	6
மூன்று மாதங்களுக்கு	0	6	0
ஒரு மாதத்துக்கு	0	2	0

சந்தாவை முன்பணமாக அனுப்பவதே முறை.

வெளியூர் சந்தா விகிதம் ரோடிஷியா, சிலோன், இந்தியா, பர்மா முதலிய இடங்களுக்கு வருட சந்தா தபாற்கூலி உள்பட

பவுன்	1	2	0
ஆறு மாதங்களுக்கு	0	12	6
மூன்று மாதங்களுக்கு	0	7	0

தனிப்பிரதி 4 பென்ஸ்

ஆசிரியர்,

மெய்கண்ட மித்திரன்,

பி. ஒ. பாக்ஸ் 628, பிரிட்டோரியா.

SIDDHA KALPA MAKARADHWAJA

(REGISTERED)

THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD

FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES

ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).

Price Rs. 10. (Rs. TEN). V. P. Extra.

THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

44, Govindappa Naick St., G. T., Madras.

கைமேற்பலன்! அதை நீங்கள் கட்டாயம் அடையவேண்டும்

கீழே காட்டியுள் புத்தகங்களை வாசிப்பதனால் நீங்கள் கைமேற்பலனடைவீர்களென்பது நிச்சயம்!

		ரூ	அ.	பை
1	வியாசக் கொத்து — அநேக அரிய வியாசங்களைக் கொண்டது	2	0	0
2	அதிசயப் பொக்கிஷம் — ஒரு சாமானியமனிதன் கோடீச்வரனுன விந்தை	1	8	0
3	இன்னுரைக் களஞ்சியம் — 40 அருமையான விஷயங்களைக் கொண்டது	1	0	0
4	விஷயாஸமஞ்சரி — எழுபது விஷயங்களை விரிவா யுரைப்பது	1	0	0
5	திருவள்ளுவரும் அவரது உபதேசங்களும் — புதிய முறையில் வரையப்பட்டது	0	8	0

இன்னும் அநேக புதிய, அரிய, அறிவை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் எங்களிடம் உண்டு.

நவீன கதா புத்தகசாலை, 122, Montgomery St., இரங்கூன்.

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினுல் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO., BENARES CITY.

மஹானுல் கிடைத்த "அருமையான மூலிகை"

தமிழ்வைத்திய சங்கத்தில் தங்கமெடல் பெற்றவை.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிரமை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் காட்டப்பட்ட சகலவித வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், ஏவப்பு, ஏவல், விஷவியாதி, செய்வினை என சொல்லப்பட்ட பலவிதக் கஷ்டங்களும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும்.

☞ ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களைக் காணலாம்

புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும்.

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள். உலகப்பிரசித்திபெற்றவை எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர விபரமாக எழுதுங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு 1 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் சகலவித விபரமும் அனுபந்தமும் கிடைக்கும் ☞ எந்ததேச ஸ்டாம்பும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியவைகள் செய்தனுப்பக்கூடும்.

மானேஜர், பாலசுந்தரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா. தென் இந்தியா.

தேசபக்தன். ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும் கொழும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர். சந்தா விவரம்.

கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு ரூ. 9 0 0 ஷை ஷை 6-மாதம் ரூ. 5 0 0

பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1 க்கு ரூ. 13 0 0 பினங்கு, சிங்கபூர் முதலிய விடங்களுக்கு வருஷம் 1 க்கு ரூ. 16 0 0

தனிப்பிரதி 6 சதம்.

சந்தாத்தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக்குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

விலாசம்:—

மானேஜர், தேசபக்தன் ஆபீஸ், நெ. 43, செக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் சாத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அதிசயாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(இங்கிலாந்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.)

55-வது வயது வரையில் எல்லா நபர்களையும் இன்ஷியூர் செய்யப்படுகிறது.

ஸ்திரீகள் கூட இன்ஷியூர் செய்யப்படுகிறார்கள்.

எல்லா கேஸுகளிலும் பறிமுதல் செய்யப்படாது தானுகவே ஆதாவு கிடைக்கக்கூடியது. காலத்தில் ப்ரீமியம் கட்டாததற்காக பாலிஸிகள் காலாவதியாக விடப்படமாட்டா. ஆயுள்காலத்தில் அகஸ்மாத்தாகவோ அல்லது வியாதியினாலேயா அசக்தர்களாகி விட்டால் அவர்களுக்கு பாக்கியுள்ள காலத்திற்கு ப்ரீமியங்கள் வாங்கப்படமாட்டா. எந்த தேதி ஏற்பட்டதோ அதுவரையிற் சேர்ந்துள்ள இன்ஷியூர் செய்யப்பட்ட தொகை கொடுக்கப்படும்.

தொழில், வசிக்குமிடம், அல்லது பிரயாணம் ஆகியவற்றில் பூரணசுதந்திரம். குழந்தைகளுக்கான எண்டௌமெண்டும், மற்றுமுள்ள பிளான்களும் உண்டு. மாகாணமெங்கும் சாமர்த்தியமான ஏஜெண்டுகள் தேவை.

பிரகடனப் பத்திரத்திற்கு எழுதவும்.

R. வேங்கடாசாரி,

சீப் ஏஜண்டு, "ரிதர்டன் ஹவுஸ்," வேப்பேரி, மதராஸ்

தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A., விலை அணு 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், நாகபட்டணம், விலை அணு 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணு 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணு 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணு 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, **Part I-B, page 478, dated 3-6-24.**

9 சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணு 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், MA., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணு. 10.

தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியது.

10,000 ஜனங்களால் வாசித்து பிரபலமடைந்தது.

எமது லேடி டிரேட்மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்.

இப்புத்தகத்தில் சொல்லியபடி இல்லாவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஆங்கில ஆசான்.

60 நாளையில் இங்கிலீஷ் யாவரும் கற்றுக் கொள்ளலாம்.

இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக் கூடிய சுலபமான தமிழில் சுமார் 600 பக்கங் கொண்டபெரிய புத்தகம். 5-ம் பதிப்பு.

விலை ரூ. 2. தபாற் செலவு அணு 8.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை தெரு, மதராஸ்.

ஸ்திரீளுக்கு—மனோஹரமானது.
அலங்காரத்திற்கு—அவசியமானது.
கூந்தலுக்கு—இன்றியமையாதது.
ஸ்நானத்திற்கு—சுகமானது.

மணித்தைலம்.

தலைமயிரை உதிராமற் றடுப்பதன்றி, அவைகளை மிருதுவாயும், பளபளப்பாயும், கருப்பாயுமாக்கும். பால்யத்தில் முகத்திலுண்டாகும் வடுக்களையும், பருக்களையும், நிவர்த்திக்கும். உள்ளங்கைகளிலும்உள்ளங்கால்களிலும் தடவி தேய்த்தால் தேகசிரமம் மனோ ஆயாசம் நீங்கும். ஆயுர்வேதமுறைப்படி செய்யப்பட்டு சென்ற 45 வருடகாலமாக விற்பனையாகி வருகிறது

புட்டி 1-க்கு விலை ரூபா 1.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,
31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

விவேகபாநு.

தென்னாப்பிரிகாவில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் தமிழ் வாரப்பத்திரிகை. இதில் அரசியல், மதாசாரம் முதலிய விஷயங்களும் தென்னாப்பிரிகாவில் நடைபெறும் விஷயங்கள் முழுதும் வெளியிடப்படுகின்றன. தூரதேசத்திலிருக்கும் சகோதரர்களின் க்ஷேமலாபங்களை விவரமாகத் தெரிவித்துவரும் விவேகபாநுவை ஒவ்வொரு இந்தியரும் வரவழைத்துப் படித்தல் கடமையாகும். ஒருவருஷ சந்தா 15 ஷில்லிங். இந்தியா, சிலோன், மோரேஷஸ், பினாங்கு, சிங்கப்பூர், ரோடேசியா முதலிய இடங்களுக்கு 17 ஷில்லிங்.

விலாசம்:—

மானேஜர், விவேகபாநு,
86, க்வீன் ஸ்டிரீட், டர்பன், நெட்டால்

பொருளடக்கம்.

	பக்கம்.
சுபோத ராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்) ...	514
செந்தமிழ் நாட்டுச் சிறப்புக்கும்மி (ஸ்ரீமான் கா. கோவிந்தசாமி பண்டிதர்) ...	515
இந்தியப் பெண்களின் பெருமை (பத்திராதிபர்) ...	517
பெண்களுக்கு எத்தகைய கல்வி வேண்டும் (ஸ்ரீலாலா லஜபதிராய் அவர்கள் லாகோர் வைதிக கன்யா பாடசாலையின் வருடோற்சவக் கொண்டாட்டத்தில் பேசியது) ...	519
குழந்தை வளர்த்தல் (சம்பதப்யுதயம்) ...	520
அன்பிற்கு உயிர்ப்பரிசு (இனியதோர் சிறுகதை) (ஸ்ரீமதி உருக்குமணி அம்மாள்)	521
கல்விச் செல்வம் (ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபாலன்) ...	526
தார்ஜஹான் அல்லது பாத கண்டத்துச் சௌந்தரியக் கொடி (ஸ்ரீமதி பாகீரதியம்மாள்) ...	532

	பக்கம்.
நான் யார்? (ஸ்வாமி சந்தானந்தர்) ...	536
மார்க்கோபோலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்) ...	542
அதிர்ஷ்டம் (ஸ்ரீமதி பத்மாவதி.) ...	545
பர்வத குமாரி (ஸ்ரீமான் மகேச குமார சர்மா) ...	447
ஜானகி – ஒரு சிறு நாடகம் (ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்) ...	549
சிந்தாமணி பத்திராதிபருக்கு ஓர் வேண்டுகோள்	555
பாட்டியம்மாளின் சமூக ஊழியம் (ஸ்ரீமதி அன்னபூரணி அம்மாள்) ...	557
இன்ப ஊற்று (ஒரு தேசாபிமானி) ...	563
இரங்கோன் துறைமுகத்தில் கட்டாய அம்மை குத்தல் (ஸ்ரீமான் S. R. நாயுடு) ...	565
உறவினர் கூட்டம் (காவேரிக்கரையில் பிறந்தவள்)	566
திருச்செந்தூர் கந்தசஷ்டி (சகோதரி வி. பாலம்மாள்) ...	571

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,* M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz, the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

"சிந்தாமணி"

இரண்டாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபால் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 6 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் அதிகமாக உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6½; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்துக்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்கள் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

Some of the Subscribers to "Chinthamani."

Rao Bahadur P.R. Vengu Iyer Avl., M.B.E., Bangalore.
K. Seshadri Iyer Avl., B.A., Probationary Asst. Commissioner, Tumkur.
T.V.A. Iswaram Mudaliar Avl, Dy. Supdt. of Police, Tumkur.
A. Tholasinga Mudaliar Avl, Assistant Controller, Bangalore.
K.V. Subramania Iyer Avl., Dy. Asst. Controller, Military Accounts, Bangalore.
A.P. Naicker Avl., Dy. Asst. Controller of Military Accounts, C.P.
N.P. Subramania Iyer Avl., B.A., Bangalore.
D. Sundaram Iyengar Avl, Dy. Asst. Controller, Karachi.
A. Ponusami Mudaliar Avl., Rtd. District Forest Officer, Tumkur.
Rao Saheb C.S. Ratnasabapathi Mudaliar Avl., Dist. Board President, Coimbatore.
Rao Bahadur S. Velayudham Pillai Avl, Retd. Dy. Supdt. of Police, Tanjore.
R. Nagasundaram Iyer Avl., Retd. Dy. Collector, Adambakkam.
Rai Bahadur K.S. Ganapathi Iyer Avl., B.A., M.L, Govt. Pleader, Trichinopoly.
P.Y.R. Sastri Esq., B.E., C.E., Construction Engineer, Kyaukse.
V. Ramachandra Iyer Avl., B.A., B.L, Judge, Pudukottah.
V.S. Ramaswami Sastriar Avl., Sub-Judge, Tanjore.
P. Desikachariar Avl., B.A., B.E., Dt. Board Engineer, Tanjore.
Rao Sahib R.S. Sami Iyer Avl., B.A., Inspector of Salt, Tanjore.
C.V. Krishnaswami Iyer Avl., Dy. Secretary, Legislative Dept., Simla.
T.R. Sadasivam Avl., Asst. Director, Quetta.
M.S. Narayan Pillai Avl., Military Accounts Office, Simla.
K. Krishnamachariar Avl., Retd. Sub-Judge, Pallavaram, S.I.Ry.
Rangaswamy Iyengar Avl., Dt. Munsiff Arni.
V. Rangaswami Iyer Avl., Inspector of Police, Arni.
A. Chidambara Mudaliar Avl., Inspector of Police, Harur.
C. Rajalingam Chettiar Avl. Zamindar, Elampalli.
V. Ganesa Iyer Avl., B.A., B.E., Engineer, Bhadravathi.
G. Ramabhadra Iyer Avl., Tahsildar, Pattanantitla.
K.V. Anantharama Iyer Avl., Dy. Commissioner, Tumkur.
M.S. Ramaswami Iyer Avl., Professer, Krishnath College, Berhampore.
B.G. Rajagopala Mudaliar Avl., B.A., B. Sc., Industrial Engineer, Bangalore.
செ. ராம. பழ. நாராயணஞ் செட்டியார் அவர்கள், காரைக்குடி.
பெரி. வீர. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்கள், காரைக்குடி.
வெ. ராம. மு. ஸ்ரீனிவாசஞ் செட்டியாரவர்கள், அரியக்குடி.
M. S. M. லெட்சுமணஞ் செட்டியாரவர்கள், மாநகரி.
வயி. அரு. லெ. லெட்சுமணஞ் செட்டியாரவர்கள், அமராவதிபுதூர்.
K. K. M, வீரப்ப செட்டியாரவர்கள், அமராவதிபுதூர்.
சு. ராம. அரு. அருணாசலஞ் செட்டியாரவர்கள், காரைக்குடி.
மெ. மெ. கணேசஞ் செட்டியாரவர்கள், காரைக்குடி.
R. Subramania Iyer Avl., Special Dy. Collector, Madura.
V. S. Iyer Esq., Barrister, Magwe.
R. V. Krishnaswami Iyer Esq., B.A., Head-Master, Govt. Collegiate High School, Mysore.
U. Abbayambal Avl., M.A., Asst. Professor, H. H. The Maharani's College, Mysore.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,000—2-6-1926.